# பரிசேயரின் 50 தீய அடையாளங்கள்

சகரியா பூணன்

“தேவா! பரிசேயத்துவம் ஒழிந்து....
எம்மில் கிறிஸ்துவின் நற்கந்தம் மலரட்டும்!!”

* 2nd Edition (2016)

பரிசேயரின் 50 தீய அடையாளங்கள் (Fifty Marks of Pharisees) -2004

Copyright - ZAC POONEN

*இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்ப்பதற்காக இப்புத்தகம் பதிப்புரிமையைப் பெற்றுள்ளது. ஆசிரியரின் அனுமதியில்லாமல், இச்செய்திகள் மொழி பெயர்க்கப்படவோ அல்லது அச்சிடப்படவோ கூடாது.*

*ஆசிரியர் முகவரி:*
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

ஏரோதின் லௌகீகத்தின்
புளிப்பைவிட .....
சதுசேயரின் உபதேசப்
புளிப்பைவிட ....
மாய்மால பரிசேயரின்
புளிப்பே மகா கொடியது!
ஏனெனில், இயேசுவை
சிலுவையில் கொன்றது
இந்த பரிசேயர்களே ஆவர்!!

ஒன்றல்ல, இரண்டல்ல....
ஐம்பது பரிசேய தீயகுணங்களை
சுவிசேஷ புத்தகங்கள்
நமக்கு சுட்டிக்காட்டுகின்றன!
இவைகளில் 'ஒன்றேனும்'
நம்மைப் பற்றிக்கொண்டால்,
'முழுவதும்' புளித்துவிடுவோம்
என எச்சரித்தார் இயேசு!!

# பரிசேயரின் 50 தீய அடையாளங்கள்

## *முன்னுரை....*

*இயேசு தன்னுடைய சுவிசேஷங்களில், ஜனங்களை எச்சரிக்கையாய் இருக்கும்படி கூறிய மூன்று புளித்த மாவுகளைக் குறித்து வாசிக்கிறோம்.*

*1) ஏரோதின் புளித்தமாவு (மாற்கு 8:15)*

*2) சதுசேயர்களின் புளித்தமாவு (மத்தேயு 16:6)*

*3) பரிசேயர்களின் புளித்தமாவு (மத்தேயு 16:6)*

*இவைகள், மூன்று விதமான கிறிஸ்தவர்களையே குறிக்கிறது.*

*ஏரோதின் புளித்தமாவு* "**லௌகீகமே**" *ஆகும். யோவான்ஸ்நானகனின் யோசனைகளை ஏரோது விருப்பத்தோடே கேட்பதற்கு மகிழ்ச்சியாய் வந்தான் என மாற்கு 6:20-ல் வாசிக்கிறோம். அதே சமயத்தில், ஏரோதியாளின் குமாரத்தி சலோமியின் நடனத்தையும் மகிழ்ச்சியுடன் ரசித்தான்! ஒருவேளை, அவளுடைய ஆடையும் நடனமும் பாலியத்தை தூண்டுவதற்கு ஏதுவான கவர்ச்சியுள்ளதாய் இருந்திருக்கலாம். இதுபோன்ற கிறிஸ்தவர்கள் இன்றும் ஏராளம் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை காலையில் வல்லமையான பிரசங்கத்தைக் கேட்டு பரவசம் அடைந்திருப்பார்கள்.... அன்று அதே மதியவேளையில் அருவருப்பான சினிமாவையும் ரசித்து பரவசத்துடன் களித்திருப்பார்கள். இந்த யோவான்ஸ்நானகன், போரடிக்கும் பரிசேயர்களைப் போல் இல்லாமல்* "**அனல் பறக்கும் பிரசங்கியாய் இருந்தபடியால்**" *அவருடைய பிரசங்கத்தை ஏரோது சந்தோஷத்துடன் கேட்டு ரசித்தான். ஆனால் "அனல் பறக்கும் ஒரு தீர்க்கதரிசியை" மகிழ்ச்சியுடன் கவனித்து ட்டேதால், அந்த நபர் ஆவிக்குரிய மனதுடையவர் என நாம் கூறிட இயலாது. பொதுவாக, உலகப்பிரகரமான கிறிஸ்தவர்கள் இந்தப் பரிசேயர்களைப் போல் மாய்மாலங்கள் செய்வதில்லை. உலக களியாட்டுகளை இவர்கள் ரசித்தாலும், அவ்வாறு ரசித்து மகிழ்ந்ததை அவர்கள் மறைப்பதில்லை!*

*சதுசேயர்களின் புளித்தமாவு என்பது* "**பொய் உபதேசமே**" *ஆகும்.*

*இவர்கள், தங்கள் மனம் போனபடியெல்லாம் விசுவாசிக்க கூடியவர்கள். 'தூதர்களை' இவர்கள் விசுவாசிப்பதில்லை! அற்புதங்களையும் இவர்கள் விசுவாசிப்பதில்லை! உயிர்த்தெழுதலையும் இவர்கள் விசுவாசிப்பதில்லை! 'ஆவி உலகத்தை' இவர்கள் விசுவாசிப்பதில்லை! "அமரிக்கையான பண்பாளர்கள்" என இன்று நாம் காணும் கிறிஸ்தவர் களை இந்த சதுசேயர்களுக்கு ஒப்பிடலாம்.* **'இன்றும் தேவன் அற்புதங்கள் செய்கிறார்'** *என்பதை இவர்கள் விசுவாசிப்பதில்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்தாவியின் வரங்கள் இன்றும் கிறிஸ்தவர்களுக்கு அருளப்படுகிறது என்பதை இவர்கள் விசுவாசிப்பதில்லை!*

*பரிசேயர்களின் புளித்தமாவு என்பது, பிரதானமாய்* "**மாய்மாலமே**" *ஆகும்! இவர்கள் "உபதேச அடிப்படையாளர்களாய்" இருந்து கொண்டு, தங்கள் 'வெளிப்புற ஜீவியத்தில்' நீதியுள்ளவர்களாய் நடந்து கொண்டார்கள். இந்த இரண்டு பகுதிகளைக் குறிப்பிட்டு, இயேசுவே அவர்களுக்கு மத்தேயு 23:3,25 வசனங்களில் "சான்றிதழ்" கொடுத்திருக் கிறார். இவர்கள் ஒழுங்காக தசமபாகம் கொடுத்தார்கள்! ஜெபித்தார்கள்! உபதேசித்தார்கள்! இவ்வாறு, வெளிப்புறமான நியாயப்பிரமாண கட்டளைகளை கைக்கொண்டார்கள்! ஏன், மிஷனரி பணிகளைக் கூட செய்தார்கள். இன்றும், இந்த பரிசேயர்களைப் போலவே வெளிப் புறமான எல்லாவற்றையும் செய்துவிட்டு "பரிசேயர்களாகவே" இருக்கும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்!!*

*இன்னும் சில கிறிஸ்தவர்கள், மேற்கண்ட மூன்று புளித்த மாவுகளையும் சேர்த்து, கலந்து வைத்தவர்களாய் இருக்கிறார்கள்.*

*மேற்கண்ட வியாக்கியானங்களை நீங்கள் காணும்போது, இயேசு கிறிஸ்துவுக்கு, ஏரோதைப் பின்பற்றுகிறவர்களோ அல்லது சதுசேயர் களைப் பின்பற்றுகிறவர்களோ பெரிய முரணாய் இருந்திருப்பார்கள் என நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால், அது உண்மையல்ல! "பரிசுத் தத்தை பிரசங்கித்த" மூல அடிப்படையாளரான பரிசேயர்களே அவருக்கு மிகப்பெரிய முரணாய் இருந்தார்கள்!* **எல்லா ஜனங்களைக் காட்டிலும், பரிசேயர்களே "இயேசுவை சிலுவையில் அறைய" துடிப்புள்ள தீர்மானம் கொண்டிருந்தார்கள்.**

*இன்றும், கிறிஸ்தவ உலகில், சதுசேயர்களும் ஏரோதியர்களும் "பரிசேயர்களைப் போல்" அதிக அபாயம் கொண்டவர்கள் அல்ல. ஒரு ஏரோதியன் நரகத்திற்கு போவான்! ஆனால் மற்றவர்களை அவன் வழிதப்பி நடத்த இயலாது. ஏனெனில், அவன் ஓர் உலக மனுஷன் என்பதை ஒவ்வொருவரும் பகிரங்கமாய் அறிந்திருக்கிறார்கள். தங்கள் மனம்போல் விசுவாசிக்கும் சதுசேயர்களை ஆவிக்குள்ளவர்களாய் எண்ணி ஒருவரும் வஞ்சிக்கப்பட மாட்டார்கள்! அவர்கள் அற்புதங் களை விசுவாசிக்காததாலோ, மரித்தோரிலிருந்து உயிர்தெழுதலை*

விசுவாசிக்காததாலோ.... அது ஒன்றும் பிறரை எளிதில் பாதிப்பதில்லை.

அன்று இயேசுவின் நாட்களிலிருந்த அபாயத்திற்குரிய நபர் பரிசேயராய் இருந்தது போலவே, இன்றைய கிறிஸ்தவ உலகிலும் அவர்களே அபாயத்திற்குரியவர்கள்! இவர்களின் எல்லா உபதேசங்களும் சரியாய் இருக்கிறது! "பரிசுத்தத்தை" இவர்களும் பிரசங்கிக்கிறார்கள்! ஆகிலும் 'இவர்களின் பரிசுத்தமோ' சட்ட திட்டங்களினால் உருவான "**ஓர் பிரமாணத்துவ பரிசுத்தமே**" ஆகும். இவர்களின் நீதியில் "பரிசுத்தாவியினால் உண்டாகும் சந்தோஷமும் சமாதானமும்" (ரோமர் 14:17) காணப்படுவதில்லை. இதுபோன்ற ஒருவனே அபாயம் நிறைந்த வனாய் இருக்கிறான். ஏனெனில், எண்ணற்ற கிறிஸ்தவர்களை "ஓர் போலியான பரிசுத்தத்திற்குள்" இவன் நடத்திவிட முடியும்.

ஆகவேதான், பரிசேயர்களுடைய குணாதிசயங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஏரோதைப் பின்பற்றுகிறவர்கள் அல்லது சதுசேயர்களைப் பின்பற்றுகிறவர்களின் குணாதிசயங்கள், நாம் ஏற்கனவே குறிப்பிட்ட 'ஒரு சில' தவிர வேறு எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், பரிசேயர்களைக் குறித்து வரும்போது, அவர்களைக் குறித்து சுவிசேஷங்களில் அதிகமாகவே எழுதப்பட்டிருக்கிறது! எனவேதான், அவர்களின் குணாதிசயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ள தேவன் விரும்புகிறார் என நாம் கூறலாம்.

**மூலஅஸ்திபாரங்களைக் கொண்ட எல்லா விசுவாசிகளும், பரிசுத்தத்தைப் பின் தொடர்ந்து வருபவர்களும் "தாங்களே அறியாமல்" பரிசேயர்களாய் மாறிவிடும் அபாயத்தில் இருக்கிறார்கள்!**

இவ்வகை கூட்டத்திற்குள் எண்ணற்றோர் வீழ்ச்சியடைகிறபடியால், இதைக் குறித்த படிப்பினையை ஓர் ஆழமான தாழ்மையுடன் நாம் அணுகுவது நல்லது!

சுவிசேஷங்களில், பரிசேயர்களைக் குறித்து குறைந்த பட்சம் **ஐம்பது குணாதிசயங்கள்** இருப்பதை நான் கண்டறிந்திருக்கிறேன். இவைகளில் 'ஒரு குணாதிசயம்' நமக்குரியதாய் இருந்து..... மற்ற 49-குணாதிசயங்கள் நமக்கிராவிட்டாலும் "நாமும் பரிசேயர்கள்தான்" என அறியக்கடவோம். மேலும், இந்த 50-குணாதிசயங்கள் ஓர் தொகுப்பான பட்டியல் அல்ல. உங்கள் சொந்த ஜீவியத்தை நீங்கள் உற்றுநோக்கினால், வேதாகமத்தில் குறிப்பிடப்படாத வேறுசில குணாதிசயங்களைக் கூட உங்கள் ஜீவியத்தில் இருப்பதை நீங்கள் கண்டுபிடிக்க முடியும்!

பரிசேயத்துவ ஆவியானது கிறிஸ்துவின் ஆவிக்கு நேருக்குநேர் விரோதமானதாகும்! ஆகவேதான் இந்த பரிசேயத்துவம் அத்தனை அபாயத்திற்கு உரியதாய் இருக்கிறது. **'பாதாளத்தின் ஆவி'** ஓர் அணுவாகிலும் நம்மிடத்தில் இருப்பதை நாம் விரும்பாததைப் போலவே, **'பரிசேய ஆவியின்'** ஓர் அணுவாகிலும் நம்மிடம் இருந்திட

*நாம் விரும்பிடக் கூடாது.*

*தேவனுடைய ஆசீர்வாதத்திற்குரிய ஓர் பிரதான அடையாளம் யாதெனில், நம்மைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் வெளிச்சம் தருவதே ஆகும். இவ்வாறு நம் ஜீவியத்திலுள்ள "கிறிஸ்தவைபோல் அல்லாத பகுதிகளில்" நாம் தொடர்ச்சியாய் வெளிச்சம் பெறவில்லையெனில் நாம் மெய்யாகவே தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அல்ல! சுகமும் சம்பாத்தியமும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் அடையாளங்கள் அல்ல!! ஏனெனில், ஏராளமான அவிசுவாசிகளிடத்தில் இவை இரண் டும் இருக்கிறது...... அநேக விசுவாசிகளிடம் இருப்பதைக் காட்டிலும் 'அதிகமாகவே' இருக்கிறது.*

*நம் ஜீவியத்திலுள்ள "***கிறிஸ்தவைப்போல் அல்லாத பகுதிகளை***" தேவன் நமக்கு காட்டும்போது, அவைளிலிருந்து நம்மை கழுவிக் கொண்டு (2கொரி 7:1) அதன் மூலம் அவருடைய திவ்ய சுபாவத்தில் நாமும் பங்குள்ளவர்களாய் மாறவே விரும்புகிறார்!*

*இவ்வாறாகவே நம் தனிப்பட்ட ஜீவியம், குடும்ப ஜீவியம் மற்றும் சபை ஜீவியம் அதிக அதிகமான பிரகாசத்தை அடைந்திட முடியும். அப்போது நாம் பிரமாணத்துவ கட்டுகளிலிருந்து விடுதலையாகி..... "அந்த விடுதலைக்குப் பிறகுதான்" கழுகுகளைப்போல் உன்னதத்தின் உயரத்திற்கு பறந்திட முடியும். இதற்கு மாறாக, "***நமக்குள் இருக்கும் பரிசேயத்துவத்தை***" நாம் காணத் தவறிவிட்டால், இந்த மண்ணோடு விலங்கு சங்கிலியால் கட்டப்பட்டவர்களாகவே சிக்கி வாழ்ந்திடுவோம்!*

*தேவன் தம்முடைய வார்த்தையை நமக்குத் தந்திருக்கும் நோக்கமெல்லாம் "நமக்குள் இருப்பதை வெளிச்சத்தில் நாம் காண வேண்டும்!" என்பதேயல்லாமல், மற்றவர்களுக்குள் இருக்கும் பரிசேயத்துவத்தை காண்பதற்கு அல்ல!! இவ்வாறு நமக்குள் இருக்கும் கேடான பரிசேயத் துவத்தை நாம் கண்டு, அவைகளிலிருந்து நம்மை கழுவிக் கொண்டால் மாத்திரமே, தேவனுடைய பணியில் நாம் அவருக்கு பிரையோஜன முள்ளவர்களாய் இருந்திட முடியும்!!*

# குணாதிசயம் -1

**பரிசேயர்கள் தேவமனிதர்களோடு தாங்கள் கொண்ட தொடர்பில் மேன்மை பாராட்டுவார்கள்:**

*"ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள். தேவன் இந்தக் கல்லுகளினாலே அபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" ( மத் 3:19).*

*இந்த பரிசேயன், தன் அளவில் பக்திமான் அல்ல! ஆகவே, பக்தி யுள்ள சகோதரன் என பெயர் பெற்ற "சகோதரன்-X" உடன் ஐக்கியத்தை தேடி, அந்த தொடர்பில் தானும் தேவ பக்தி கொண்டவன் என உரிமை பாரட்ட முயற்சிக்கிறான். இன்றும் அநேக மாம்சீக கிறிஸ்தவர்கள், பக்தியுள்ள ஒரு நபரால் நடத்தப்படும் சபையில், தாங்களும் அங்கத் தினர்கள் என கூறிக்கொள்வதில் வீண் பூரிப்படைகிறார்கள்! இவர் களின் சொந்த வாழ்க்கையின் பரிசுத்தத்தில் "பூஜ்யமாய்" இருந்து கொண்டு.... வெறும் இந்த பூரிப்பில் காலத்தைக் கடத்துகிறார்கள். பரிசுத்தவான்களோடு புழங்கும் இந்த பரிசேயர்கள், தாங்களும் பரிசுத்தவான்கள் என்ற கற்பனையில் மிதக்கின்றனர்!*

*உங்கள் ஜீவியத்தில் மனந்திரும்பாத பாவம் இருந்தால், அல்லது யாரோ ஒருவரிடம் மனக்கசப்பு வைத்திருந்தால், நீங்கள் ஓர் சிறந்த சபையில் இருந்துகொண்டே, முடிவில் நரகம் செல்லுவீர்கள்! ஒரு நல்ல சபையில் உங்களை இணைத்துக்கொண்டபடியால் "உங்களின் எல்லா புறங்கூறுதலையும்" "உங்களின் எல்லா தீமை வார்த்தைகளை யும்" தேவன் கண்டும் காணமால் அவைகளை விட்டுவிடுவார் என நீங்கள் கற்பனையில் மிதந்தால், நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொண்டீர்கள்! நியாயத்தீர்ப்பின் நாளில் ஓர் மிகப்பெரிய ஆச்சரியம் உங்களுக்கு காத்திருக்கிறது. என்றோ ஒருநாள் நீங்கள் இரட்சிக்கப் பட்டது உண்மையாய் இருக்கலாம்! ஆனால் இன்றோ இரட்சிப்பை நீங்கள் இழந்திருக்கக் கூடும்! ஆகவே, தேவ பக்தியுள்ள ஜனங்களோடு தொடர்பு வைத்துக் கொண்டதில் ஒருபோதும் மேன்மை பாரட்டாதிருங்கள்!!*

## குணாதிசயம் -2

**பரிசேயர்கள் வெளிப்புற நீதியில் மேன்மை பாராட்டுவார்கள்:**

*“வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என இயேசு கூறினார் (மத் 5:20).*

இந்த வசனத்தில் இயேசு எதை பொருள்படுத்தினார்? பரிசேயர்கள் செய்ததைக் காட்டிலும் அதிக உபவாசமா? அதிக ஜெபமா? அதிக தசமபாகமா?

இங்கு இயேசு அளவைப்பற்றி எதையும் கூறாமல் “**தரத்தைக் குறித்தே**” குறிப்பிட்டு கூறினார். நாம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் நமது நீதியின் தரமானது பரிசேயர் களின் நீதியின் தரத்தைவிட அதிகமாய் இருக்க வேண்டும். இதைக் குறித்த விளக்கத்தையே இந்த அதிகாரத்தில் உள்ள அடுத்த வசனங்களில் குறிப்பிட்டார். பரிசேயர்களின் நீதி “**வெளிப்புறத்திற்கு**” உரியது மாத்திரமே ஆகும். இவர்கள் தேவனுடைய பிராமணங்களுக்கு வெளிப்புறமான தங்கள் கீழ்படிதலில் மேன்மை பாரட்டினார்கள். ஆனால் இயேசு கூரும்போது, தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் “**உள்ளான நீதியே**” என்றார். அதாவது, வெளியே கொலை செய்யாமல் இருப்பது மாத் திரமல்ல, இருதயத்தின் உள்ளேயும் கோபம் அடைந்திடாமல் , இருக்க வேண்டும். அதேபோல, வெளியே விபச்சாரம் செய்யாமல் இருப்பது மாத்திரமல்ல, இருதயத்தின் உள்ளேயும் ஸ்திரீயை இச்சித்திடக் கூடாது!

இவ்வாறாக ‘கோபத்தையும்’ ‘பாலிய இச்சையையும்’ மிகக் கொடியதென கூறி, இந்த பாவங்கள் ஒருவனை நரகத்திற்கு இழுத்துச் சென்றிடும் என இயேசு கூறினார் (மத் 5:22,29,30). இன்றைய ஏராளமான கிறிஸ்தவர்கள் பரிசேயர்களாகவே இருப்பதால், இந்த உள்ளான பாவங் களைக் கொடிதான ஒன்றாய் எடுத்துக்கொள்ளவே இல்லை. இவர்கள், மனுஷர்களுக்கு முன்பான, தங்கள் வெளிப்புறமான சாட்சியை மாத்திரமே மேன்மை பாரட்டுகிறார்கள் இன்னும் இதுபோன்ற அநேக பகுதிகளில், உங்கள் நீதியானது வெளிப்புறமானதாக மாத்திரம் இருக்க கூடும். ஆம் “மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தை பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்!” (சாமுவேல் 16:7). மற்ற விசுவாசிகள், உங்கள் ஆவிக்குரிய தன்மையைக் குறித்து என்ன எண்ணு கிறார்கள்? என்பதெல்லாம் தேவனுக்கு முன்பாக யாதொரு மதிப்பும் இல்லை. தேவனோ உங்கள் சிந்தையையும், உங்களின் உள்நோக்கத்தை யும் உள்ளான மனப்பான்மையையுமே காண்கிறார். உங்கள் இருதயத் தில் அசுத்தம் இருக்கும்போது, மனுஷருக்கு முன்பான உங்கள் கனத்தை மேன்மை பாரட்டாதிருங்கள்

# குணாதிசயம் -3

**பரிசேயர்கள் பாவிகளாகிய ஜனங்களிடத்தில் கலந்திருப்பதில்லை:**

*பரிசேயர்கள், சீஷர்களை நோக்கி உங்கள் போதகர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள் (மத். 9:11).*

பரிசேயர்கள் தங்கள் சொந்த குழுவாகிய "பரிசுத்தமான" பரிசேயர் களோடு மாத்திரமே சேர்ந்திருப்பார்கள். பாவிகளோடு இயேசு கலந்திருப்பதைக்கூட இந்த பரிசேயர்கள் குற்றம் சாட்டினார்கள். மனந்திரும்பாத உங்கள் உறவினர்களோடு நீங்கள் கலந்து கொள்வதை "**உங்களின் பரிசுத்தம்**" தடைசெய்கிறதா? தேவனுடைய ஜனங்களோடு மாத்திரமே நமக்கு ஐக்கியம் உண்டு என்பது உண்மைதான்! ஆனால் நாமோ, எல்லோரிடமும் நட்புள்ளவர்களாய் இருக்க முடியும். "பாவி களின் சிநேகிதன்" என்றே இயேசு அறியப்பட்டிருந்தார்!

மனந்திரும்பாத தன்னுடைய உறவினரின் திருமண வரவேற்வு நிகழ்ச்சியில் ஒரு பரிசேயன் கலந்துகொள்ள மாட்டான். ஏனென்றால், அவ்வாறு கலந்துகொள்வதால், தன் பரிசுத்தத்திற்கு மாசு ஏற்பட்டு விடும் என இவன் எண்ணுகிறான். ஆனால் இயேசுவோ, மனந்திரும்பாத தன் உறவினரின் திருமண வரவேற்பிற்கு மகிழ்ச்சியுடன் சென்றிருப்பார்! பாவிகளின் வீடுகளுக்கு அவர் சென்றபோது, அங்கே நடனமும் மது அருந்துவதும் இருந்திருக்கக்கூடும். அவரோ, தன் பங்காக அந்த பாவிகளிடம் சுவிசேஷத்தை பேசியிருப்பார்! இவ்வாறு பாவிகளாகிய ஜனங்களோடு அவர் வைத்திருந்த தொடர்பு எவ்விதத்திலும் அவரை மாசுபடுத்தவில்லை..... ஏனெனில் அவருடைய நீதியானது உள்ளான தொன்றாய் இருந்தது. தன்னுடைய சீஷர்களோடுதான் இயேசு அதிகமான நேரத்தை செலவழித்தார் என்பது உண்மை. ஆனால் பாவிகளாகிய ஜனங்களிடமும், இயேசு நேரம் செலவழித்து சம்பாஷித் திருக்கிறார். நாம் பாவிகளோடு சிநேகிதர்களாய் இல்லையென்றால், எங்ஙனம் அவர்களை ஆண்டவருக்கென ஆதாயம் செய்திட முடியும்?

ஒரு நல்ல கேள்வியை, உங்களையே பார்த்து கேட்டுப் பாருங்கள்: உங்கள் சபையில் எத்தனை ஜனங்கள் உங்கள் மூலமாய் ஆண்டவரிடத் தில் கொண்டு வரப்பட்டார்கள்? உங்கள் சபையில் 20-வருடங்களாய் நீங்கள் இருந்த போதிலும், ஒரு நபரைக்கூட கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வரதவர்களாய் நீங்கள் இருக்கக்கூடும்! அநேக வருடங்களாகி யும், ஒரு நபரைக்கூட கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவராத மூப்பர் களும் உண்டு. ஏன்? இவர்களின் பரிசேயத்துவ அணுகுமுறையே அதற்கு காரணம்! உங்களின் பரிசேயத்துவத்தை, **நேர்மையாய் ஒத்துக் கொண்டு** உணர்வடைந்தால், நீங்களும் மற்றவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருகிறவராய் தேவன் பயன்படுத்த முடியும்!

# குணாதிசயம் - 4

**பரிசேயர்கள், துறவறத்திற்கொப்பான தபசிகள்:**

*"பரிசேயர்களாகிய நாங்கள் உபவாசிக்கிறோமே, உம்முடைய சீஷர்கள் உபவாசியாமல் இருக்கிறதென்ன?" (மத் 9:16).*

*ஜனங்களை உபவாசிக்கும்படியும் ஜெபிக்கும்படியும் பரிசேயர் கள் கட்டாயப்படுத்தினார்கள்.* **உபவாசம் போன்ற சரீர முயற்சிக்குரிய கட்டுப்பாட்டை** *"ஆவிக்குரியவர்களாய் மாறுவதற்குரிய ஏதுகரமாய்" வலியுறுத்தி, அதில் அவர்கள் மேன்மை பாராட்டினார்கள். இந்த பரிசேயர்களைக் காட்டிலும் இயேசு அதிகமாகவே உபவாசித்தார்! ஆனால், தான் பரிசுத்தமாவதற்காக இயேசு உபவாசிக்கவில்லை, பரிசுத்தராய் இருந்த படியால் அவர் உபவாசித்தார். இருப்பினும், இந்த பரிசேயரைப் போல் தன் உபவாசத்தை மேன்மை பாராட்டவில்லை. ஜனங்களை உபவாசித் திட அவர் ஒருபோதும் கட்டாயப்படுத்தவில்லை. அன்று பூமியில் இருந்தபோதும் அவர் அப்படிச் செய்யவில்லை! இன்றும் அப்படிச் செய்வதில்லை!" தானாக விரும்பி.... அது முழுமனதாக இருந்தால் மாத்திரமே, தேவனுக்கு முன்பாக அந்த உபவாசத்தில் மதிப்பிருக்கிறது.... அப்படியில்லையென்றால், அது ஒரு செத்த கிரியை ஆகிவிடும்!*

*இன்று எல்லா மதங்களிலும்கூட, இந்த உபவாசத்தைப்போல்..... ஏதாகிலும் ஒருவகையில் துறவறத்திற்குரிய பிராயசங்கள் எடுக்கிறார் கள். இவர்களில் ஒரு சிலர் தங்கள் மனைவிகளோடு கொண்ட "தாம்பத்திய உறவைக்கூட" தாங்கள் பரிசுத்தமாக வேண்டுமென தவிர்த்து விடுகிறார்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தமாய் இருப்பதற்கு இவை யாதொன்றும் செம்மையான வழி அல்ல! ஒரு பூரண குணமுள்ள புருஷனுக்குரிய அடையாளமானது, அவன் உணவு மற்றும் பாலிய உணர்வில் கொண்ட கட்டுப்பாட்டில் இல்லை! மாறாக, அவன் தன்னுடைய* **நாவை அடக்குவதை** *வைத்தே உள்ளது என யாக்கோபு கூறினார் (யாக்கோபு: 13:2). அதைப் போலவே, நம்முடைய* **சிந்தைகளையும் நமது கண்களையும் அடக்கி ஆள்வதிலேயே** *மெய்யான பரிசுத்தம் இருக்கிறது!*

*இயேசு ஓர் நல்ல சுவைமிக்க உணவை ருசித்து, அதில் அவர் மகிழ்ச்சியாய் இருக்க முடிந்தது. ஆனால், இதைக்கண்ட பரிசேயர்கள் அவரை உடனே "போஜனப்பிரியன்" என கூறிவிட்டார்கள் (லூக்கா 7:34). இயேசுவுக்கோ, ஓர் திருமண வைபவத்தில் திராட்சை ரசத்தை தாரளமாய் புழங்குவதற்கு "மிகுதியான திராட்சை ரசம்" உண்டு பண்ணியதே அவர் செய்த முதல் அற்புதமாய் இருந்தது! அங்கிருந்த விருந்தினர்கள் ஏற்கனவே அதிகமான திராட்சை ரசத்தை பருகி யிருந்தார்கள். இருப்பினும், இந்த திருமண வைபவத்திற்கு மேலும் 600-லிட்டர் திராட்சை ரசத்தை இயேசு உண்டு பண்ணினார். பொதுவான*

படி, அந்நாட்களில் 200 விருந்தினர்கள் ஒரு திருமண விருந்திற்கு வருவதுண்டு. அதை மனதில் வைத்தே இயேசு ஒரு நபருக்கு 3-லிட்டர் வீதம் திராட்சை ரசம் உண்டு பண்ணி கொடுத்தார். அவர்களுக்கு இவ்வளவு அதிகமாய் திராட்சை ரசத்தை ஏன் உண்டு பண்ணினார்? நாம் ஒருவேளை, இயேசு கிறிஸ்துவுடைய முதல் அற்புதம் "ஆவிக்குரிய ரீதியான" மரித்தோரை உயிரோடு எழுப்பியதாக இருக்க வேண்டும் என எண்ணியிருக்கக் கூடும். ஆனால், அதற்கு பதிலாய் இந்த அற்புதத்தை அவர் செய்ததற்கு காரணம், வெளித் தோற்றமான "இதைத் தொடாதே! இதை ருசி பார்க்கதே....." போன்றவைகளை போதித்த ஓர் மதவாதத்தை அழிப்பதற்கே அவ்வாறு அந்த முதல் அற்புதத்தை நிகழச் செய்தார்!

நான் சந்தித்த கிறிஸ்தவர்களில், அதுவும் குறிப்பாக சில ஸ்தாபன சபைகளில் உள்ளவர்கள், தங்களின் உரையாடலின் போது 'பேச்சு வாக்கில்' தாங்கள் உபவாசித்த காலங்களை குறிப்பிட்டு சொல்லி விடுவார்கள். அவர்கள் பேசும்போது "**நான் சமீபத்தில் 21–நாட்கள் உபவாசம் இருந்த போது** கர்த்தர் எனக்குத் தந்த விலையேறப்பெற்ற செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்" என நாசூக்காய் சொல்லுவார்கள். அவர்களின் அந்த செய்தியில் வலியுறுத்த விரும்பும் முக்கிய பகுதியாய் இருப்பதெல்லாம், உங்களைக் கவர்ந்து கொள்ளும் படியான "சமீபத்தில் அவர்கள் இருந்த 21-நாட்கள் உபவாசமே ஆகும்". இதை தவிர்த்து, அவர்கள் சொல்லிய செய்திகள் அனைத்தும் இரண்டாவது தரம் கொண்டதே ஆகும். ஆனால் இயேசுவோ, நாம் உபவாசிக்கும்போது, அதை ஒருவரும் அறியாதிருப்பதற்கு புத்தி சொன்னார்! ஆனால் இந்த பரிசேயர்களோ, தங்களின் 'துறவிகோல' வாழ்க்கையை மேன்மை பாரட்டுவார்கள்!

நமது உணவு பழக்கமோ, உறங்கும் செயலோ, தாம்பத்திய உறவோ ஆகிய விசயங்களில் 'ஓர் கட்டுப்பாடு' இருக்க வேண்டுமென்பது, கிறிஸ்தவ ஜீவியத்தின் ஓர் முக்கிய பங்கே ஆகும்! ஆனால், இவைகளில் யாதொன்றும், மற்றவர்களுக்கு நாம் கூற வேண்டிய விசேஷித்த செய்திகள் அல்லவே அல்ல! அல்லது, அவைகளைக் குறித்து மேன்மை பாரட்டுவதும் ஏற்புடையதல்ல!!

## குணாதிசயம் -5

**பரிசேயர்கள் சிறிய விசயங்களுக்கெல்லாம் குதற்கம் காண்பார்கள்:**

*"பரிசேயர்கள் இயேசுவை நோக்கி இதோ, ஓய்வுநாளில் செய்யத் தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே" என்றார்கள் (மத்தேயு 12:2).*

யாரோ சிலருடைய வயல் அருகே நடந்து செல்லும்போது வயலின் கதிர்களைக் கொய்து அதை சுவைத்துச் செல்வதற்கு நியாயப் பிரமாணம் இஸ்ரவேலர்களுக்கு அனுமதித்துள்ளது! இதை பரிசேயர் களும் நன்கு அறிவார்கள். ஆனால் இங்கு அவர்கள் கேட்ட கேள்வி என்னவென்றால், இவ்வாறு **பறித்து திண்ணும் "வேலையை" ஓய்வுநாளில் சீஷர்கள் ஏன் செய்தார்கள்?** என்பதுதான். இவ்வாறாக சின்னச் சின்ன விசயங் களுக்கெல்லாம் இந்த பரிசேயர்கள் குதற்கம் கண்டுபிடித்தார்கள்.

மூத்த சகோதரராய் இருக்கும் நீங்கள்கூட, இப்படிப்பட்டவராய் இருந்தால் உங்கள் சபையில் உள்ள அனைவரும் பரிசேயர்களாய் மாறி விடும் அபாயம் உள்ளது! ஏனெனில், எந்த ஒரு சபையிலும் அதிக பட்சமான மக்கள் தங்கள் மூப்பரின் பழக்க வழக்கங்களை கடைபிடிக் கிறவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வித நிலையைத்தான், வெளிப் படுத்தின விசேஷத்தின் 2,3-ம் அதிகாரங்களில் நாம் காண்கிறோம். இதற்கு மாறாக, மூத்த சகோதரர் பரிசேயத்துவத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தால் சபையில் உள்ள அதிக பட்சமான மக்களும் பரிசேயத்துவத்திலிந்து விடுதலை பெற்றிருப்பார்கள்!

ஆகவேதான், ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் நான் கூறிக்கொள்வது என்னவென்றால்: **உங்கள் சபையின் மூத்த சகோதரர் சட்ட-பிரமாணம் கொண்டவராகவோ அல்லது ஓர் பரிசேயராகவோ இருந்தால், அவரை நீங்கள் ஒரு போதும் பின்பற்றவேண்டாம்.** ஓர் மூத்த சகோதரனுக்கு அடங்கியிருக்க வேண்டிய பகுதி சபைக்குரிய காரியங்களுக்கு மாத்திரமே ஆகும்! அல்லாமல், தனிப்பட்ட நமது விசயங்களுக்கு அல்ல! இதன் பொருள் என்னவென்றால், ஞாயிற்றுக் கிழமை கூட்டம் காலை 10-மணிக்கு ஆரம்பிக்கும் என அவர் அறிவித் தால், அப்படியே கீழ்படிந்து காலை 10-மணிக்கு செல்லுங்கள். அதே கூட்டத்தில் 45-வது பாடலை பாடுவோம் என அவர் அறிவித்தால், அதற்கு கீழ்படிந்து எல்லோரும் சேர்ந்து 45 - வது பாடலை பாடுங்கள். ஓர் மூப்பருக்கு அடங்கி இருப்பதின் பொருள் இதுதான். ஆனால், அவருடைய ஜீவியத்தின் மாதிரியை நீங்கள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.... ஏனெனில், அவர் இப்போது பின்பற்றக் கூடிய உகந்த மாதிரி இல்லை! இயேசுவையே பின்பற்றுங்கள்! மாறாக, சட்ட- பிராமணத்துக்குட் பட்ட ஓர் பரிசேயத்துவ மூப்பரை பின்பற்றாதிருங் கள். உங்கள் ஜீவியத்திற்கு அவர் முழு நம்பிக்கைக்கு பாத்திரமான ஓர் தேவ மனுஷனான மூப்பராய் இருந்தால், அவருக்கே அடங்கியிருங்கள்!

# குணாதிசயம் -6

**பரிசேயர்கள் “விதிகளை” கடைபிடித்து ஜீவிப்பார்கள்:**

*அங்கே சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான். அப்பொழுது அவர்மேல் குற்றம்சாட்டும்படிக்கு; ஓய்வுநாளில் சொஸ்த மாக்குகிறது நியாயமா? என்று கேட்டார்கள் (மத்தேயு 12:10).*

*“விதிகளைச்” சார்ந்து இந்த பரிசேயர்கள் ஜீவிப்பார்களே அல்லாமல், இயேசுவின் வாழ்க்கையை வைத்து இவர்கள் ஜீவிப்ப தில்லை. இவர்களின் அற்பத்தனமான விதியானது “ஒரு நோயாளி, ஓய்வு நாளான்று சுகமாக முயற்சிக்கக் கூடாது!” என்றே போதிக்கிறது. இன்று சபைகளிலுள்ள அநேக தலைவர்களும் இது போன்ற அற்பத்தனமான விதிகளை விதித்து, தங்கள் மந்தையினரின் வாழ்க்கையை அதிக இடுக் கண்களுக்கு உட்படுத்துகிறார்கள். இந்த பரிசேயர்கள் இயேசுவிடம் இந்த கேள்வியை கேட்டதற்கு ஒரே காரணம் “அவர் மேல் குற்றம் சாட்டும்படிக்கு” மாத்திரமே ஆகும். இன்றுள்ள அநேக சபை தலைவர் களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது! இவர்களாகவே உருவாக்கி வைத்திருக்கும் அற்பமான விதிகளை, யாராகிலும் மீறினால் உடனே அவர்களை குற்றப்படுத்துவார்கள்!*

*இந்த அண்ட சாரசரத்தில் “நியாயப் பிரமாணத்தை வழங்கியவர்” அல்லது* **விதிகளை உருவாக்கும் திறன் கொண்டவர் தேவன் ஒருவர் மாத்திரமே.** *ஒரு சபையில் சர்வ வல்ல தேவன் உருவாக்காத சில விதிகளை சபையின் மக்களுக்கு நீங்கள் விதித்தால், “உங்களையே தேவனாக வைத்து” பாவிக்கிறீர்கள்! இதுவே “அந்தி கிறிஸ்துவின் ஆவி ஆகும்!! (2 தெச. 2:4). இவ்விதநிலையில், அந்த பரிசேயர்களைப் போலவே, நீங்களும் சாத்தானோடு கை கோர்த்து “சகோதரர்கள் மேல் குற்றம் சுமத்துகிறவர் களாய்” மாறிவிடுவார்கள் (வெளி12:10).*

*உதாரணமாக, ஸ்திரீகள் தங்கள் தலையை முக்காடிட்டுக் கொள்ளும் விசயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஜெபிக்கும்போதோ அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும்போதோ ஸ்திரீகள் தங்கள் தலையை ‘முக்காடிட்டு’ மூடிக்கொள்ள வேண்டும் என வேதாகமம் கூறுகிறது (1 கொரி 11:5). ஆனால், சில சபை தலைவர்கள், ஸ்திரீகள் தங்கள் தலையை ‘எப்போதும்’ (24-மணிநேரமும்) மூடிக்கொள்ள வேண்டு மென போதிக்கிறார்கள். அது ஏனென்றால், அவர்கள் “இடைவிடாமல் ஜெபிக்கிறவர்களாய்” இருக்கிறார்கள் என காரணம் காட்டுகிறார்கள். ஆனால் “இடைவிடாமல் ஜெபிக்கிறவர்கள்” என்ற அதே தாற் பரியத்தை கொண்டு, புருஷர்கள் தங்கள் தலையை எப்போதும் மூடாமல் இருக்க வேண்டும்..... அதாவது, எக்காரணம் முன்னிட்டும் தங்கள் தலையை மூடும்படி தொப்பி வைத்திடக் கூடாது என*

வலியுறுத்துவதில்லை! இது இவர்களின் நிலையற்ற தன்மையையே வெளிப்படுத்துகிறது. மேலும் வெயில் காலங்களில், உஷ்ணத்தை முன்னிட்டு.... சகோதரிகள் தங்கள் முழுத் தலையையும் மூடுவது அவர்களுக்கு அசௌளரியமாய் இருக்கிறபடியால், தலையின் 15% பகுதியாகிய அவர்களின் பின்பக்க கொண்டை பகுதியை மாத்திரம் மூடி இருக்க அனுமதிக்கிறார்கள்! இந்த பரிசேயர்கள் முழுக்க முழுக்க நிலையற்றவர்கள். ஆனால் தங்களின் நிலையற்ற தன்மையை தாங்களே அறியாதிருக்கும் அறியாமைக்குரியவர்கள். தங்கள் தலையை முழுவது மாய் மூடுகிற சகோதரிகள் காலம் சென்ற **மதர் தெரசாவைப்** போன்ற சில ரோமன் கத்தோலிக்க கன்னியா ஸ்திரீகள் மாத்திரமே என்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த பகுதியை "ஓர் விதியாக" வலியுறுத் தும் கிட்டத்தட்ட அனைவருமே, நிலையற்றவர்களாய் இருப்பதையும் கண்டிருக்கிறேன். ஆனால் இந்த விதியை வைத்து இவர்கள் பிறரை நியாயந்தீர்க்கிறபடியால், இவர்கள் மாய்மாலக்காரர்களும் பரிசேயர் களுமாய் இருக்கிறார்கள்! ஸ்திரீயானவள் தன் தலையை முக்காடிட்டுக் கொள்வதில் தேவன் வைத்திருந்த நோக்கம் "அது ஒரு அடையாளம்" என்பதேயல்லாமல் "ஓர் விதியாக" அல்ல! ஆகவேதான், நான் தனிப்பட்ட விதத்தில் "எல்லா சகோதரிகளும் தங்கள் தலையை 100% மூடியிருக்கிறார்களா? அல்லது முக்காடிற்கு வெளியே முடிகள் தெரிகிறதா?" என்றெல்லாம் சோதித்து பார்த்து என்னுடைய நேரத்தை வீணடிப்பதில்லை!

பரிசேயத்துவமான மூப்பர்கள், மேல் குறிப்பிட்டது போன்ற அநேக விசயங்களில் தங்கள் சொந்த குடும்பத்தினருக்கு சாதகமாக இருந்துவிட்டு, மற்றவர்களிடத்திலோ கண்டிப்பாய் இருக்கிறார்கள். ஆகவேதான், இயேசு அந்த பரிசேயர்களைப் பார்த்து "ஓய்வுநாளில் உங்கள் கழுதை குழியில் விழுந்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர் கள்?" எனக் கேட்டார். ஆம், இவர்கள் தங்கள் சொந்த கழுதையின் மேல் அக்கறை காட்டினார்கள்! ஆனால், ஓர் வியாதிப்பட்டவன் மேல் சிறிதேனும் கரிசனை காட்டவில்லை!! இவ்வாறு, பிறருக்கு விதிகளை விதித்துவிட்டு, தங்கள் சொந்த குடும்பத்தினருக்கு விதிவிலக்கு தரும் தீய நிலைக்கு..... சபை தலைவர்கள், மிகுந்த கவனமாய் இருக்க வேண்டும்!

# குணாதிசயம் -7

**பரிசேயர்கள் பொறாமையினாலும் வெறுப்பினாலும் செயல்பட்டார்கள்:**

*“பரிசேயர் வெளியேபோய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்” (மத்தேயு 12:14).*

*சிலரைக் குறித்து நீங்கள் கொண்ட பொறாமை, அவரை நீங்கள் கொல்லும் அளவிற்கு உச்சக்கட்டத்தை எட்டியிருக்காது.... ஆனால், பொறாமையும் பகையும்..... கொலை செய்வதற்கு நடத்தும் முதல் படிகள் என்பதை நீங்கள் மனதில் கொள்ளுங்கள். முதலில் பொறாமை.... அது வளர்ந்து, பின்பு பகை.... அதை தொடர்ந்து கொலை!..... ஆகிய இந்த படியின் வழியாகத்தான்* **காயீன்** *உச்சகட்டத்தை அடைந்தான். இயேசு வின் மீது பரிசேயர்கள் பொறாமை அடைந்ததற்கு காரணம், அவர்கள் செய்திட முடியாத காரியங்களை இயேசு செய்தார் என்பது தான்! அதனிமித்தம் ஜனங்களிடத்தில் பரிசேயர்கள் பிரபல்யமாய் இருந்த தைக் காட்டிலும், இயேசு ‘அதிக பிரபல்யம்’ அடைந்திருந்தார்!!*

**இயேசுவைக் குறித்து வெகு கொஞ்சமே அறிந்திருந்த பிலாத்துகூட, இந்த பரிசேயர்கள் இயேசுவின்மீது கொண்ட பொறாமையினிமித்தமே அவரை சிலுவையில் அறைய விரும்புகிறார்கள் என்பதை எளிதில் கண்டு கொண்டார் (மத்தேயு 27:18).**

*யாரைக்குறித்து நீங்கள் பொறாமை கொண்டிருந்தாலும் அது உங்கள் பேச்சில் உங்கள் நடக்கையிலுமிருந்து வெட்ட வெளிச்சமாய் தெரிந்து விடும்! உங்களை விட நேர்த்தியாய் பிரசங்கிப்பவரைக் கண்டு நீங்கள் பொறாமை அடைய முடியும்! உங்களிடம் இல்லாத சம்பத்து களோ அல்லது ஆவிக்குரிய வரங்களோ பிறரிடம் இருப்பதைக் கண்டு நீங்கள் பொறாமை அடைய முடியும்! இந்த நிலையில், “அவரிடத்தில் உள்ள சிறு தவறுகளை கண்டுபிடித்து, வெகு எளிதாய் குற்றம் சுமத்திட உங்களால் முடியும். ஏதாகிலும் ஒருவகையில் அவர் வீழ்ச்சியடைய மாட்டாரா? என ஏங்கி காத்திருப்பீர்கள். இவ்வித பரிசேயர்களின் மார்க்கம், காயீன் கொண்டிருந்த மார்க்கமே ஆகும்!”*

*மனுக்குலத்தின் சரித்திரம் இருபெரும் கிளையாய் இருக்கிறது. 1)ஆவிக்குரியது (ஆபேல்)! 2)மற்றொன்று மார்க்க ரீதியானது (காயீன்)!! பிரதானமான பாவம், ஆபேலின் மீது அவன் கொண்ட பொறாமையே ஆகும். முதல் கிளையானது ஓங்கி வளர்ந்து முடிவில் ‘மெய்யான சபைக்கு’ உருவகமான* **எருசலேமையே** *அடைந்தது! இரண்டாவது கிளை ஓங்கி வளர்ந்து ‘பொய்யான சபைக்கு’ உருவகமான* **பாபிலோனை** *அடைந்தது. மார்க்கவாதமும் பொறாமையும் நிறைந்த காயீனின் கிளையை நாம் பின்பற்றி வந்தால்.... நம்முடைய அனைத்து உபதேசங் கள் என்னதான் சுவிசேஷ பிழையின்றி இருந்தாலும், அந்தக் கிளை பாபிலோனின் முடிவுக்கே போய் சேரும்!!*

# குணாதிசயம் - 8

**பரிசேயர்கள் சந்தேகவாதிகள்! மற்றவர்களைக் குறித்த மோசமானதையே அனுமானம் கொண்டிருப்பார்கள்!! ;**

*"பரிசேயர்கள் அதைக் கேட்டு, இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல! என்றார்கள்" (மத்தேயு 12:24).*

*இயேசு பிசாசை துரத்தியபோது, ஜனங்கள் எல்லாரும் "தாவீதின் குமாரன் (வாக்குரைக்கப்பட்ட மேசியா) இவர் தானோ?" என ஆச்சரியப் பட்டார்கள் (மத்தேயு 12:23). ஆனால் பரிசேயர்களோ, தாங்கள் செய்யா முடியாத சிலவற்றை இயேசு செய்ததைக் கண்டு மிகவும் மனக்கிலேசம் அடைந்தார்கள். ஆகவேதான், இயேசுவைக் குறித்து "மிக மோசமான தொன்றை" இவர்கள் அனுமனித்தார்கள்.*

*சிலர் மிக நல்லதைச் செய்து பிறரை ஆசீர்வதித்திருக்கும்போது..... பரிசேயர்களோ, "***அந்த செய்கையில் பொல்லாத நோக்கம் இருப்பதாக***" காண்பிப்பார்கள். ஆனால், அதே செயலை தங்கள் சொந்த பிள்ளைகள் செய்திருந்தால், அதை அவர்கள் மேன்மை பாரட்டி "***அவர்களிடம் நல்ல நோக்கம் இருப்பதாக***" காண்பித்து விடுவார்கள்! இப்படித்தான்..... பரிசேயர் கள் தங்கள் சொந்த குடும்பத்திற்கு பாரபட்சம் செய்து, மற்றவர் களையோ மோசமாய் குறை காண்பார்கள்.*

*இந்த பரிசேயர்கள் பிறர்மீது சந்தேக கண்ணோட்டம் கொண்ட வர்களாய் "யார் வேண்டுமானலும் யாதொரு காரியத்தையும் சுய-நோக்கம் இல்லாமல் செய்திட முடியும்" என நம்புவது இல்லை. அதற்கு காரணம் என்னவெனில் "அவர்களே சுயநலவாதிகளாய்" இருக்கிறார் கள், அவ்வளவுதான்!*

*நீங்கள் பரிசேயராய் இருந்தால், மற்றவர்கள் புரிந்த நற்செயலுக்கு 'தவறான நோக்கங்களின்' வடிவத்தை கொடுத்து விட்டு... இன்னமுமாய், மற்றவர்கள் அந்த நற்செயலை பாரட்டுவதைகூட நீங்கள் பொறுத்திட முடியாமல், குற்றம் சாட்டுகிறவர்களாயும் இருப்பீர்கள்!*

# குணாதிசயம் -9

**பரிசேயர்கள் தங்கள் சம்பாஷணையில் ஜாக்கிரதை இல்லாதவர்களாய் இருப்பார்கள்:**

*"பரிசேயர்கள் அதைக் கேட்டு, இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல! என்றார்கள்" (மத்தேயு 12:24).*

*பிறரைக் குறித்து கடினமும் பாதகமுமான வார்த்தைகளை இந்த பரிசேயர்கள் சிறிதேனும் பொறுப்பற்றவர்களாய் பேசுவார்கள். தங்கள் சம்பாஷணைகளில், பிறருக்கு நியாயத்தீர்ப்பும் வழங்குவார்கள்! தேவ குமாரனையே "பிசாசுகளின் தலைவன்" எனக் கூறியதை சற்று சிந்தித்து பாருங்கள்.*

*பரிசேயர்கள் இவ்வளவு தீமையாய் பேசினாலும், அதற்கு இயேசுவின் பிரதிபலிப்பு எவ்வாறாய் இருந்தது? அவர்களைப் பார்த்து "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு (சாதரணமான மனுஷனாகிய எனக்கு) விரோதமாய் பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசினால்...... அது அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்றே கூறினார் (மத்தேயு. 12:36). மனுஷன் என்ற ஸ்தானத்தில், இயேசு பரிசேயர்களை மன்னித்து விட்டார்! ஆனால், பரலோகத்தில் இருக்கும் தேவனோ அவர்களை மன்னிக்கவில்லை!!*

*நாம் யாதொரு நபருக்கு விரோதமாகப் பாவம் செய்யும் போது, அதில் இரண்டு விதமான காரியங்கள் அடங்கியுள்ளது. 1) படுக்கை வசத்தில்-பிறருக்கு விரோதமாய் பாவம் செய்வதும் 2) செங்குத்தான வசத்தில்-தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதும் ஆகும். ஆகவே உங்களால் பாதிக்கப்பட்ட அந்த நபரும் உங்களை மன்னிக்க வேண்டும்....* **உங்களின் பாவங்கள் முற்றிலும் நீக்கப்பட வேண்டுமென்றால்** *தேவனும் உங்களை மன்னிக்க வேண்டும்!*

*ஒரு மனுஷன் முதலாவதாக மனந்திரும்பிய பின்புதான், தேவன் யாதொருவரையும் மன்னித்திட இயலும்! ஆகவே படுக்கை வசத்திற் குரிய ஒரு மானிடன் உங்களை மன்னித்தாலும்.... செங்குத்து வசத்திற் குரிய தேவனிடமிருந்து நீங்கள் நியாயத்தீர்ப்பை சந்தித்துதான் ஆக வேண்டும்! எனவே, நீங்கள் மனந்திரும்பி தேவனிடம் மன்னிப்பு கேட்காதவரை* **தேவ நியாயத்தீர்ப்பின் அபாயம்** *உங்களுக்கு எப்போதும் இருக்கிறது!*

*அந்த பரிசேயர்களில் ஒருவன், பின்பாக இயேசுவினிடத்தில் சென்று "ஆண்டவரே, நான் உம்மை 'பெயல்செபூல்' என அழைத் ததற்கு வருந்துகிறேன்! தயவாய் என்னை மன்னியும்" என தேவனிடம் மன்னிப்பைக் கேட்டிருந்தால் மாத்திரமே அவனுடைய பாவம்*

*மன்னிக்கப்படுமேயல்லாமல்..... மற்றபடியல்ல! இதை இயேசுவும் எச்சரித்து "உன் வார்த்தைகளினாலேயே குற்றவாளி என்று தீர்க்கப் படுவாய்" என நம்மை எச்சரித்து கூறியிருக்கிறார் (மத்தேயு 12:37).*

*உங்களுக்கு ஓர் வியாதி ஏற்பட்டு, நீங்கள் எவ்வளவுதான் ஜெபித் தாலும் எத்தனை மருத்துவ சிகிச்சை செய்திருந்தாலும்..... அந்த நோய் உங்களுக்கு இன்னும் சுகமாகவில்லையா? அது ஒருவேளை, சங்கீதம் 105:15 எச்சரிக்கும் தேவனுடைய கட்டளைக்கு நீங்கள் கீழ்படியததால் இருக்கக் கூடுமோ...... "நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடமாலும் என்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு தீங்கு செய்யாமலும் இருங்கள்" என்பதே அந்த எச்சரிக்கையின் கட்டளையாகும்.*

*உங்கள் பேச்சுவாக்கில், தேவ பக்தியான ஒரு சகோதரனைக் குறித்து பொறுப்பில்லாமல் பேசியிருக்கக் கூடும். ஒருவேளை, உங்கள் வியாதி சுகமாகாமல் இருப்பதற்கு, அதுவே ஒரு காரணமாய் இருக்கக்கூடும்! ஒருவேளை, நீங்கள் கவனம் இல்லாமல் உங்களைவிட 10,000 மடங்கு பரிசுத்தமுள்ள ஒருவரை நியாயந்தீர்த்துவிட்டீர்களோ? நீங்கள் செய்ததைவிட, தேவனுக்காக 10,000 மடங்கு அதிகம் பிராயசப்பட்டு ஊழியம் செய்த ஒரு சகோதரனை நியாயந்தீர்த்துவிட்டீர்களோ? நீங்கள் மனந்திரும்பி, அந்த நபரிடம் மன்னிப்பு கேட்டால் மாத்திரமே உங்களுக்கு சுகம் கிட்டும்!!*

# குணாதிசயம் -10

**மார்க்கத்தின் பெயரில் தங்கள் குடும்பபொறுப்புகளை உதாசீனம் செய்யும் பரிசேயர்கள்:**

*"நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்..... நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது, தாயையாவது நோக்கி, உனக்கு நான் செய்யத்தக்க உதவி எதுவும் உண்டோ அதை காணிக்கையாக கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது, தன் தாயையாவது கனம் பண்ணாமல் போகிறீர்கள்" (மத். 15:1-9).*

"பெற்றோர்களை கனம் பண்ண வேண்டும் என்ற தேவனுடைய கற்பனையை பரிசேயர்கள் அவமாக்கும் விதமாக....." ஒருவன் தன் பணத்தை ஆலயத்திற்கு காணிக்கையாக கொடுத்து விட்டால், தன் தேவை மிகுந்த தன் பெற்றோர்களை இனியும் ஆதரித்து தாங்க வேண்டியதில்லை எனக் கூறிவிட்டார்கள்! அந்த ஏழை தகப்பன் வியாதிப்பட்டு மரித்துப் போகட்டும்..... ஏனெனில், அந்த தகப்பனின் மகன் ஓர் 'பரிசுத்தவனாய் இருந்து' தன் பணத்தை மிஷனரி ஊழியத்திற்கு இப்போது கொடுத்திருக்கிறான்!!

இதற்கு சமமாய், இன்றைய நாகரீகத்திற்கு இதை ஒப்பிட வேண்டுமானல், ஓர் பரிசேயன் தன் மனைவியினிடத்தில் "இன்று மாலை நான் சபை கூட்டத்திற்கு செல்ல வேண்டும். ஆகவே, வீட்டு வேலைகளுக்கு உனக்கு உதவி செய்ய என்னால் முடியாது" எனக் கூறுகிறார். அல்லது, அவன் தன்னுடைய வேதாகமத்தை காலையில் திறந்து வைத்து யாத்திராகமம் 25-ம் அதிகாரத்தின் ஆசரிப்பு கூடாரத்தை நன்கு அறிந்து கொள்ள வாசிக்கிறார். ஆனால் மனை வியோ காலை உணவையும் சமைத்துக் கொண்டு..... அதே நேரத்தில் அழுது கொண்டிருக்கும் சிறு குழந்தையையும் சமாதானப்படுத்தி .....தன் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப போரடிக் கொண்டிருக்கிறாள்! இந்த பரிசேயனுக்கு ஆண்டவர் முயற்சித்து "உன் வேதாகமத்தை மூடு!" உன் "ஆசரிப்பு கூடார வேதபாடத்தையும் நிறுத்திவிட்டு..... சமையல் அறைக்கு போய் உன் மனைவிக்கு உதவி செய்!" என சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவனோ தேவனுடைய வார்த்தைகளை கேட்கமுடியவில்லை! ஆம், பரிசேயத்துவமான அவனுடைய காதுகள் "தேவனுடைய சத்தத்திற்கு" செவிடாகிப்போனது.

நாம் ஆவிக்குரியவர்களாய் இருப்பதற்குரிய பிரதானமான பங்கு யாதெனில் "வீட்டில் செய்யப்பட வேண்டிய எந்த வேலைக்கும் நாம் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்பதேயாகும். "ஒருவன் தன் சொந்த வீட்டாரை விசாரியாமல் போனால்..... அவிசுவாசியிலும் கெட்டவனாய் இருப்பான்" என்றே வேதம் கூறுகிறது (1 தீமோ 5:8).

# குணாதிசயம் -11

**பரிசேயர்கள் எளிதில் மனம் புண்படுவார்கள்:**

*"அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள். அவர் பிரதியுத்தரமாக...... அவர்களை விட்டு விடுங்கள்! என்றார்"*

'தன் தகப்பனையும் தன் தாயையும் ஒருவன் கனம் பண்ணாமலும் இருக்கலாம்......' என பரிசேயர்கள் போதித்ததை இயேசு கண்டித்து திருத்தினார் என்பதை கடந்த குணாதிசயத்தில் நாம் கண்டோம். இந்த திருத்துதலை கேட்ட பரிசேயர்களோ இடறலடைந்து, மனம் புண் பட்டார்கள்.

**யாதொரு கடிந்து கொள்ளுதலையோ அல்லது யாதொரு திருத்துதலையோ ஒரு மூத்தசகோதரன் மூலமாய் ஆண்டவர் தரும் போது, பரிசேயர்கள் மிக எளிதில் மனம் புண்பட்டு விடுவார்கள்.**

நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் 'மனம் புண்படுவதிலிருந்து' ஜெயம் பெறுவது, எளிய நர்சரி பாடங்களில் ஒன்றே ஆகும். நீங்கள் திருத்தப் படும்போது மனம் புண்படுவதிலிருந்து முற்றிலுமாய் விடுதலை பெற வேண்டும் என்ற நாட்டம் உங்களுக்கு இல்லையென்றால், பரிசேயத்து வத்திலிருந்து நீங்கள் எக்காலத்தும் விடுதலைபெற இயலாது!

எங்கள் சபையில் சிறிய திருத்துதல்களைக்கூட ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் அவ்வளவாய் மனம் புண்பட்டு சபையை விட்டே சென்று விட்ட ஜனங்களை அறிந்திருக்கிறோம். இன்று, அது போன்ற வர்கள் 'வனாந்திரங்களில்' சுற்றி அலைகிறார்கள்! இவர்கள் நித்திய மான இழப்பிற்கு உள்ளாகும் அபாயத்திற்கு ஆளாகிவிடுகிறார்கள். உங்களுக்கு தரப்பட்ட சில திருத்துதல்கள் நிமித்தம் மனம் புண்பட்ட வர்களாய் இருந்தால், நீங்களும் இந்த பரிசேயர்களைப் போலவே நரகத்தை நோக்கி பயணிக்கிறீர்கள் என அறிதியிட்டு கூறிட முடியும்!

"**அவர்களைத் தனியே விட்டுவிடுங்கள்**" என்றே இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு உரைத்தார். மனம் புண்பட்ட பரிசேயர்களுக்குப் பின்பாக நாம் சென்று, அவர்களை மீண்டும் சபைக்கு கொண்டுவர நாம் முயற்சித்திடக் கூடாது! நாம் ஆண்டவருக்கு கீழ்படிந்து, அவர்களை தனியே விட்டுவிட வேண்டும்! ஒருவேளை அவர்கள் மனந்திரும்பினால் ஆண்டவரிடம் திரும்பி வந்து, சபைக்கு வரலாம்! மற்றபடி அவர்கள் வந்துவிடக்கூடாது!!

# குணாதிசயம் -12

**பரிசேயர்கள், ஆவிக்குரிய குருடர்கள்:**

*"இயேசு பிரதியுத்தரமாக...... அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள். குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்கள் என்றார்" (மத்தேயு 15:4).*

*பரிசேயர்கள் வேதாகம பண்டிதர்கள்! ஆனால் அவர்களோ ஆவிக்குரிய ரீதியில் குருடர்கள்!! எனவே ஆவிக்குரிய நடைமுறை ஜீவியத்தைக் குறித்து யாதொரு வெளிப்பாடும் அவர்களிடம் காணப் படுவதில்லை. இது போன்ற குருடான தலைவர்கள், குருடாய் இருக்கும் ஜனங்களை நடத்த முயற்சிக்கும் போது "முதலில் இவர்களே குழியில் (நரகத்தில்) விழுவார்கள், பின்பு அவர்களை பின்பற்றியவர்களும் அதே குழியில் விழுவார்கள்" (மத் 15:4) என இயேசு கூறினார்.*

*குருடனான மனுஷனை ஒருபோதும் பின்பற்றாதீர்கள்! உங்களை நடத்தும் தலைவன் அல்லது மூப்பன் ஆவிக்குரிய நோக்குடைய மனுஷன்தானா? என்றும், தேவ ஜனத்தை நேசிப்பவரா? என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். 'அன்பற்ற தன்மை' ஆவிக்குரிய குருட்டு தன்மைக்கு காரணமாய் மாறி, அதுபோன்ற பிரசங்கிகள் பிரசங்கிக்கும் விதமானது ஜனங்களை ஆக்கினைக்குள் தீர்க்கும்படி அமைந்துவிடும். இயேசுவை நேசிக்கும் ஒரு மனிதன், தான் கர்த்தரை தெளிவாய் காண்கிறபடியால், தன்னுடைய பிரசங்கங்களில், இயேசுவையே உயர்த்தி உங்களுக்கு காண்பித்துவிடுவார்! இதுபோன்ற ஒரு தலை வரையே நீங்கள் பின்பற்றவேண்டும், அவரைப்போல் மாறுவதற்கும் வாஞ்சை கொள்ள வேண்டும்!*

# குணாதிசயம் - 13

**பரிசேயர்கள், மாய்மாலக்காரர்கள்:**

*"நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (லூக் 12:1).*

ஆங்கிலத்தில்-Hypocrite (மாய்மாலக்காரர்கள்) என்ற வார்த்தை உண்மையில் ஓர் கிரேக்க வார்த்தையாகும். அந்த வார்த்தை அப்படியே ஆங்கிலமொழிக்கும் மாற்றப்பட்டுள்ளது! இதன் உண்மையான அர்த்தம் "நடிகன்!" என்பதேயாகும். நீங்கள் முதலாம் நூற்றாண்டின் கிரேக்க நாட்டிற்குச் சென்று " Hypocrite" எங்கே இருக்கிறார்கள் என கேட்டால், அதற்கு அவர்கள் "சினிமா தியேட்டரில் இருப்பார்கள்!" என்றே பதில் அளிப்பார்கள். இந்த 'Hypocrite' (மாய்மாலக்காரர்கள்) மேடையில் தோன்றி தங்கள் 'Hypocrite' ஐ (மாய்மாலமாகிய நடிப்பை) சுமார் 2-மணி நேரங்கள் அரங்கேற்றிடுவார்கள்! பின்பு வீட்டிற்குத் திரும்பி, தங்கள் வழக்கமான பழைய வாழ்க்கையை ஜீவிதம் செய்வார்கள்!

திரை உலகில் ஒருமனிதன், யோவான்ஸ்நானகனாய் பங்கேற்று அவரைப்போலவே **மாபெரும் பரிசுத்தவானாய்** அந்த கதாபாத்திரத்தில் நடிப்பார்! ஏனெனில், அவர் ஓர் திறமையான நடிகர்! ஆனால், அவரோ தன் நிஜவாழ்க்கையில் குடிகாரனாயும், விபச்சாரக்காரனாயும் இருப்பார்!!

இன்றும் இதுபோன்ற மாய்மாலக்காரர்கள் சபைகளில் இருக்கிறார்கள்! ஞாயிற்றுக்கிழமை ஆராதனை கூட்டங்களில், தாங்கள் பங்கேற்ற நடிப்பை சுமார் 2-மணிநேரம் நிகழ்த்துவார்கள்.

**இவ்வாறு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 'கர்த்தரை துதிப்போம்!' நிகழ்ச்சி நேரத்தில் பரவச துதியின் கதாபாத்திரத்தை வெகுசிறப்பாய் நடிப்பார்கள்.**

ஆனால், நீங்கள் அவர்களுடைய வீட்டிற்கு அந்த வார நாட்களில் சென்றால், அவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை வேளையில் நிகழ்த்தியதெல்லாம், வெறும் நடிப்பே என்பதை வெகு விரையில் கண்டு பிடித்து விடுவீர்கள். வீட்டில், தங்கள் அன்றாட ஜீவியத்தில் இவர்கள் தேவனை துதிப்பவர்களாய் இருப்பதில்லை! மாறாக, ஒருவருக் கொருவர் குறைசொல்லுகிறவர்களாயும், முறுமுறுப்பும் கோள் சொல்லுதலும் வாக்குவாதம் செய்பவர்களாயும் இருப்பார்கள்!

இவ்வாறு சபை கூட்டங்களில் மற்றவர்கள் பார்வைக்கு முன்பாக நீங்களும் நடிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? அங்கே நன்றாய் நடித்து விட்டு, உங்கள் அலுவலகத்திலும் உங்கள் வீட்டிலும் மாறுபட்ட நபராய் ஜீவிக்கிறீர்களா?

# குணாதிசயம் -14

**பரிசேயர்கள், பிறருடைய வார்த்தைகளைக் கொண்டு 'பிடிக்க' வகை தேடுவார்கள்:**

*"பரிசேயர்கள் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளி விடுவது நியாயமா? என்று கேட்டார்கள்" (மத்தேயு. 19:3).*

*சிலரை மற்றவர்களுக்கு முன்பாக குற்றம்சாட்டும்போது, அவர்கள் பேசும் வார்த்தைகள் மூலமாய் அவர்களைப் பிடிக்க இந்த பரிசேயர்கள் வகை தேடுவார்கள். இன்னும் அதிகமாய், சில கேள்விகளைக் கேட்டு அதில் தங்களுக்கு ஏதாகிலும் 'ஒரு பிடி கிடைக்குமா?' என்றும் வகை பார்ப்பார்கள். இயேசுவின்மேல் குற்றஞ்சாட்டும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்க வேண்டும் என்று உபாயம் பண்ணி.... அநேகங்காரியங்களைக் குறித்துப் பேசும்படி அவரை ஏவிடத் தொடங்கினார்கள் (லூக் 11:53,54; மத் 22:15).*

*இதுபோன்ற அனுபவத்தை நான் சந்தித்திருக்கிறேன். வெளி சபைகளைச் சேர்ந்த சிலர், என் பிரசங்கத்தின் மூலமாய் உணர்த்துவிக்கப் பட்டு...... அதேசமயம், நான் பிரசங்கித்தவைகள் "துர் உபதேசம்" என குற்றம் சாட்டும்படி வந்திருக்கிறார்கள். பல கேள்விகள் என்னிடத்தில் கேட்டு "நான் சொல்லும் பதிலில் சில வார்த்தைகளை" தங்கள் வாதத்திற்கு பிடித்துக் கொள்வார்கள்! இவர்கள் தங்கள் ஜீவியத்தின் பாவங்களிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்ற ஆர்வம் இல்லாதவர் களாய், பிறரிடத்தில் ஏதாவது குறைகளை கண்டுபிடித்துக் கொண்டே இருப்பார்கள். அன்று பரிசேயர்கள் எப்படி இருந்தார்களோ, அது போலவே இவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் இயேசுவின் உபதேசங் கள் அடங்கிய வசனங்களை, அவர் கூறவந்த செய்திக்கு தொடர்பு படுத்தி பேசாமல்.... வேறொன்றைக் கூறி,* **"இவர் துர் உபதேசக்காரர்" என குற்றம் சாட்டுவார்கள்.** *இக்காலத்தில், என்னை குற்றம் சாட்டும் பொருட்டு நான் பிரசங்கித்த அல்லது எழுதிய வார்த்தைகளைத் திரித்து வளைத்து "துர் உபதேசம்" என குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.*

*நாம் மெய்யாகவே சிலரை நேசிப்போமென்றால், அவர் பேசிய வார்த்தைகளில் நலமானவைகளையே நமக்கு முன் வைத்துக் கொள் வோம்! "ஒருவேளை, அவர் பேசியதை நான் தவறாய் புரிந்திருக்க கூடும்! அல்லது, இதை இவர் ஜாலியாக பேசியிருக்கக்கூடும்....." என்றே நாம் சொல்லுவோம். ஆனால் பரிசேயர்களோ "இது போன்ற விசாலமான பரந்த மனப்பான்மைக்கு" இடம் தருவதே இல்லை! இயேசுவைக் குறித்தோ* **"அவர் தமது கண்கண்டபடி நியாயந்தீர்க்கமாலும், தனது காது கேட்டபடி தீர்ப்பு செய்யாமலும் இருப்பார்"** *(ஏசா.13:3) என்றே வேதம் குறிப்பிடுகிறது. இந்த நல்ல மாதிரியையே, தேவ பக்தியுள்ள ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும்!*

## குணாதிசயம் -15

**பரிசேயர்கள் கடின இருதயம் கொண்டவர்கள்:**

*"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மத்தேயு 15:8).*

பரிசேயர்களின் இருதயம் அத்தனை கடினமாய் இருந்ததற்கு காரணம், அந்த இருதயம் தேவனைவிட்டு தூரமாய் விலகியிருந்ததே ஆகும். வெண்ணெயை "**நெருப்புக்கு அருகாமையில்**" வைத்திருந்தால், அது உடனே உருகத் துவங்கிவிடும். ஆனால், அதே வெண்ணெயை குளிர் பெட்டியில் வைத்துவிட்டால், அது கடினமாய் மாறிவிடும்! அது அவ்வளவாய் ஓர் பாறையைப்போல் மாறுகிறபடியால், அதை உடைத்திட ஓர் உளி போன்ற அயுதமே தேவையாய் இருக்கிறது. பரிசேயர்களின் இருதயமும் அவ்வாறாகவே இருந்தது. தேவன் அக்கினியாய் இருக்கிறார்! **அவரை நெருங்கி நீங்கள் ஜீவித்தால்,** உங்கள் இருதயம் எப்போதும் மிருதுவாகவே இருக்கும். ஆம், தேவனுடைய பிரசன்னத்தில் கற்பாறைகூட உருகிவிடும்!!

இதற்கு மாறாக, உங்கள் இருதயம் பிறரிடம் கடினமானதாய் இருந்தால், நீங்கள் தேவனைவிட்டு விலகி தூரமாய் ஜீவிக்கிறீர்கள் என்பதை நிச்சயித்துக் கூறலாம். பரிசேயர்கள் தேவனைவிட்டு விலகி பல்லாயிரம் மைல்கள் அப்பால் ஜீவித்தபடியால், அவர்கள் பிறரிடம் கடினமாய் நடந்து கொண்டார்கள். ஆகிலும், இந்த பரிசேயர்களோ தங்கள் உதடுகளினால் தேவனை கனம் செய்து மிகநேர்த்தியான துதியின் கீதங்களை "ஓ என் தேவனே..... நீரே பாத்திரர்!" என்றெல்லாம் புகழ்ந்தார் கள்! ஆனால் அவர்களோ, தங்களை நியாயந்தீர்த்து வாழவில்லை. தேவனை நெருங்கி அவர் குரலை கவனித்திடும் ஒருவன் தன்னை எப்போதுமே நியாயந்தீர்த்து வாழ்ந்து கொண்டு, பிறரை ஒருபோதும் நியாயந்தீர்த்திட மாட்டான்! இதுவே, ஓர் மெதுவான இருதயம் கொண்ட ஓர் மனுஷனுக்கு அடையாளமாகும்! இதுபோன்ற பரிசேயர் கள் ஜனங்களிடத்தில் வெகு கடினமாய் நடந்து கொண்டபோதும், அவர்களில் பெரும்பாலோர் தங்கள் சொந்த குடும்பத்தினரிடம் வெகு மென்மையாக நடந்து கொள்வதை கவனித்திருக்கிறேன்! இவர்கள் சட்டவிதிகளை மற்றவர்களுக்கு வகுத்திருப்பார்கள்.... அதே சட்டவிதி களை தங்கள் சொந்த குடும்பத்தினருக்கு வகுத்திருக்க மாட்டார்கள்! இவர்களிடம் பாரபட்சமும் மாய்மாலமும் வழிந்தோடி இருக்கும்!!

நமக்கென்று உறுதியான நிலை வேண்டும்! நான் எதை வைத்துக் கொள்ள.... எதைச் செய்திட ..... எனக்குள் அனுமதித்திருக்கிறேன் என்ப தைக் குறித்து "என் சொந்த உறுதியான நிலை" எனக்குண்டு. ஆனால்,

**வேதாகமம் மௌனமாய் இருக்கும் அநேக விசயங்களில் "என் உறுதியான நிலையை" நான் பிறரிடம் திணிப்பதில்லை!** *நீங்கள் T.V-செட் வைத்திருக்கலாமா அல்லது கூடாதா? என்ற கேள்விக்கு நான் பதில் தருவதில்லை. இதைவிட, இணையதளத்தோடு தொடர்புடைய ஓர் கம்ப்யூட்டர், இந்த T.V-செட்டை விட அபாயகரமானது என்றே நான் கருதுகிறேன். ஆகவே T.V-யோ அல்லது கம்ப்யூட்டரோ ஆகிய இரண்டிலும் உள்ள அபாயங்களைச் சொல்லியே நான் ஜனங்களை எச்சரித்திக்கிறேன்! இருப்பினும், இந்த பரிசேயர்கள் செய்வதுபோல நான் பிறருக்கு சட்டவிதிகளை வகுப்பதில்லை! 'இந்த எலக்ட்ரானிக் சாதனங்களை ஒருபோதும் வாங்கக் கூடாதென' பிறரிடம் கூறிய பரிசேயர்களை நான் அறிந்திருக்கிறேன்! ஆனால்... தாங்கள் விதைத்ததையே புசிக்கிறவர்களாய் 'பிற்காலங்களில்' தங்கள் தேவைக்கு அவர்களே கம்ப்யூட்டரை வாங்கி விட்டார்கள்!!*

---

## குணாதிசயம் -16

**கூடிவரும்போது எழுப்பும் பலத்த துதியை பரிசேயர்கள் மெச்சிக் கொள்வதில்லை:**

*"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று..... ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளை பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு கோபமடைந்தார்கள்" (மத்தேயு 2:15).*

*சத்தத்தை உயர்த்தி தேவனை துதிப்பதை கண்டு பரிசேயர்கள் இடறலடைந்தார்கள். தேவஜனங்கள் அவருடைய பிரசன்னத்தில் அமைதியாய் இருப்பதையே அல்லது குறைந்தபட்சம் குறைவான சத்தத்தில் துதிப்பதையே தெய்வபயத்திற்கு சான்று என இந்த பரிசேயர்கள் விசுவாசித்தார்கள். சிறுபிள்ளைகள் உரத்த சத்தமிட்டு தேவனை துதித்தது பரலோகத்தை அவருக்கு நினைவூட்டுவதாய் இருந்தது! ஆகவே, இயேசு அந்த துதியில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்!! பரலோகம், இடைவிடாத துதி நிறைந்த இடமாகும். சில சமயங்களில், அந்த சத்தம்* **பலத்த இடிமுழக்கத்தின் சத்தமாகவும்** *இருக்கும் (வெளி 19:6). இந்த அளவிற்கு துல்லியமான துதியின் அளவை, நம்முடைய துதி ஸ்தோத்திர கூட்டங்களில் இன்னமும் நாம் எட்டவில்லை! ஆகிலும் இன்று அதுவே நமக்கு இலக்காய் இருக்கிறது! ஓர் கூட்டத்தில் கேட்ட பரவசமான செய்திக்கு யாரோ சிலர்* **"ஆமென்"** *என்றோ* **"அல்லேலூயா"** *என்றோ பிரதிபலித்திடும் சத்தத்தை இந்த பரிசேயர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அந்நேரங்களில் தங்கள் தலையை திருப்பி 'யார் சத்தம் போட்டார்கள்' என்றே காண்கிறார்கள்! சபைக் கூட்டங்களில், இப்படியெல்லாம் சத்தமிடக்கூடாது என எண்ணுகிறார்கள். சபை கூட்டங்களில் ஒவ்வொருவரும்* **"ஒரு மரண ஆராதனையில்"** *அமர்ந்திருப்பதைப் போலவே இருக்க வேண்டுமென இவர்கள் எண்ணுகிறார்கள். இவர்கள் மெதுவான குரலில் பாடுவதைக் காணும் போது..... இவர்கள், "இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்!" என்ற செய்தியை இன்னும் கேட்கவில்லையோ? என நம்மை எண்ணத் தூண்டுகிறது!!*

# குணாதிசயம் -17

**பரிசேயர்களுக்கு வேத அறிவு உண்டு ஆனால் கீழ்படிவதே இல்லை:**

*"வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந் திருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களு க்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கை யின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" (மத் 23:2,3).*

வேதாகமத்தின் வேறெந்த அதிகாரத்தைக் காட்டிலும் மத்தேயு 23-ம் அதிகாரத்தில்தான் பரிசேயர்களின் அநேகமான குணாதிசயங் களை இயேசு பகிரங்கப்படுத்தினார். மத்தேயு 23-ம் அதிகாரம், 1-கொரிந்தியர் 13-ம் அதிகாரத்திற்கு நேர்முரண்பாடான அதிகாரங் களாகும். சட்ட விதிகளினால் நடத்தப்படுவதற்கும், திவ்ய அன்பினால் பரிசுத்தாவியின் மூலம் நடத்தப்படுவதற்கும் வித்தியாசம் உண்டு. ஆகவே, நாம் பரிசேயத்துவத்திலிருந்தும் பிரமாணத்துவத்திலிருந்தும் வெளிவந்து திவ்யஅன்பினால் ஆட்கொள்ளப்பட வேண்டுமென்றால், மத்தேயு 23-அதிகாரத்தை நாம் கவனமாய் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பரிசேயர்கள் மோசேயின் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். அதன் பொருள் யாதெனில், அவர்கள் வேதாகம கல்லூரிகளுக்குச் சென்று டாக்டர் பட்டங்கள் பெற்றிருந்தார்கள். ஆகவேதான் "வேத அறிவு" அவர்களுக்கு அத்தனை துல்லியமாய் இருந்தது. இதை இயேசு தன் சீஷர்களுக்கு குறிப்பிடும்போது "பரிசேயர்கள் போதித்த எல்லா போதகங்களையும் நீங்கள் கைக்கொள்ளலாம்" என்றே கூறினார்! இதிலிருந்து, பரிசேயர்கள் போதித்த அனைத்தும் சரியானவைதான் எனத் தெரிகிறது!! துயரம் யாதெனில், எது சரியானதென அவர்கள் அறிந்திருந்தார்களோ, அதற்கு அவர்களே கீழ்படியவில்லை!!

வேத அறிவு மிகவும் பயனுள்ளதுதான்...... ஆனால் அது ஆபத்தானது கூட! கீழ்படிதலோடு கூடிய வேதஅறிவு மாத்திரமே ஆவிக்குரிய ஜீவனை கொண்டுவர முடியும்! கீழ்படிதல் இல்லாத வேத அறிவோ ஆவிக்குரிய மரணத்தையே கொண்டுவரும். ஆகவே வேத அறிவு உண்டாயிருந்து கீழ்படியாமல் இருப்பதைவிட, எந்தவேத அறிவும் இல்லாதவர்களாய் இருப்பது 'தேவலாம்' என்றே கூறலாம். நாம் சாப்பிடுகிற உணவிற்கு வேதஅறிவை ஒப்பிடலாம். அந்த உணவை ஜீரணிக்கும் வேலையை கீழ்படிதலுக்கு ஒப்பிடலாம்! இவ்வாறு உணவு ஜீரணிக்கப்பட்ட பிறகுதான் அது நமது சரீரத்தின் ஒரு பங்காய் மாறுகிறது. நாம் சாப்பிடும் சாதராண அரிசி சாதமும், காய்கறியும் "மாம்சமும் எலும்புமாய் மாறுகின்றதே!" அன்று கானாவூர் நிகழ்ச்சி யில்

*"தண்ணீர், திராட்சை ரசமாய் மாறிய" அற்புதத்திற்கு ஒப்பாகவே இந்த அற்புதமும் இருக்கிறது!!*

*ஆனால், நாம் புசிக்கும் உணவு ஜீரணிக்கப்படாமல் இருந்து விட்டால்,* **ஜீரணிக்கப்படாத அந்த உணவு** *நமது வயிற்றில் தங்கியிருந்து கெட்டுப் போய் வியாதியை நமக்கு ஏற்படுத்திவிடும். நீங்கள் வாந்தி எடுக்கும் போது, உங்கள் வயிற்றிலிருந்து வெளியே விழுந்த உணவு 'நாற்றம்' உள்ள துர்வாடை வீசுவதை கவனித்திருக்கிறீர்களே! முதலில் நீங்கள் புசித்தபோது அது சுவைமிக்க கோழி பிரியாணியாய் இருந்தது உண்மைதான். ஆனால், அதை நீங்கள் வாந்தி எடுத்த பின்பு நேருக்கு மாறான சுவையும் மணமும் உடையதாய் போய்விட்டதே!! இதைப் போலவேதான் 'கீழ்படியாமலே' வேத அறிவை சேர்ப்பவர்களின் கதியும் இருக்கிறது!*

*இதனிமித்தமே, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அநேக கிறிஸ்தவர் கள் நாற்றம் பிடித்தவர்களாய் இருக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாய் வேத அறிவை பெற்று, அதற்கு மிக அற்ப கீழ்படிதல் உடைய வர்களாய் இருக்கிறீர்களோ...... அவ்வளவு அதிகமாய் உங்களிடம் 'நாற்றம்' உண்டாயிருக்கும். இந்த நிலையில்தான் பரிசேயர்கள் இருந்தார்கள்! இதில் வருத்தமானது என்னவென்றால், "அவர்கள் நாறுவது அவர்களுக்கே தெரியவில்லை" என்பதுதான்! ஓர் ஆவிக்குரிய மனிதன் இந்த நாற்றத்தை இமைப்பொழுதில் அறிந்து விடுவான். ஆம், தேவபக்தி நிறைந்த மனுஷன் 'ஒரு பரிசேயனை' அவனோடு கொண்ட 5-நிமிட சம்பாஷணையில் கண்டறிந்து விடுவான். அவர்களுடைய கண்களில்* **அகங்காரம்** *நிறைந்திருக்கும் அல்லது* **வேசித்தனம்** *நிறைந் திருக்கும் (நீதி 6:17; 2 பேதுரு2:14).*

*அநேக ஸ்திரீகள் தங்களின் மனந்திரும்பாத நாட்களில் வாழ்ந்த "பாலிய சிலிப்பித்தனமான வாழ்க்கையை" வாழ்ந்துவிட்டு, மனந் திரும்பிய பிறகும், அந்த அசுசியை தங்கள் ஆவியிலிருந்து முழுவதும் கழுவாமலேயே வைத்து விடுகிறார்கள். இதன் விளைவாய், இவர்கள் மனந்திரும்பி 20-வருடங்கள் ஆன பிறகும், அவர்கள் கண்களில் இன்னமும் "பாலியத்தின் சிலிப்பித்தனமான பார்வை" தேங்கி நிற்கிறது. ஆகவேதான், எல்லா வாலிபர்களிடமும்.... இவ்வித பார்வை கொண்ட ஸ்திரீகளை விட்டு விலகியிருங்கள் என நான் கூறுவது உண்டு!*

# குணாதிசயம் -18

**பரிசேயர்கள் தாங்கள் பிரசங்கிப்பதை அப்பியாசப்படுத்துவது இல்லை:**

*“அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்” (மத்23:3).*

*இந்த வசனம் அப்போஸ்தலர் 1:2- ம் வசனத்திற்கு நேர்மாறான வசனமாகும். அந்த வசனத்தில் இயேசுவை குறிப்பிட்டு,* **அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினார்** *என எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம். பரிசேயர்கள் போதித்தார்கள், ஆனால் அதன்படி செய்யவில்லை. அவர் கள் பிரசங்கித்ததையும் கைக்கொள்ளவில்லை! ஆனால் இயேசுவோ முதலாவது தான் செய்தது எதுவோ அதை மாத்திரமே பிரசங்கித்தார்!! இது, இரண்டு வெவ்வேறான ஆவிகள் ஆகும். பரிசேயத்துவ ஆவி கொண்டவர்கள் ‘வேசிமார்க்கத்தின்’* **பாபிலோன்** *சபையைத்தான் கட்டுவார்கள்! கிறிஸ்துவின் ஆவி கொண்டவர்களோ ‘பரிசுத்தாவியின்’ மணவாட்டியாகிய* **எருசலேம்** *சபையை கட்டுவார்கள்.*

*தான் முதலாவது கைக்கொள்ளாத எதையும் இயேசு ஒருபோதும் பிரசங்கித்ததில்லை. மத்தேயு 5,6,7 - அதிகாரங்களில் உள்ள “மலை பிரசங்கத்தின் செய்தியை” ஆயத்தம் செய்வதற்கு இயேசுவுக்கு எவ்வளவு காலம் பிடித்திருக்கும் என நீங்கள் கூற முடியும்? அந்த செய்தியை ஆயத்தம் செய்வதற்கு அவருக்கு 30-ஆண்டு காலம் பிடித்தது!*

**இந்த பிரசங்கங்கள் அவருடைய ஜீவியத்திலிருந்து வந்ததே அல்லாமல், அவருடைய வெறும் மனதிலிருந்து வரவில்லை!**

*நீங்கள் யார் மூலமாவது கேட்ட பிரசங்கத்தை, நீங்களும் பிரசங்கித்தால் அந்த வார்த்தைகள்தான் உங்கள் மூளையிலிருந்து புறப் பட்டு வருவதாய் இருக்கும். அது வெறும் அறிவு மாத்திரமே ஆகும். அந்த வார்த்தைகளில் யாதொரு ஜீவனும் அபிஷேகமும் இருக்காது! நீங்கள் இயேசு பிரசங்கித்தது போலவே பிரசங்கிக்க விரும்பினால், நீங்கள் முதலாவது அந்த தேவ வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும், அதற்கு பிறகே நீங்கள் பிரசங்கிக்கலாம். சிலர் என்னிடம் “சகோ. சகரியா பூணன் அவர்களே, என்னுடைய ஊழியத்தில் உங்கள் பிரசங்கங்களை நான் பிரசங்கிக்கலாமா?” எனக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு, நானும் “நீங்கள் முதலாவது அந்த வசனத்தின்படி வாழுங்கள்! எங்கிருந்து இந்த செய்தியை எடுத்தீர்கள்? என்பதையும் நேர்மையாய் சொல்லுங்கள்! இதற்குப் பின்பு, நீங்கள் தாராளமாய் பிரசங்கிக்கலாம்!!” என்றே கூறுகிறேன். இதற்கு தேவன் சொல்வது என்னவென்றால் “ இந்த பிரசங்கிகளில் யாராவது என்னை கிட்டிச் சேர்ந்து, நான் சொல்லுவதை கவனித்து, என்னுடைய வார்த்தையின்படி ஜீவித்திட அக்கறை கொண்டிருந்தார்களா?....... இது போன்ற பிரசங்கிகளை நான்*

அனுப்பவும் இல்லை. அவர்களிடம் ஒருமுறைகூட பேசியதும் இல்லை.... ஆனால் அவர்களோ தீர்க்கதரிசனம் உரைத்து பிரசங்கித்து கொண்டிருக்கிறார்கள்!" (எரேமியா 23:17,18,21 Message மொழி பெயர்ப்பு) எனக் கூருகிறார்.

யாரோ செய்த பிரசங்கங்களை, நீங்கள் அதன்படி ஜீவிக்காமாலும் அல்லது எங்கிருந்து செய்தியை பெற்றீர்கள் என்று கூறாமலும் பிரசங்கித்தால்...... உங்களுக்கென்று கனத்தையும் புகழையும் தேடுகிறீர் கள் என்பதே உண்மையாகும்! இப்படிச்செய்வது ஓர் அபாயகரமான பழக்கம், அது உங்களுக்கு ஆவிக்குரிய மரணத்தையே கொண்டு வரும். இதை தேவனும் எச்சரித்து "தங்கள் பிரசங்கங்களை மற்றவர்களின் செய்திகளிலிருந்து எடுத்து பிரசங்கித்து "இந்த செய்தி கர்த்தரால் உரைக்கப்பட்டது" என கூறும் எந்த பிரசங்கிக்கும் நான் விரோதி!" (எரேமியா 23:30,31-Message மொழி பெயர்ப்பு) என்றே கூறினார்.

கடந்த 30-ஆண்டு காலமாய், என் வாழ்க்கையில் முதலாவதாக நான் அப்பியாசித்ததை மாத்திரமே பிரசங்கித்திட பிரயாசப்பட்டிருக் கிறேன். அதற்கு உதாரணமாய், நான் எந்த இடத்திலும் ஜனங்களை **வட இந்தியா மிஷனரிகளாய் போகும்படி** உத்வேகம் தந்து பிரசங்கித்தது இல்லை! வட இந்திய ஊழியத்திற்கு நூற்றுக்கணக்கான மிஷனரிகள் இன்னமும் தேவைப்படும் இக்காலத்தில், நானோ அதைக் குறித்து பிரசங்கித்த தில்லை! இதற்கு ஒரே காரணம், நான் வடஇந்தியாவிற்கு சென்று ஒரு மிஷனரியாக இன்றுவரை வாழ்ந்ததில்லை என்பதுதான்!

இப்போது நான் கூறப்போகும் வார்த்தைகளை சற்று கவனித்துப் பார்த்து அது உண்மைதானா என்பதை சற்றே நிதானித்து பாருங்கள்: "கிட்டத்தட்ட அனைத்து இந்திய மிஷனரி ஸ்தாபனத்தில் உள்ள ஒவ்வொரு தலைவர்களும் "தென் இந்தியாவின் சுக வாழ்வில் வாழ்ந்து கொண்டு", மற்றவர்களை வடஇந்திய மிஷனரிகளாய் போவதற்கு சவாலிடுகிறவர்களாய் இருக்கிறார்கள்! மிஷனரி ஸ்தாபன தலைவர்கள், தங்கள் சொந்தப் பிள்ளைகளை தென்னிந்தியாவின் உயர்ந்த பள்ளி களிலும், கல்லூரிகளிலும் படிக்க வைக்கிறார்கள்! ஆனால், வடஇந்தி யாவில் பள்ளிகூடங்களே இல்லாத குக்கிராமங்களில் பணியாற்றும் தங்கள் மிஷனரிகளையோ, அவர்களின் பிள்ளைகளை தூரத்தில் உள்ள ஏதாவது"போர்டிங் பள்ளிகளுக்கு" அனுப்பும்படி கூறுகிறார்கள். இதுபோன்ற தலைவர்களை நான் நியாயந்தீர்த்திட விரும்பவில்லை. தேவனே அவர்களின் நியாயாதிபதி! ஆனால், இவைகளை நான் சொல்வதற்கு காரணம், அவர்களின் மாதிரியை நான் ஒருக்காலும் பின்பற்றுவதில்லை என கூறுவதற்கே ஆகும். அவர்கள் பிரசங்கிப்பதை போல் நானும் பிரசங்கித்தால் "**நானே செயல்படுத்தாத ஒன்றை மற்றவர்கள் செய்யும்படி கூறும் ஓர் பரிசேயனாய் மாறிவிடுவேன்!**" யாரெல்லாம் வடஇந்தியா வில் வசித்து, தங்கள் பிள்ளைகளை அங்குள்ள கஷ்ட சூழ்நிலைகளில்

வளர்த்து ஆளாக்கினார்களோ, அவர்கள் மாத்திரமே மற்றவர்களுக்கு மிஷனரி சவால் கொடுத்திட உரிமை பெற்றவர்கள். இதற்கு நேர்மாறாய் செய்கின்ற அனைவருமே பரிசேயர்கள்! இந்த அடிப்படை சாரமானது, வாழ்வின் பல்வேறு பகுதிகளுக்கும் பொருந்தும்!!

நீங்களே அப்பியாசப்படுத்தாத யாதொரு விசயத்தையும், மற்றவர்களுக்கு ஒருபோதும் பிரசங்கிக்காதீர்கள்! உங்கள் வீட்டில் உள்ள வாலிப பிள்ளைகளை சரியான இடத்திற்கு நீங்கள் கொண்டு வராத நிலையில், யாரோ சில பெற்றோர்களுக்கு 'அவர்களின் வாலிப பிள்ளைகளை எவ்வாறு நடத்த வேண்டும்?' என புத்தி சொல்ல ஒருபோதும் முயற்சிக்காதீர்கள்! அது, திருமணமாகாத ஒருவன், சில பெற்றோர்களைப் பார்த்து "உங்கள் பிள்ளைகளை இவ்விதமாய் வளர்த்திடுங்கள்!" எனக்கூறும் மதியீனத்திற்கே ஒப்பாகும்! அநேக சமயங்களில் "புத்திசொல்ல துடிக்கும் நம் வாயை பொத்திக் கொண்டு" அவர்களுக்காக ஜெபம் மாத்திரமே செய்திருந்தால்கூட, நாம் பிறரை ஆசீர்வதித்திருக்க முடியும்!

நீங்கள் முதலாவது இரசாயண பாடத்தை படிக்காமாலேயே பிறருக்கு இரசாயணத்தை சொல்லித்தர முடியுமா? அது ஒருக்காலும் முடியாது. நீங்கள் படித்த கல்லூரி பட்டம் ஆங்கிலமாய் இருந்தால், ஆங்கில பாடத்தை மாத்திரமே நீங்கள் போதிக்க முடியும்! இந்த சாதாரண உண்மையை எல்லா ஆசிரியர்களுமே அறிந்திருக்கிறார்கள்! இருப்பினும் இவ்வளவு எளிதான இந்த பாடத்தை பரிசேயர்கள் அறியாதிருப்பது.... துரதிருஷ்டம்!!

---

## குணாதிசயம் -19

**பரிசேயர்கள் பிறர்மீது பாரமான சுமைகளை சுமத்துகிறார்கள்:**

*"சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின் மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொட மாட்டார்கள்" (மத்தேயு. 23:4).*

மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமென்ற உயர்ந்த தரத்தை பிரசங்கித்து, அதன் மூலமாய் தங்களை ஆவிக்குரியவர்களாய் தோற்றமளித்திட முயற்சிக்கிறார்கள், இந்த பரிசேயர்கள்! ஆனால், இவர்களோ அந்த தரத்தின்படி வாழ்வதில்லை!!

பல வருடங்களுக்கு முன்பு ஓர் வாலிபர் முகாமிற்கு அழைக்கப்பட்டிருந்த இரண்டு செய்தியாளர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். என்னோடு வந்த செய்தியாளர் "நாம் பணத்தை தசமபாகம் கொடுப்பதைப் போலவே, நம் நேரத்தையும் தேவனுக்கு தசமபாகமாய் தர வேண்டும்" என பிரசங்கித்தார். அதாவது, ஒவ்வொருநாளும் வேத வாசிப்பிற்கும் ஜெபத்திற்கும் என இரண்டு மணி 24 நிமிடங்கள் நாம் ஒவ்வொருவரும் செலவு செய்திட வேண்டும் என பிரசங்கித்தார்!

*செய்தியை தொடர்ந்து வந்த கேள்வி - பதில் நேரத்தில், ஓர் வாலிபன் என்னைப் பார்த்து " நேரத்தை தசமபாகம் தர வேண்டும் என்ற இந்த போதகத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?" என கேட்டார். அதற்கு நான் " இதை நான் ஏற்றுக்கொள்வதில்லை" என கூறிவிட்டு, அந்த செய்தியாளரிடமே நேருக்கு நேராய் "சகோதரரே நீங்கள் ஒவ்வொரு நாளும் வேதவாசிப்பிற்கும் ஜெபத்திற்கும் என 2 மணி 24 நிமிடங்கள் செலவழிக்கிறீர்களா?" என கேட்டேன். சற்று வெட்கத்தோடு "இல்லை!" என பதில் கூறினார். அப்போதுதான் எல்லோரும் அவருடைய மாய்மால பரிசேயத்துவத்தை கண்டார்கள்! பிறர்மீது பாரத்தை சுமத்தும் இவர்கள், தாங்களோ அதை சிறிதேனும் தூக்கிட முயற்சித்ததில்லை! இது ஒரு சிறிய உதாரணமே ஆகும்.*

*இன்னும் சிலர், மற்றவர்களை அவர்களுடைய வருமானத்தில் தசமபாகம் (10%) செலுத்தும்படி கட்டாயப்படுத்துவார்கள். ஆனால் அவர்களோ தங்கள் மொத்த வருமானத்தில் அவ்வாறு 10% தருவதில் லை. இவர்களே மாய்மாலம் கொண்ட பரிசேயர்கள்! இவ்வாறாக தாங்களே வாழாத, மேற்கொள்ள முடியாத, உயர்ந்த தரங்களை ஜனங்களுக்கு முன்பாக வைத்து விடுகிற "பரிசேயத்துவ பிரசங்கிகளால்" இன்றைய கிறிஸ்தவ உலகம் நிறைந்திருக்கிறது! இவ்வித பிரசங்கிகள் பாபிலோனை கட்டியெழுப்பி, தேவனுடைய பணிக்கோ அழிவை கொண்டு வருகிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தையை கையாண்டு 'ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கு பதிலாய்', அவர்களுக்கு பெருஞ் சுமையைத்தான் கொண்டு வருகிறார்கள்.*

*மத்தேயு 23:4-ம் வசனத்தை-*Message *வேதாகம மொழிபெயர்ப்பு கீழ்கண்டவாறு கூறுகிறது: " தேவனுடைய வார்த்தையை, புசிப்பிற்கும் குடிப்பிற்கும் உகந்த* **தேவனுடைய விருந்தின் மேஜையாக** *வழங்குவதற்கு பதிலாய், அவருடைய வார்த்தையை "***விதிமுறைகள் நிறைந்த பொதிகளாய்***" அதை மிருகத்தின் மேல் ஏற்றுவதைப்போல் உங்கள் மீது ஏற்றுகிறார் கள்! அந்த சுமைகளை சுமக்க முடியாமல் அவர்கள் தள்ளாடுவதை கண்டு ரசிக்கிறார்கள்! ஒரு சுண்டுவிரலால் அவர்களுக்கு உதவிசெய்து பாரத்தை குறைக்க சிந்தையற்றவர்களாய் இருக்கிறார்கள்."*

*இது போன்ற பரிசேயத்துவ பிரசங்கிகள் நிமித்தமே, அநேக வாலிபப் பிள்ளைகள் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஆர்வத்தை இழந்திருக்கிறார்கள். பரிசேயர்கள் பிரசங்கித்த அதே பழைய ஏற்பாட்டிலிருந்துதான் இயேசுவும் பிரசங்கித்தார்! ஆனால் இயேசுவோ அந்த வேத வாக்கியங்களைக் கொண்டு ஜனங்களை விடுவித்தார்! அதே வேத வாக்கியங்களைக் கொண்டு, பரிசேயர்களோ அவர்களுக்கு பெரிய விலங்குகளைப் பூட்டி கட்டி வைத்தார்கள்! இன்றும், பரிசேயர்களின் பிரசங்கங்களால் 'இதே கதிதான்' மக்களுக்கு சம்பவிக்கிறது!!*

## குணாதிசயம் -20

**பரிசேயர்கள் மனுஷர்களிடமிருந்து கனத்தை தேடுகிறார்கள்:**

*"பரிசேயர்கள் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காண வேண்டுமென்று செய்கிறார்கள்" (மத்தேயு:23:5).*

*சந்தைவெளிகளில் நின்று உரத்த சத்தமாய் பரிசேயர்கள் ஜெபம் செய்வார்கள் என்று இயேசு கூறினார் (மத்தேயு.6:1). ஓர் நோக்கத்தை வைத்துதான், இவ்வித வார்த்தைகளை இயேசு மிகைப்படுத்தி கூறினார். எப்போதெல்லாம் ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்த இயேசு விரும்பினாரோ, "அதை" மிகைப்படுத்தி பேசுவதில் அவர் தலை சிறந்தவராய் இருந்தார். ஒரு சமயம் ஜனங்கள் கண்ணில்* "**உத்திரம் இருப்பதாக**" *கூறினார்! மற்றொரு சமயம்* "**ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்!**" *எனக் கூறினார். இந்த இயேசுவின் மாதிரியை பின்பற்றி, சில காரியத்தை வலியுறுத்தும்படி நானும் மிகைப்படுத்தி பேச எத்தனித்திருக்கிறேன்! ஒரு அறிக்கை விபரங்களை தரும்போது நிச்சயமாய் நாம் எதையும் மிகைப்படுத்த கூடாது! ஒரு கூட்டத்திற்கு 150 ஜனங்கள் மாத்திரமே வந்திருந்தால் 200 ஜனங்கள் வந்தார்கள்!" என கூறிடக் கூடாது. ஆனால் இயேசு ஒரு காரியத்தை வலியுறுத்த மிகைப்படுத்திய விதமானது "தரம் நிறைந்ததாய்" இருந்தது!*

*ஜனங்களிடமிருந்து புகழ்ச்சியை பெறுவதற்காக பரிசேயர்கள் ஜெபித்ததைக் குறித்து இயேசு ஒருமுறை பேசினார். இப்போது நாமும் கூட பொதுஇடங்களில் ஜெபித்தபோது, மற்றவர்களிடமிருந்து புகழ்ச்சியை பெறுவதற்காக ஜெபித்ததில்லையா? நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, யாராவது சிலர் நம் ஜெபத்திற்கு* "**அல்லேலூயா**" *என்றோ அல்லது* "**ஆமென்**" *என்றோ சொல்லுவதை ஆசையுடன் கவனித்து கேட்டிருக்கிறோம் அல்லவா?*

**இவ்வாறு, தேவனிடம் ஜெபிக்காமல் ஜனங்களுக்காக ஜெபித்ததுதான் பரிசேயத்துவம்! "இந்த பாவத்திலிருந்து" நம்மை நாமே கழுவிக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.**

*புகழ்ச்சியை பெறுவதற்காகவே பிரசங்கிகள் பிரசங்கித்திட முடியுமா!? நான் பிரசங்கித்த ஒவ்வொரு பிரசங்கத்திற்குப் பிறகும் என்னை நானே நியாயந்தீர்த்திருக்கிறேன். இந்த பிரசங்கத்தை தேவனை பிரியப்படுத்தும்படி செய்தேனா? அல்லது மனுஷரைப் பிரியப்படுத்தும் படி செய்தேனா? என்றும், என் பிரசங்க தரத்தை எவ்விதத்தில் தரமுள்ளதாய் மாற்ற வேண்டும்? என்றும் நிதானித்திருக்கிறேன். எந்தவொரு சமையல்காரனும், சமைத்தவுடன் தன் சமையல் திறனை மேம்படுத்திக் கொள்ளவே விரும்புவான். ஆனால், துரதிருஷ்டவசமாய் வெகுகுறைவான பிரசங்கிகளே தங்கள் பிரசங்க தரத்தை மேம்படுத்திக் கொள்ள*

நாடியிருக்கிறார்கள். ஆகவேதான், பெரும்பாலான பிரசங்கிகள் எப்போது பிரசங்கித்தாலும், அதை கேட்பது போரடிப்பதாகவே உள்ளது. அது ஏனெனில், தாங்கள் வல்லமைமிக்க அபிஷேகத்தோடு செய்தியை வழங்கியதாக, தாங்களாகவே எண்ணிக் கொண்டு அகங்காரம் கொண்டிருக்கிறார்கள்! தன் சொந்த மனைவியிடம் கூட "இன்று என் பிரசங்கத்தைக் குறித்து என்ன எண்ணுகிறாய்?" என கேட்டிருக்க மாட்டார்கள்! கடந்த பல ஆண்டுகளாய் என் பிரசங்க தரத்தை மேம்படுத்த நான் தொடர்ச்சியாய் வாஞ்சித்திருக்கிறேன். ஏனென்றால், இயேசு பிரசங்கித்த விதமாகவே என்னுடைய பிரசங்கமும் கேட்பவருடைய **இருதயத்தை பற்றிக்கொள்வதாய்** இருக்க விரும்புகிறேன்! மேலும், இயேசுவிடமிருந்த அதே அக்கினி! அதே வைராக்கியம்! என் பிரசங்கத்திலும் இருக்க விரும்புகிறேன்!!

நாம் ஜனங்களிடமிருந்து கனத்தை பெறுவதற்காகவே சோதிக்கப் படும் வேறு பல பகுதிகளும் உண்டு! உங்கள் ஊழியத்தைக் குறித்த செய்திகளை நீங்கள் எழுதும் போது, அது தேவனை மகிமைப்படுத்து வதாக இல்லாமல், நீங்கள் தேவனுக்காக செய்தவைகளை வைத்து மற்றவர்களைக் கவர்ச்சிப்பதற்காகவே இருக்ககூடும். 1975-ம் ஆண்டு ஆரம்பித்த எங்கள் சபையிலே, ஒருமுறைகூட யாதொரு அறிக்கையோ அல்லது எங்கள் ஊழியத்தைக் குறித்த புகைப்படத்தையோ இந்த உலகத்தில் ஒருவருக்கும், ஒரு இடத்திற்கும் நாங்கள் அனுப்பியதில்லை!

**நாங்கள் எவ்வாறு ஊழியம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை தேவன் மாத்திரமே அறிந்திருந்தால், அதுவே போதுமானது! என நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.**

"ஜனங்களிடமிருந்து கனத்தை தேடுவது " பாவம்! என்று, அநேக சபைகளில் **பேசப்படாத பாவங்களில் ஒன்றாகவே** இருக்கிறது. "கனத்தை தேடுவது" ஒரு மனிதனை பரிசேயனாய் மாற்றி விடுகிறது! இவ்வித பரிசேயர்கள் பாபிலோனை மாத்திரமே கட்டுவார்கள்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உண்மையான சபையை கட்டுவதற்கோ, "**ஜனங்களின் புகழ்ச்சியைத் தேடும்**" எல்லா பகுதிகளிலிருந் தும் நம்மை கழுவிக் கொள்ள வேண்டும்!

# குணாதிசயம் -21

**உடுத்தும் உடையில் பரிசுத்தம் இருப்பதாக பரிசேயர்கள் எண்ணினார்கள்:**

*"தங்கள் காப்பு நாடாக்களை (வேத வாக்கியங்கள் பொறித்த சிறிய பை போன்ற சதுரங்களை நெற்றியில் அணிந்திருப்பார்கள்) அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கி இருப்பார்கள்" (மத்தேயு 23:5).*

பரிசேயர்களின் மற்றொரு குணாதிசயம், தங்கள் ஆடைகளில் "பரிசுத்தம்" காண்பதாக மேன்மை பாரட்டுவார்கள். இஸ்ரவேலர்கள் தங்கள் வஸ்திர ஓரங்களில் இளநீலநிற 'நாடவை தைத்து' அதின் விளிம் பில் குஞ்சங்கள் தொங்கியிருக்கும்படி கூறியிருந்தார். அந்த நீலநிற குஞ்சங்களைக் காணும்போதெல்லாம் "தேவனுடைய கற்பனைகள் பரத்திலிருந்து வந்ததை" இஸ்ரவேலர்கள் நினைவு கூறவேண்டுமென கூறியிருந்தார் (எண் 15:38).

பரிசேயர்களோ அந்த குஞ்சங்களின் தொங்கல்களை சற்று நீளமாய் தொங்கவிட்டு கொள்வார்கள். மற்றவர்களின் தொங்கல்கள் 3-அங்குலம் இருக்கையில் இவர்களின் தொங்கல்கள் 6-அங்குலம் இருப் பதை வைத்து தங்களின் பரிசுத்தத்தில் மேன்மை பாரட்டினார்கள்!

இன்றும், தாங்கள் உடுத்தும் "பரிசுத்த உடைகளில்" மேன்மை பாரட்டும் பரிசேயர்கள் அநேகர் இருக்கிறார்கள்! 'ஹவாய்' சட்டை ஒன்றை யாரோ ஒருவர் எனக்கு கொடுத்தார். அந்த சட்டையை நான் உடுத்தியிருப்பதைக் கண்ட சில விசுவாசிகள் அதிர்ச்சியடைந்தார்கள்! அந்த அதிர்ச்சிதான் அவர்களின் பரிசேயத்துவத்தை வெளிகாட்டு வதாய் இருக்கிறது. இவ்வாறு, கிறிஸ்துவின் அணுகுமுறைக்கு மாறு பாடான அநேக மனநோக்கங்களை ஜனங்கள் வைத்திருக்கிறார்கள். அது ஏனென்றால், வேத வாக்கியங்களை போதுமான அளவு ஜனங்கள் தியானிப்பதில்லை. சில குறிப்பிட்ட நிறம் கொண்ட சட்டை யை உடுத்தினால், மற்றவர்கள் நம்மை குறித்து என்ன எண்ணுவார்கள்? என ஜனங்களுக்கே பயப்படுகிறார்கள். **ஆனால் இயேசுவின் பரிசுத்தமோ "அவர் உடுத்திய உடுப்பில்" இருக்கவில்லை!**

மற்றவர்கள் உடுத்தியிருக்கும் உடுப்புகளையும், ஷூக்களையும், கம்மல்களையும் கவனித்து பார்த்து...... பரிசேயர்கள் விமர்சிக்கிறார்கள். இவர்களின் கண்கள் " கழுகின் கண்களைப்" போலவே இருக்கிறது. "பெண்களுக்குரிய மெல்லிய வஸ்திரமாய்" புருஷர்களின் ஆடை இருப் பதை இயேசு தடைசெய்தார்! (மத் 11:8). ஸ்திரீகளும், தங்களை தகுதியான, எளிய வஸ்திரத்தினால் உடுத்திக் கொள்ளும்படி பரிசுத்தாவியானவர் 1 தீமோ 2:9, 1பேதுரு 3:3 வசனங்களில் கூறியுள்ளார்! இவைகளை தவிர, நம் உடுத்தும் உடுப்பில் பரிசுத்தம் இருப்பதில்லை. பிரதானமாய், பரிசுத்தம் நம் உள்ளான அந்தரங்கத்தில் காணப்படுவதே ஆகும்!!

# குணாதிசயம் -22

**பரிசேயர்கள் பதவிகளையும், கனத்திற்குரிய பட்டங்களையும் விரும்புவார்கள்:**

*"விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும் மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கபடாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத் 23: 6-8).*

ஒரு சபையில் மூப்பர்களாகி, அதற்குரிய கனத்தை பரிசேயர்கள் விரும்பினார்கள். தன் கணவர் மூப்பர் என்று பெருமை கொண்டாடும் பரிசேயத்துவ மனைவிமார்களும் இருக்கிறார்கள். ஓர் சபைக்கு நீங்கள் மூப்பராய் இருப்பதனிமித்தமும் அல்லது உங்கள் கணவர் ஓர் சபையின் மூப்பராய் இருப்பதனிமித்தமும் "மிகச் சிறிய கடுகளவு பெருமை" உங்களுக்கு இருந்தாலும், நீங்கள் நிச்சயமாய் ஒரு பரிசேயனுக்குரிய முதல் தரத்தில் இருக்கிறீர்கள். இதுபோன்ற மூப்பர்கள் "பாபிலோனை" மாத்திரமே கட்ட முடியும். அன்று தங்களை 'ரபீ' என அழைக்கபட விரும்பிய பரிசேயர்களுக்கும், இன்று தங்களை பாஸ்டர்! Rev! Rt.Rev! தந்தை!.... இன்னும் இதுபோன்ற குப்பையான பட்டங்களை தங்களுக்கென நாடும் கிறிஸ்தவ தலைவர்களுக்கும் எந்த வித்தியாசமுமில்லை!

மேலே குறிப்பிட்ட மத்தேயு 23:8-12 வசனங்களில் The Message வேதாகமம் கீழ்கண்டவாறு கூறுகின்றது: "ஜனங்கள் உங்களை "பீடாதிபதியாக" உட்கார வைத்திட அனுமதிக்காதீர்கள். உங்களுக்கு ஒரே ஒரு போதகர் மாத்திரம் உண்டு. நீங்கள் அனைவருமே வகுப்பு தோழர்கள் தான்! (Class mates) உங்கள் ஜீவியத்திற்கு மேலாக, யாதொரு நபரையும் "நீங்கள் என்ன செய்ய வேண்டும் என கட்டளையிடும், 'குருஜியாக' வைத்துவிடாதீர்கள்." அந்த அதிகாரத்தை தேவனுக்கு மாத்திரமே கொடுத்திருக்க ஜாக்கிரதையாயிருங்கள். "நீங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்பதை தேவன் மாத்திரமே கூற வேண்டும். உங்களுக்கு பிதா ஒருவரே! அவர் பரலோகத்தில் இருக்கிறார். ஆகவே ஜனங்கள் உங்களை ஆட்டிப்படைக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். உங்களுக்கும், அவர்களுக்கும் ஜீவன் தந்து நடத்துபவர் ஒருவரே ஆவார், அவர்..... கிறிஸ்து! நீங்கள் நிலைநிற்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கீழே இறங்கி, ஒரு வேலைக்காரனாய் மாறுங்கள்! உங்களுக்குள் கொஞ்சம் பெருமை உப்பிவிட்டால் 'ஒரு காற்று கூட' உங்களை கிழே தள்ளி விடும். ஆனால் நீங்கள் இருக்கும் வண்ணமாகவே இருந்துவிட திருப்தி கொண்டவராய் இருந்தால், உங்களின் ஜீவியம் எண்ணற்றோருக்கு பயன்படும்!" என வாசிக்கிறோம்.

எங்கள் சபைகளில் அநேக விசுவாசிகள், என்னை "அவர்களின்

ஜீவியத்திற்கு பொறுப்பாளியாய்" என்னை மாற்றுவதற்கு முயற்சித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும்? என கூறும்படி என்னிடம் கேட்பார்கள். நானோ, அவ்வாறு கூற மறுத்து விடுவேன். அவர்களுக்கு என் ஆலோசனைகளை மாத்திரமே தந்து, நீங்கள் முதலாவது தேவனிடத்திற்கு போய், நான் சொல்லுவதை நீங்கள் செய்யலாமா? என தேவனிடம் கேளுங்கள்!.....

**அதைக் குறித்து உங்கள் உள்ளத்தில், சமாதானத்தை தேவன் தரவில்லை யென்றால், என்னுடைய ஆலோசனையை தூக்கி ஏறிந்துவிட்டு, தேவன் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள்! கிறிஸ்து மாத்திரமே உங்கள் தலைவராய் இருக்க வேண்டும்" என்றே கூறுகிறேன்.**

ஏராளமான சபைத்தலைவர்கள் "இந்த பகுதியில்" கிறிஸ்துவின் போதகத்தை பின்பற்றுவதே இல்லை! மாறாக, ஜனங்களின் தனிப்பட்ட ஜீவியத்தில் 'அவர்கள் எப்படி நடக்க வேண்டும்?' என அவர்களிடம் கூறுவதற்கே ஆசை கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற மூப்பர்களே பரிசேயர்கள்...... இவர்கள், பாபிலோனையே கட்டிகொண்டு இருக்கிறார்கள்! இவர்களும் பிராமணத்திற்கு கீழ் வாழ்ந்து கொண்டு, தங்கள் மந்தையையும் பிராமணத்திற்கு அடிமை ஆக்குகிறார்கள்! "**ஆவியானவர் வழங்கிடும் சுயாதீனத்தை** இவர்கள் அறிந்தது இல்லை...... ஏனெனில், இவர்கள் பட்டங்களையும், பதவிகளையும், பவுசுகளையும் நாடுகிறார்கள்!!" என்பதே காரணம் ஆகும்.

---

## குணாதிசயம் -23

**பரிசேயர்கள் பிறரை கறைப்படுத்துகிறார்கள்:**

*"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதனிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்" (மத் 23:14).*

தங்களின் வாலிப வயதில் மிகுந்த உத்தமத்தோடு "விசுவாசிகளாய்" மாறிய அநேகர் இந்த பரிசேயத்துவ தலைவர்களால் கெடுக்கப்பட்டு போகிறார்கள். இந்த வாலிபர்கள் இரட்சிக்கப்பட்ட துவக்கத்தில் பாவத்தை ஜெயிப்பதற்கும், தேவனுக்காக வாழ்வதற்கும் மிகுந்த வைராக்கியம் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த வாலிபர்களோ, தங்கள் தலைவர்கள் பெரிய மேடைகளில் சினிமா நடிகர்களைப் போல் நிற்பதையும், பிரசங்கம் செய்தவுடன் "இயேசுவின் நாமத்தில்" ஏராளமான பணத்தை ஜனங்களிடமிருந்து வசூல் செய்து, அதைக் கொண்டு ஆடம்பரமாய் சினிமா நடிகர்களைப் போல் வாழ்வதையும் காண்கிறார்கள்!

இவ்வாறாக, **இயேசுவைப் பின்பற்றி அவரைப்போல்** வாழ விருப்பம் கொண்டு வந்த இந்த இளைஞர்கள், இப்போது, புகழ் பெற்ற "**சினிமா – நடிகர்களைப் போல்**" வாழ்ந்து விடலாம் என கற்பனை செய்து கொள்கிறார்கள். இவ்வாறாக, இந்த பரிசேயத்துவமான தலைவர்கள் எளிய ஜனங்களைக் கறைபடுத்தி.... அவர்கள் இயேசுவைப் பின்பற்றி

*தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கு தடையாய் நிற்கிறார்கள்!*

**இன்றைய இளைஞர்கள், தாங்கள் பின்பற்றத் தகுந்த "நல்ல மாதிரிகள்" இல்லாமல் தவிக்கிறார்கள்.** *துரதிருஷ்டவசமாய், "நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல் நீங்கள் என்னை பின்பற்றுங்கள்" (கொலோசெயர் 11:1, பிலிப்பியர் 3:17) என பவுல் கூறியதைப் போல் இன்று கூறும் பிரசங்கிகள் அபூர்வமாகிப் போனார்கள். ஆகவே இன்றைய வாலிபர்களுக்கு நான் சொல்லுகிறேன்: "இயேசுவை நோக்கிப் பார்த்து அவருடைய மாதிரியை பின்பற்றுங்கள்!" யாராவது சிலர், இயேசுவை தீவிரமாய் பின்பற்றுவதை நீங்கள் கண்டால், அவரை நோக்கி பார்த்து, அவருடைய மாதிரியையும் பின்பற்றுங்கள்.*

---

## குணாதிசயம் -24

**பரிசேயர்கள் ஏழை ஜனங்களிடமும் ஆதாயம் தேடுகிறார்கள்:**

*"பரிசயரே! ....... விதவைகளின் வீடுகளைப் பட்சித்து போடுகிறீர்கள்" (மத் 23:14).*

*எந்த விதத்தில் விதவைகளின் வீடுகளை இந்த பரிசேயர்கள் "பட்சித்தார்கள்" என துல்லியமாக நமக்குத் தரப்படவில்லை. ஒரு வேளை, இந்த ஏழை விதவைகள், அவர்களின் சொத்துக்களை "கர்த்தருடைய ஊழியத்திற்கே" தரும்படி தூண்டியிருக்கலாம். அவ்வாறு கொடுத்தால் "அதனிமித்தம் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார்!" என்றெல்லாம் கூறி, அவர்களின் சொத்துக்களை அபகரித்து தங்கள் சொகுசு வாழ்விற்கு அனுபவித்திருக்கக் கூடும். இவ்வாறாக, விதவைகளிடமிருந்து கூட கொள்ளையடித்தார்கள்! சுமார் 700-ஆண்டு களுக்கு முன்பு இருந்த இஸ்ரவேலின் அநீதியான நியாயதிபதிகள் (ஏசாயா 10:12) செய்ததைப் போலவே இவர்களும் செய்தார்கள்!!*

*இவ்வாறு, ஏழை மக்களை கொள்ளையடிக்கும் செயல் இந்த 21-வது நூற்றாண்டிலும் தொடர்ந்து சம்பவித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஏழை விதவைகள், ஏழை பென்சன்தாரர்களையும் கொள்ளையிடுவதில் கிறிஸ்தவ T.V. பிரசங்கிகள் கைதேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து அதிக தொகைகளை பெறுவதற்காக, எங்கள் ஊழியத்திற்கு நீங்கள் பணம் கொடுத்தால் "தேவன் உங்களை ஆசீர்வதித்து உங்கள் நோய்களையெல்லாம் சுகமாக்குவார்" போன்ற திட்டவட்டமான நம்பிக்கைகளை வழங்குகிறார்கள்!*

வயதான விதவைகளுக்கும், வயதான பென்சன்தாரர்களுக்கும் அநேக வியாதிகளும் மற்றும் பல பிரச்சனைகளும் இருப்பதை இந்த T.V பிரசங்கிகள் அறிந்திருக்கிறபடியால்.....

*..... இவ்வாறு தன் சொந்த ஆதாயத்திற்காக அவர்களை கொள்ளையடித்து விடுகிறார்கள்! மன அழுத்தத்திற்கு ஏதுவான தந்திர வார்த்தை*

*களையும், உணர்ச்சி பூர்வமாய் தங்கள் ஊழியத் தேவைகளையும் அதற்கு ஏற்ற வேதாகம வசனங்களையும் அவர்கள் முன் வைத்து, இந்த ஏழை ஜனங்களின் பணங்களைப் பிதிக்கி எடுத்து, ஒட்ட கரந்து விடுகிறார்கள்!!*

*இந்த ஏழை விதவைகள் "இந்த பேராசை கொண்ட" ஏமாற்று காரர்களை நம்பி தங்களின் கொஞ்ச-நஞ்ச சேமிப்புகளையும் அனுப்பி விடுகிறார்கள்! இந்தப் பிரசங்கிகளோ அந்தப் பணத்தைக் கொண்டு ஆடம்பரமாய் வாழவும், சொத்துக்களை குவிக்கவும்..... இன்னும் சிலர் தங்களுக்கென " ஜெட் விமானத்தைக் கூட" வாங்கி, உல்லாசமாய் இருக்கிறார்கள். சமீப வருடங்களில்தான் இதுபோன்ற கொள்ளையடிக் கும் ஊழியங்கள் அமெரிக்காவில் துவங்கியது! இப்போதோ, அது உலகம் முழுவதும் பரவி, ஏராளமான இந்தியப் பிரசங்கிகளையும் ஆட் கொண்டிருக்கிறது. இதுபோன்ற பரிசேயர்கள் பகல் கொள்ளை காரரும் திருடரும் ஆவார்கள்! பவுல் தன்னுடைய ஜீவியத்தின் கடைசி நாட்களில் கொடுத்த சாட்சி எத்தனை அற்புதமாய் இருக்கிறது! ஆம், "நாங்கள் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை! ஒருவனையும் கெடுக்கவில்லை! ஒருவனையும் வஞ்சிக்கவில்லை!" ( 2கொரி 7:2) என்றே கூறினார். எந்த தேவ ஊழியக்காரனின் ஜீவியத்தின் முடிவிலும் இந்த சாட்சியே இருக்க வேண்டும்!எந்த வகையானலும், ஏழை விசுவாசிகளை சுரண்டி ஆதாயம் பார்ப்பது மகா தீமையும் பேய்த்தனமும் ஆகும்!!*

---

## குணாதிசயம் -25

**பரிசேயர்கள், பொதுவான இடங்களில் நீண்ட கவர்ச்சியான ஜெபங்களை செய்வார்கள்:**

*"மாயக்காரராகிய பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணுகிறபடியால்...... அதிக ஆக்கினையை அடைவீர்கள்" (மத்.23:14).*

*யாரெல்லாம் பொது இடங்களில் நீண்ட ஜெபம் செய்கிறார் களோ, அவர்கள் யாவரும் தங்கள் தனிப்பட்ட ஜீவியத்தில் ஜெபமே இல்லாதிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் பரிசேயர்கள். அடுத்தமுறை, யாராவது ஒருவர் நீண்ட ஜெபம் செய்வதை நீங்கள் கண்டால், "அவர் ஓர் பரிசேயர்" என்பதை இனம் காணுங்கள்! பொதுவான துதி செலுத்தும் நேரத்தில், "***ஒவ்வொருவரும் தங்கள் துதியை ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் மாத்திரமே செய்யுங்கள்***" என, அதை நடத்தும் தலைவர் கூறினால், ஒவ்வொருவரும் கீழ்படிந்து அப்படியே செய்ய வேண்டும். ஆனால் பரிசேயர்களோ, அதை கவனிக்கவோ கீழ்படியவோ மாட்டார்கள். அவர்களின் ஜெபம், மற்றவர்களின் ஜெபத்தைவிட நீண்டதாய் இருக்க வேண்டுமென்றே எண்ணுகிறார்கள். இதற்கு ஒரே காரணம் அவர்களின் அகங்காரம், அவர்களின் பெருமை.... தங்களைக் குறித்து மேன்மையாக எண்ணிண அவர்களின் எண்ணம்! அவ்வளவுதான்.*

வேதாகமம் பிரசங்கிகளைப் பார்த்து "உங்களுக்கு அருளப்பட்ட **விசுவாச அளவின்படியே** தீர்க்கதரிசனம் சொல்லுங்கள்!"(ரோமர் 12 :6). என கட்டளையிடுகிறது. அதாவது, அவர்களின் பிரசங்க நீளம், அவர்களது முதிர்ச்சியின் விகிதப்படி இருக்க வேண்டும். ஆனால், நான் சந்தித்த 90% சபை தலைவர்கள் 'நீண்ட' போர் அடிக்கும் பிரசங்கங் களைச் செய்து, ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் இந்த கட்டளைக்கு கீழ்படியாது இருக்கிறார்கள். மீண்டுமாய், இவர்களின் இந்த கீழ்படியாமைக்கு ஒரே காரணம் "இவர்கள் தங்களைக் குறித்து உயர்ந்த மேலான எண்ணம் கொண்டிருக்கிறார்கள்", என்பதுதான்!

---

## குணாதிசயம் -26

**பரிசேயர்கள் மிஷனரி ஊழியம் செய்து, அவர்களை இரட்டிப்பான நரகத்தின் மகனாக ஆக்குகிறார்கள்:**

*"மாயக்காரராகிய பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது, அவனை உங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" (மத் 23:15).*

பரிசேயர்கள், மிஷனரிஊழிய மனதுடையவர்களாக இருக்க கூடும். ஆனால், அவர்களிடம் "இரட்சிக்கப்பட்டதாக கூறப்பட்டு" வந்தவர்கள் நரகத்திற்கே செல்லுகிறார்கள். அது ஏனென்றால், அவர் களிடம் வந்தவர்களை மெய்யான மனந்திரும்புதலுக்கும் விசுவாசத் திற்கும் இந்த பரிசேயர்கள் நடத்தவில்லை.

ஒருவன் தியாகங்கள் பல புரிந்து "மார்க்க கிரியைகளில்" ஈடுபடுவதற்கும், தன் வாழ்வில் "தேவசித்தம்" செய்வதற்கும் இடையில் ஏராளமான வித்தியாசம் உள்ளது. இவர்கள் "முழு நேர கிறிஸ்தவ ஊழியர்களாயும்" இருப்பார்கள். இருப்பினும், இவர்களிடம் இரட்சிக் கப்பட்டு வந்தவர்கள் இன்னமும் இரட்டிப்பான நரகத்தின் பிள்ளை களாகவே இருக்கிறார்கள்.

ஏனெனில் இந்த ஜனங்களிடம் இவர்கள் "மனந்திரும்புதலை" பிரசங்கிப்பதே இல்லை. தங்களின் பாவ வழிகளை விட்டு விலகாமலே..... அவர்களிடம் விசுவாசம் இருப்பதாக கூறி, வந்த ஜனங்கள் யாவரும் மறுபிறப்பு அடைந்து விட்டதாக போலியான உறுதியை அவர்களுக்கு வழங்குகிறார்கள்.

அது போலவே, அவர்கள் மெய்யாகவே பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெறாதிருந்தும் "அந்நியபாஷை" பேசியதை வைத்து, அவர்கள் அபிஷேகம் பெற்றுவிட்டார்கள் என அறிவிக்கிறார்கள். ஆனால் இவர்கள் பேசிய அந்நியபாஷைக்கும், மெய்யான அந்நிய பாஷை வரத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருப்பதில்லை! இவ்வாறா கவே, ஜனங்களை இரட்டிப்பான நரகத்திற்கு பாத்திரராக்குகிறார்கள்.

*இவர்கள் ஏற்கனவே பாவத்தில்தான் ஜீவித்து கொண்டு இருந்தார்கள். இப்போதோ, நரகத்தின் பிள்ளைகளாய் உருமாற்றம் அடையத் துவங்கி விட்டார்கள்!*

*இவ்வித நிலையில், சில பரிசேயத்துவமான பிரசங்கிகள், அவர்கள் பெற்ற இரட்சிப்பு "நித்திய பாதுகாப்பிற்குரியது" என்ற பொய்யான உறுதியை வழங்குகிறார்கள். பாவத்தைக் குறித்த மனநிலை இவர் களிடம் சிறிதேனும் மாறாதிருக்கும் நிலையில், இந்த ஜனங்களோ வெறுமென* **"கர்த்தராகிய இயேசுவே வாரும்!" என திரும்பத் திரும்ப மந்திரவார்த்தை யைப் போல்** *கூறியதினிமித்தம் "நித்திய பாதுகாப்பிற்குள்" வந்து விட்ட தாக அவர்களுக்கு அறிவித்து விடுகிறார்கள். இதை நம்பி தங்கள் சபைக்கு உள்ளே வந்துவிட்ட அவர்களிடம் "நீங்கள் கிரமமாய் மாதந்தோறும் தசமபாகம் செலுத்தி விடுங்கள்! பரலோகத்தில் நிச்சயம் உங்களுக்கு இடம் உண்டு" என வலியுறுத்தி போதிக்கிறார்கள். இவ்வாறாகவே சுவிசேஷத்திற்கு முரணாக இவர்களை வசப்படுத்தி கைப்பற்றிக் கொள்கிறார்கள்!*

*இந்த கதிக்கு வந்துவிட்ட இவர்கள், மெய்யான சுவிசேஷசெய்தியை கேட்டால்கூட "தாங்கள்* **நித்திய பாதுகாப்பிற்குள்** *வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டதின் நிமித்தம், சுவிசேஷசெய்தி வழங்கும் யாதொரு உணர்த்து தலுக்கும் தங்கள் இருதயத்தில் இடம் கொடுப்பதில்லை!" இப்படித் தான் இன்றும்கூட கொடுமையான வஞ்சகம் நிகழ்ந்து கொண்டிருக் கிறது. சிலர் பல வருடங்களாய் எங்கள் சபையில் இருந்த போதிலும், அவர்களிடம் "நீங்கள் இன்னமும் மறுபடியும் பிறக்கவில்லை!" என நான் கூறியிருக்கிறேன். ஆனால், பரிசேயத்துவ ஆவியில் சபை நடத்தும் மூத்த சகோதரர்களோ "ஓர் நபர் மறுபடியும் பிறந்திருக்கிறாரா? இல்லையா? என்பதை பகுத்தறிய முடியாத நிலையில்" இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சபைகளில், யார் வேண்டுமானாலும் வர அனுமதிக் கிறபடியால், இவர்கள் மூலமாய் பின்நாட்களில் ஏராளமான பிரச்சனைகள் அந்த சபைக்கு ஏற்பட்டு விடுகிறது!!*

*ஜனங்கள் ஏழையாய் இருப்பதினிமித்தம் அந்த "ஏழை ஜனங் களிடத்தில்" பரிசேயத்துவமான சில மூப்பர்கள் பாரபட்சமுள்ளவர் களாய் நடந்து..... தங்கள் சபையில் உள்ள அந்த ஜனங்களை "முக்கிய மானவர்களாக" உணரும்படி செய்கிறார்கள். எதற்காக இந்த முக்கியத் துவம்? "அவர்கள் ஏழைகள்!" அவ்வளவு தான். இது போன்ற மூப்பர்கள், யாக்கோபு 2:1,4 குறிப்பிடும் ஐஸ்வரியவான்களிடத்தில் பாரபட்சமாய் நடக்கும் மூப்பர்களுக்கு* **எதிர்மறையான பாரபட்சமுள்ளவர்களாய்** *இருக்கிறார் கள். இதுபோன்ற தீமையான அணுகுமுறைகள் "தங்களை உயர்வாய் எண்ணிக்கொள்ளும்" மூப்பர்களிடம் மலிந்து கிடக்கிறது! ஆகவே தான்,*

*இஸ்ரவேல் தலைவர்களை தேவன் எச்சரித்து "பாரபட்சத்தோடு தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக" (யாத் 23:3) எனக் கூறினார். ஏழை ஜனங்களை முக்கியமானவர்கள் என சபையில் எண்ண வைப்பதின்மூலம் 'அந்த ஏழை ஜனங்களை' இவர்கள் இரட்டிப்பான நரகத்தின் பிள்ளைகளாக்குகிறார்கள். ஏழையையும், பணக்காரனையும் சமநிலைப்படுத்தும் கம்யூனிசவாதி அல்ல, நானோ ஓர் கிறிஸ்தவன்! பணக்காரன் அல்லது ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல்..... யாரெல்லாம், தாழ்மையும் தேவனுக்குப் பயந்தும் இருக்கிறார்களோ, அவர்களை மாத்திரமே நான் மதிக்கிறேன்! ஆனால், இன்று ஏராளமான கிறிஸ்தவ தலைவர்கள் கம்பியூனிசத்தோடு கிறிஸ்தவத்தைப் புகுத்தி குழப்பம் உண்டாக்கியிருக்கிறார்கள்!*

*ஒரு சபை, இரண்டு வழியில் தங்களை வஞ்சித்துக்கொள்ள முடியும். முதலாவதாய், தங்கள் சபையில் பணக்காரர்களும், படித்தவர் களும், பண்புள்ள உயர்பதவியில் இருப்பவர்களும் ஏராளாம் இருப்பதி னிமித்தம், தங்கள் சபையை "உயர்வான சபையாய்" எண்ணிக் கொள் கிறார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலோனர் அவபக்தி நிறைந்த வர்களாய் இருக்கிறார்கள்!*

*இரண்டாவது வழியில், தங்கள் சபையில் யாதொரு பணக்காரரும் படித்தவரும் இல்லாமல் "கல்வி கற்காத, ஏழை ஜனக்கூட்டம்" தங்களோடு இருப்பதால், தங்கள் சபையை சிறந்த சபையாய் எண்ணிக் கொள்கிறார்கள்! ஆனால், இவர்களில் பெரும்பாலோனரும் அவபக்தி நிறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். இந்த இரண்டு சபைகளுக்கும் ஒன்றுக்கொன்று நிறம் மாத்திரமே வித்தியாசம் உண்டு! இந்த இரண்டு சபைகளும்* **பாபிலோனிய சபைகளே** *ஆகும்!*

*எனவே, ஏழை ஜனங்களை ஆவிக்குரியவர்கள் என்றோ அல்லது, ஐசுவரியவான்களை ஆவிக்குரியவர்கள் அல்ல என்றோ ஒருபோதும் எண்ணிக் கொள்ளாதீர்கள். ஏழ்மை, தேவபக்தியை சமப்படுத்துவது இல்லை! இனியும், ஜனங்களை இரட்டிப்பான நரகத்தின் பிள்ளை களாக மாற்றாதீர்கள்!!*

# குணாதிசயம் -27

**தேவனிடமிருந்து வெளிப்பாடு இல்லாமலே, பரிசேயர்கள் வேத வாக்கியங்களை வியாக்கியானம் செய்வார்கள்:**

*“குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ! எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலாயத்தின் பொன்னின் பேரில் சத்தியம் பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னை பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ? மேலும், எவனாகிலும் பலிபீடத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின் பேரில் சத்தியம் பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ? ஆகையால், பலிபீடத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதின் மேலுள்ள எல்லாவற்றின்பேரிலும் சத்தியம் பண்ணுகிறான். தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான். வானத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின் பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான். ” (மத்தேயு. 23:16-22).*

பரிசேயர்கள் தேவனிடமிருந்து எந்த வெளிப்பாடும் இல்லாமல் தங்கள் சொந்த மனதைக் கொண்டு வியாக்கியானம் செய்தார்கள்! ஆகவே தேவனுடைய வசனத்தை தங்கள் சொந்த விளக்கத்திற்கு ஏதுவாய் வளைத்து, அவைகளை “**தேவ பிராமணங்களாகவே பிரசங்கித்து விடுவார்கள்.**” இன்றும் இவ்வித செயலை பரிசேயத்துவமான பிரசங்கிகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தைக்குப் பின்பாக இருக்கும் ஆவியை விளங்கிக் கொள்ளாமலே எழுத்தின்படி பிரசங்கிக்கிறபடியால்..... *எழுத்து கொல்லுகிறது! (2 கொரி 3:6).* இவர்களே விளக்கம் தந்த அந்த வார்த்தைக்குத் தங்கள் ஜீவியத்தில் கீழ்படியாமல் இருந்துவிட்டு, *“தங்களின் நிலையற்ற தன்மையைகூட” காணாதவர்களாய்* இருந்து விடுகிறார்கள்.

*உதராணமாய், சில சபை தலைவர்கள்* “நகை அணிவதை, ஓர் பாவமான ஆடம்பரமாய் போதித்து, சில 100 ரூபாய்கள் மதிப்பு கொண்ட ‘கவரிங் நகைகளை’ அணிந்த சகோதரிகளைக் குறைவாய் மதிப்பிட்டு பார்க்கிறார்கள். ஆனால் அதே பிரசங்கிகள் தங்கள் வீட்டைக் கட்டுவதற்கு பல இலட்சங்கள் செலவழித்து, ஆடம்பரமான பொருட்களையெல்லாம் வீட்டில் பொருத்தி வைத்து கட்டியிருக்கிறார்கள்! *தங்களின் நிலையற்ற தன்மையையும், மாய்மாலத்தையும்*

*இவர்கள் காண்பதே இல்லை. தங்கள் மனசாட்சியை சமாதானப் படுத்துவதற்காக, வேத வாக்கியம் "நகை அணிவதற்கு எதிராக" (1தீமோத்தேயு2:9; 1பேதுரு 3:3) மாத்திரமே போதிக்கிறது. அல்லாமல், விலையுயர்ந்த "மார்பிள் கற்களைத்" தரையில் பதிப்பதற்கு எதிராக எதுவும் கூறவில்லையே!.... என சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் வேதாகமமோ, தேவையற்ற எல்லாவிதமான ஆடம்பரங்களையும் நாம் தவிர்க்க வேண்டும் என்றே போதித்திருக்கிறது.*

*இதுபோன்ற பல உதாரணங்களை கூறலாம். இவ்வித சபை தலைவர்களுக்கு, தேவனுடைய வார்த்தையில் பரிசுத்தாவியின் யாதொரு வெளிப்பாடும் இருப்பதில்லை. மாறாக தங்கள் வசதிக்கேற்ப வேத வாக்கியங்களுக்கு விளக்கம் தந்துவிட்டு, பிறரையே நியாயம் தீர்க்கிறார்கள்.*

---

## குணாதிசயம் -28

**பரிசேயர்கள் நியாயப்பிரமாண எழுத்துக்களுக்கு பிடிவாதம் கொண்டவர்கள்:**

*" பரிசேயர்களே, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி.... நியாயப்பிரமாணம் கற்பித்திருக்கிற விசேஷித்தவை களை விட்டுவிட்டீர்கள்" (மத் 23:23).*

*பரிசேயர்கள், வேதாகமத்தின் ஒரு கற்பனையில் "ஓர் சிறிய பகுதி யை அதிகம் வலியுறுத்திக் கொண்டு இருப்பார்கள்." "அற்பத்தில் விகர்ப்பம்" காட்டுவார்கள்! இதுபோன்ற பிரசங்கங்கள் ஒரு சபையை "பிராமணத்துவமான ஜனங்களால்" நிறைத்துவிடும். இந்த ஜனங்கள்* **"அற்ப விசயத்திற்குரிய"** *தங்கள் கீழ்படிதலில் பெருமை கொண்டு விட்டு, பெரிய விசயங்களில் அவர்களின் கீழ்படியாமையைக் குறித்து சிறிதுகூட உணர்வற்றவர்களாய் இருக்கிறார்கள். இயேசு இந்த பரிசேய ர்களை பார்த்து "நீங்கள் வெந்தயத்திலும், சீரகத்திலும் தசமபாகம் தர வேண்டாம்! என்று கூறவில்லை. மாறாக, தேவனுடைய பிராமணத் திலுள்ள* **'பெரிய விசயங்களுக்கே'** *இந்த தசமபாகத்தைவிட, அதிக முக்கியத்துவம் தந்திருக்க வேண்டும்!" என்றே கூறினார்.*

*ஒரு சமயம் "4-சுவிசேஷங்களையும்" ஆராய்ந்து, இயேசு வலியுறுத் திய எல்லா விசயங்களையும் வரிசைப்படுத்தி எழுதினேன். அவருடைய பிரசங்கத்தில் "மனந்திரும்புதல், ஆவிக்குரிய தரித்திரம், சாந்தம், பரிசுத் தம், தூய்மை, பாவத்தைக் குறித்த மனதுயரம், சரியானபடி வரி கட்டுதல், மறுபிறப்பு, ஆவியில் தேவனை ஆராதிப்பது, அன்பு, தாழ்மை, திருமண வாழ்வின் உத்தமம், மனுஷீக பாரம்பரியத்திலிருந்து விடுதலையாகு தல்....." போன்றவைகளே நிறைந்திருக்கிறது. ஆனால் தன்னுடைய பிரசங் கத்தில், ஒருமுறைகூட "ஜனங்கள் எவ்வாறு உடுத்த வேண்டும் அல்லது ஸ்திரீகள் நகை அணிய வேண்டுமா? முகத்திரை அணிய வேண்டுமா?"*

போன்றவை குறித்து ஒருமுறை கூட அவர் பேசவில்லை. அதன் தொடர்பாக, எளியவாழ்க்கை முறைகளையும், பணத்தை நேசிக்காமல் இருப்பதை மட்டுமே கூறியிருக்கிறார்!

மேலும், நிருபங்களில் எந்த விசயங்களைக் குறித்து பரிசுத்தாவி யானவர் **அதிகம்** வலியுறுத்திருக்கிறார் எனவும், **கொஞ்சமாய்** வலியுறுத் தியிருக்கிறார் எனவும், யாதொன்றும் குறிப்பிடாத பகுதிகளையும் நான் கவனமாய் ஆராய்ந்து கற்று இருக்கிறேன். இவ்வாறாகவே, என் பிரசங் கங்களில் நான் எவைகளை வலியுறுத்தி பிரசங்கிக்க வேண்டுமெனவும் எவைகளுக்கு குறைவான முக்கியத்துவம் தரவேண்டுமெனவும் அறிந் துள்ளேன். நீங்கள் இவ்வாறாகவே வேதாகமத்தை வாசித்தால், உங்களு டைய போதக ஊழியத்தில் சமநிலை கொண்டவர்களாய் இருப்பீர்கள்! பரிசேய பிரசங்கியாய் மாறும் அபாயத்திலிருந்துகாத்துக் கொள்வீர்கள்.

---

## குணாதிசயம் -29

**பரிசேயர்களிடம் நீதி, இரக்கம், உண்மை இருப்பதில்லை:**

*“பரிசேயரே! நீங்கள் நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித் தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் , விசுவாசத்தையும் விட்டுவிட்டீர் கள். இவைகளையும் நீங்கள் செய்திருக்க வேண்டும்....” (மத்தேயு. 23:23).*

பரிசேயர்கள், ஜனங்களிடத்தில் அநீதியாகவும், இரக்கமற்றவர் களாகவும் நடந்து கொண்டார்கள். தோல்வியடைந்தவர்களிடம் யாதொரு இரக்கமும் காட்டவில்லை. தங்கள் அந்தரங்க ஜீவியத்தில் உண்மையாயும் இருக்கவில்லை. ஜீவியத்தில் இவ்வளவு பின்னடைவு இருந்தபோதும் தங்களின் உபாவசத்தையும், ஜெபத்தையும், வேத வாசிப்பையும் வைத்துக்கொண்டு, தங்களை இன்னமும் பரிசுத்தவான் கள் என்றே எண்ணிக் கொண்டார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஓர் புதுப்பெண் தன் திருமணத்திற்கு அழுக்கும் துர்நாற்றமும் பிடித்த திருமணப்புடவையைக் கட்டிக் கொண்டு, தன் திருமண மேடைக்கு நாணத்தோடும், நளினத்தோடும் மிகுந்த அக்கறை கொண்டு சென்றதற்கு ஒப்பாகவே இருக்கிறது! நாம் சுயநலம் கொண்டவர்களாய், இரக்ககுணம் அற்றவர்களாய், உண்மையற்றவர்களாய் வாழ்ந்து கொண்டு..... நம்முடைய பக்தியான கிரியைகளை வைத்து நம்மை ஆவிக்குரியவர்களாக மேன்மை பாரட்டுவது நம்மையே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும். நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் எவைகளெல்லாம் விசேஷித்தவைகள் என்பதை அறிந்து, அவைகளுக்கு முதலாவது கவனம் செலுத்தி வாழ்வதே நமது தேவையாய் இருக்கிறது!

# குணாதிசயம் -30

**பரிசேயர்கள் கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறார்கள்**

*“குருடரான வழிகாட்டிகளே, கொசு இல்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்” (மத் 23:24).*

செத்த கொசுக்களை வடிகட்டுவதற்கு ஒப்பாக, முக்கியமில்லாத சிறிய விஷயங்களில் பரிசேயர்கள் வெகு கவனம் கொண்டிருந்தார்கள். ஆனால், செத்த ஒட்டகங்களை முழுங்குவதற்கு ஒப்பாய், வேதாகமத்தில் உள்ள, கட்டளைகளுக்கு கீழ்படிய அசட்டை செய்கிறார்கள். இயேசு அந்த பரிசேயர்களிடம் “செத்த ஈக்களை முழுங்குவது ஒன்றும் தப்பில்லை!” என சொல்லுவதற்கு முயற்சிக்கவில்லை. மாறாக “அதிக முக்கியமான விசயங்களில்” காணப்படும் அவர்களின் அசட்டையான நிலையற்ற தன்மையை சுட்டிக் காட்டவே அவ்வாறு பேசினார்.

இதுபோன்ற பரிசேயர்கள் சிறிய விசயங்களான, சுத்தமான ஆடை உடுத்தி சபை கூட்டங்களுக்குச் செல்வது! அல்லது, தங்கள் வீடுகளை தூய்மையும் ஒழுங்குமாய் வைத்திருப்பது!! போன்ற காரியங்களில் வெகு கவனமாய் இருந்தார்கள். இவையாவும் நல்ல பழக்கங்கள்தான்! ஆனால், மிக முக்கியமான பகுதிகளாய் இருக்கும் “தேவனை தீவிரமாய் தேடி கோபத்தையும், பாலியஇச்சைகளையும் மேற்கொள்வதையோ அல்லது சபையில் உள்ள நடைமுறை ஊழியங்களுக்கு உதவி செய்வதை யோ அல்லது கிராமங்களுக்கு பயணமாய் சென்று கிறிஸ்துவுக்கு ஜனங் களை ஆதாயம் செய்வதையோ.... இவர்கள் தீவிரமாய் நாடுவதில்லை.” ஏனென்றால் **இதுபோன்ற விசயங்கள், ஒருவன் தன்னுடைய வசதியையும், நேரத்தையும், பணத்தையும் இழக்க வேண்டிய பகுதியாய் இருக்கிறது.”**

இந்த வசனத்தை Message மொழிபெயர்ப்பு “ஜீவிய சரிதையை எழுதும் நீங்கள், ஆரம்பம் தொடங்கி முடிவுவரை எல்லாவற்றையும் தவறாய் எழுதிவிட்டு..... எந்தந்த இடங்களில் புள்ளி வைக்க வேண்டும் எந்தெந்த இடங்களில் கால் புள்ளி வைக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினால், அது எவ்வளவு மதியீனமாய் இருக்கும் என்றுகூட உங்களால் யோசிக்க முடியவில்லையா?” எனக் கூறுகிறது.

பெங்களூர் பட்டணத்தில் “வேத மனப்பாட போட்டிகள்” நடை பெறுவது உண்டு. அதில், அதிகமான பணம் பரிசாக வழங்கப் படுவ தால் ஏராளமான கிறிஸ்தவர்கள் அந்தப் போட்டிகளில் கலந்து கொள் வார்கள். ஒருவர் பரிசைபெறவேண்டுமானால் வசனங்களின் வார்த்தை யை சரியாய் எழுதினால் மட்டும் போதாது..... அந்தந்த இடங்களில் வரும் புள்ளிகளும், காற்புள்ளிகளும் சரியாய் வைக்கப்பட்டிருக்க வேண்டும்!! பரிசைப் பெறுவதற்காக, சில விசுவாசிகள் வசனத்தை மனப்பாடம் செய்து விட்டு, பல வாரங்களாய் இந்த காற்புள்ளி, அரை

*புள்ளிகளை எங்கு வைக்க வேண்டுமென படிப்பார்கள். தாங்கள் மனப்பாடம் செய்த வசனங்களுக்கோ, தங்கள் வீடுகளில் 'துளியளவும்' கீழ்படிந்திருக்க மாட்டார்கள். அதெல்லாம் குறித்து அவர்கள் உள்ளத்திற்குள் யாதொரு சஞ்சலமும் இருப்பதில்லை. இந்த வேதாகம போட்டிகளில் பரிசுகளை வாங்கி குவித்து விட்டார்கள்..... ஆனால், இன்னமும் முதல் தரமான பரிசேயர்களாகவே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்!!*

*சுவிசேஷத்தின் முடிவான நோக்கமே அன்புதான்! (1தீமோ 1:5). அதாவது தேவனை நம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலனோடும் அன்புகூர்ந்து, கிறிஸ்து நம்மை நேசித்தது போலவே நம் சக விசுவாசிகளையும் அன்பு கூருவதே ஆகும். இந்த அன்பை நாடி நாம் பின்தொடர்ந்தால், கிறிஸ்தவ ஜீவியத்தில் எவைகள் முக்கிய மானவைகள் என்பதை நாம் தெளிவாய் அறிந்திருப்போம்!*

---

## குணாதிசயம் -31

**வெளிப்புறமான நல்ல சாட்சிகள் மாத்திரமே பரிசேயர்கள் அக்கறை:**

*"பரிசேயரே!.... போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்கு கிறீர்கள். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. குருடனான பரிசேயனே! போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு" (மத் 23:25,26).*

*பரிசேயர்கள் தங்கள் ஜீவியத்தின் வெளிப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொண்டு, தங்கள்* **இருதயத்தின் நிலையைக் குறித்து** *சற்றேனும் கவனம் கொள்வதில்லை. அவர்களின் இருதயமோ அநீதியினாலும் உலக பேராசையினாலும் நிறைந்திருந்தது. சுயநல நோக்கத்தையே ஜீவிய மாய் கொண்டு, தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் பணத்தையும், கனத்தையும் சொகுசையும் பெறுவதற்கே சிந்தை கொண்டிருக்கிறார் கள். ஆனால் வெளிப்புறத்திலோ, பக்தியுள்ளவர்களைப் போல காணப்படுகிறார்கள். மற்ற கிறிஸ்தவர்கள் காணும் பொருட்டு எல்லா விதமான ஊழியங்களையும் செய்கிறார்கள். இவ்வாறு ஜனங்களுக்கு முன்பாக நற்புகழை பெற்றுக் கொள்கிறார்கள்.*

*நாம்* **மனுஷருடைய அங்கீகாரத்தை தேடுகிறோமா?** *என்பதை தேவன் எப்போதுமே சோதித்து அறிகிறார். ஒருவன் தன் இருதயத்தின் அசுத்தத்தை குறித்து கவனமற்றவனாய் இருந்து கொண்டு, ஜனங்களுக்கு முன்பான நற்சாட்சியை தேடுவதில் அக்கறை கொண்டவனாய் இருந்தால், அவனிடம் தெய்வபயம் துளிகூட இல்லையென கூறலாம். ஆம், ஒரு பரிசேயன் வெளியிலிருந்துதான் பார்க்கிறான். ஆனால் தேவனோ நம் இருதயத்தை பார்க்கிறார் (1சாமுவேல் 16:7). ஓர் உண்மையான தேவ மனிதனின் அடையாளம் என்னவென்றால்* **"தேவனுக்கு முன்பாக மாத்திரமே"** *தன் இருதயத்தை தூய்மையாயும் பரிசுத்தமாயும் வைத்துக் கொள்ள நாடுவான்!*

# குணாதிசயம் -32

**மற்றவர்கள் செய்யும் தீமைகளை, தாங்கள் ஒருபோதும் செய்யாததுபோல் பரிசேயர்கள் கூறுவார்கள்:**

*"பரிசேயரே!.... நீங்கள் தீர்க்கதரிசிகள் கல்லறைகளைக் கட்டி, நீதிமான் களின் சமாதிகளைச் சிங்காரித்து, எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தபழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள்" (மத் 23:29,30).*

பிறருடைய பாவங்களையும், தோல்விகளையும் இந்த பரிசேயர் கள் கண்டு, "இதுபோன்ற தவறுகளை நாங்கள் ஒருபோதும் செய்த தில்லை! இவர்கள் உடுத்துவது போல் நாங்கள் ஒருபோதும் உடுத்துவதில்லை. 'இப்படியெல்லாம்' நாங்கள் நடந்து கொள்ள மாட்டோம். இவ்வாறாக 'நாங்கள்' ஒருபோதும் பேசமாட்டோம்...." என்றே கூறுவார்கள்.

தலைசிறந்த கிறிஸ்தவர்களாய் நாம் இருந்தாலும், அந்த ஆதாமின் பிள்ளைகளுக்கு இருப்பதைப் போலவே **நமக்கும்** "அதே கறைப்பட்ட மாம்சமே இருக்கிறது" என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. பரிசேயர்களோ, தங்கள் சொந்த மாம்சத்தில் உள்ள கறைகளை அறிந்திருப்பதே இல்லை! ஆனால் ஒரு தேவபக்தி யுள்ள மனுஷனோ "எந்த மனுஷனும் செய்திடக் கூடிய பாவத்தை, தானும் செய்திட முடியும்" என்பதை ஏற்றுக் கொண்டிருப்பான். மேலும், **தேவனுடைய கிருபையின் பெலனால்** மாத்திரமே, ஏராளமான பாவங்கள் செய்வதிலிருந்து தான் பாதுகாக்கப்பட்டதாகவும் கூறுவான்.

பல வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பரிசுத்தவான், தூக்கிலிடும்படி கொண்டு செல்லப்பட்ட ஒரு குற்றவாளியை கண்ட போது "நானே அந்தக் குற்றவாளியாக இருந்திருக்க வேண்டும்.... ஆனால், தேவனுடைய கிருபையினால் தப்பி வாழ்கிறேன்" எனக் கூறினார். பாவத்தை எதிர்த்து நிற்கும் "தேவக் கிருபையின் பெலனை" தன் இருதயத்தில் பெற்றிருந்திருக்காவிட்டால், அந்த குற்றவாளி புரிந்த குற்றத்தை தானும் செய்திருக்க முடியும் என்பதை இந்த பரிசுத்தவான் அறிந்திருந்தார். இவ்வாறாகவே எந்த ஒரு தேவ மனுஷனும் அறிக்கை செய்வான்! ஆனால், பரிசேயர்கள் அவ்விதமாய் ஒருபோதும் தங்கள் நிலையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்!!

# குணாதிசயம் -33

**தேவனுடைய தீர்க்கதரிசிகளை பரிசேயர்கள் துன்புறுத்துவார்கள்:**

*"இதோ, தீர்க்கதரிசிகளை.... உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்; நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள் மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" (மத்தேயு. 23 : 34,35).*

ஒரு தீர்க்கதரிசியிடமிருந்து **"சத்தியத்தை" கேட்டவுடன்** இந்த பரிசேயர்கள் இடலறடைந்தார்கள். ஆகவே அதுபோன்ற பிரசங்கிகளுக்கு ஏதாகிலும் ஒரு வகையில் உபத்திரவம் தந்து கொண்டே இருந்தார்கள்.

ஆம், தங்களைப் போற்றும் பிரசங்கிகளையே பரிசேயர்கள் விரும்பினார்கள்.... தங்களைக் கடிந்து கொண்டு புத்தி சொன்னவர்களையோ வெறுத்தார்கள்!

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், இஸ்ரவேலரிடம் இருந்த பாவங்களை நேருக்கு நேராய் முகமுகமாய் பேசியபடியால், அந்த தீர்க்கதரிசிகள் அனைவருமே துன்பமடைந்தார்கள்! சிலரை கொலை யும் செய்தார்கள்!!

ஆகவே, ஒரு தேவபக்தியுள்ள மனுஷனிடமிருந்து வந்த கடிந்து கொள்ளுதல் அல்லது புத்திமதியின் நிமித்தம் நீங்கள் **மனம் புண்பட்டவர்களாய்** இருந்தால், நீங்களும் பரிசேயர்களாய் மாறுவதற் குரிய அபாயம் இருக்கிறது!!

# குணாதிசயம் - 34

**ஜனங்களுடைய அபிப்பிராயங்களில் பரிசேயர்கள் மிகுதியான அக்கறை செலுத்தினார்கள்:**

*"யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ?..... அதற்கு அவர்கள் தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி 'மனுஷரால் உண்டாயிற்று' என்று சொல்வோமானால் "ஜனங்களுக்கு பயப்படுகிறோம்", ஏனெனில் எல்லோரும் யோவானை தீர்க்கதரிசி என்று எண்ணிகிறார்களே!.... ஆகவே, இயேசுவுக்கு பிரதியுத்தரமாக : "எங்களுக்குத் தெரியாது!" என்றார்கள் (மத் 21:25-27).*

ஒரு குறிப்பிட்ட விசயத்தில் உறுதியான நிலை எடுக்கும்போது "மற்றவர்கள் தங்களைக் குறித்து என்ன எண்ணுவார்கள்?" என பிறருடைய அபிப்பிராயங்களைக் குறித்து பரிசேயர்கள் எப்போதும் அக்கறை கொண்டிருந்தார்கள். தேவன் தன் வார்த்தையின் மூலமாய் போதித்ததின் நிமித்தம் "**ஒரு உணர்த்துதலை**" **பெறாமல்,** தங்களை சுற்றி யிருந்த ஜனங்கள் என்ன எண்ணுவார்கள் என்பதை வைத்தே முடிவு எடுத்தார்கள். இவர்களுக்கு 'மற்றவர்களுடைய' அபிப்பிராயம் என்பது, ரோமானியர்களோ கிரேக்கர்களோ அல்ல!..... எல்லாம் தங்களது 'சக-யூதர்களின்' அபிப்ப்ராயங்களே ஆகும்!

உங்கள் மனசாட்சி சரியென்று சொல்லுகிறபடி செய்வதற்குப் பதிலாக, உங்கள் சபையில் உள்ள ஜனங்கள் உங்களைக் குறித்து என்ன எண்ணுவார்கள்? என்பதில் நீங்கள் கரிசனை கொண்டவராய் இருந் தால், நீங்கள் ஒரு பரிசேயர்! இன்று அநேக பிரசங்கிகள், தாங்கள் சொல்லுவதும் அல்லது செய்வதும் தங்கள் சபையில் உள்ள சில குறிப்பிட்ட **ஜனங்களுடைய ஆதரவை விரும்பி** அவர்களைப் பிரியப் படுத்துவதற்கே எல்லாம் செய்கிறார்கள்! அநேக விசுவாசிகள் தங்கள் பிள்ளைகள் ஒழுங்காய் நடந்துகொள்ள வேண்டுமென எண்ணுகிறார் கள்..... அதை, தேவன் மகிமைப்பட வேண்டும் என்பதற்காக அல்ல "நல்ல பெற்றோர்கள்" என்ற கனத்தை இவர்கள் இச்சித்ததே அதன் காரணமாகும்!! ஆகவேதான், இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு "அற்ப-விதிகளை" நியமித்து, அவர்களை "பொம்மை வீரர்களாய்" ஆட்டிப் படைத்து செயல்படுகிறார்கள்.

1987-ஆம் ஆண்டு என் மூத்த மகன் பள்ளிபடிப்பு முடிந்ததும் IIT - இந்தியாவிலும், இதைவிட மேன்மையாய் முழு உதவித் தொகையோடு USA கல்லூரியிலும் இடம் கிடைத்தது. என் மகன், தான் USA கல்லூரிக்கே போக விரும்புவதாகக் கூறியபோது, அதற்கு நான் "உன் விருப்பப்படியே நான் அனுப்புகிறேன்" எனக் கூறினேன். இன்று இந்தியாவிலுள்ள நம் சபைகளிலிருந்து அநேக வாலிபர்கள் USA சென்றுள்ளார்கள். ஆனால் 1987-ஆம் ஆண்டில், எங்கள் சபைகளில்

*ஒருவர்கூட USA செல்லவில்லை. இந்த சூழ்நிலையில், அநேக சகோதரர்களிடம் "இந்தியாவில் உள்ள ஆவிக்குரிய மனதுகொண்டவர் கள்.... வளைகுடா நாடுகளுக்கு அல்லது அமெரிக்காவிற்கு தங்கள் பிள்ளைகளையோ அல்லது தாங்களோ செல்லமாட்டார்கள்" என்பது போன்ற பரிசேயத்துவமான மனநிலை நிலவியிருந்தது! ஆகவே, என் மகனை நான் வெளிநாடு செல்ல அனுமதித்ததைக் குறித்து, என் மகன் மிகுந்த ஆச்சரியப்பட்டு "நீங்கள், என்னை அமெரிக்காவிற்கு அனுப்புவதை நம் சபைகளில் உள்ளவர்கள் கேள்விப்பட்டால் என்ன எண்ணுவார்கள்?" எனக் கேட்டான்.* **ஆனால் நானோ "பரிசேயத்துவ விதிகளின் படி" என் பிள்ளைகள் வாழ விரும்பவில்லை! அவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தில் வாழவே நான் விரும்பினேன்!** *எனவே, என் மகனைப் பார்த்து " அப்படியானால், நான் பிறருடை அபிப்பிராயங்களிலிருந்து விடுதலை அடைந்திருக்கிறேனா? என்பதை அறிய, எனக்கு வந்த நல்ல பரீட்சையாகவே இதை நான் கருதுகிறேன்!" என விடை கூறினேன்.*

*என் மகனை அமெரிக்கா அனுப்புவதினிமித்தம் 'குதர்க்கமாய்' எண்ணிய சிலர்.... சில வருடங்கள் கழித்து, தங்கள் சொந்த பிள்ளைகளை அமெரிக்கா அனுப்பினார்கள்! இப்படித்தான் பரிசேயர்கள் இருக்கிறார்கள். இவர்கள், பிறருக்கு கண்டிப்பான விதிகளைப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் தங்கள் சொந்த குடும்பத்தில் உள்ளவர்கள் என வரும்போது இந்த விதிகளை மாற்றி வைத்துக் கொள்ளுகிறார்கள். தங்கள் சொந்த குடும்பத்தினரிடம் பாரபட்சம் காட்டுவதிலிருந்து முற்றிலுமாய் விடுதலை பெற்ற மூத்த சகோதரர்களைக் காண்பது வெகு ஆபூர்வமாகவே இருக்கிறது!*

*நாம் பிறருடைய அபிப்பிராயங்களுக்கு அக்கறை கொண்டவர் களாய் இருந்தால், நம் பிள்ளைகளை இந்த உலகத்தில் மாய்ந்திட இழக்க முடியும். ஆகவே, உங்கள் சபையில் உள்ள பரிசேயத்துவ மூப்பர்கள் விதித்திடும் மதியீனமான பிராமணத்துவ விதிகளுக் கெல்லாம் செவி கொடுத்து, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாழாக்கி விடாதீர்கள்!*

*பவுல் கூறும்பொழுது "இந்த உலகத்திற்கு நான் சிலுவையில் அறையுண்டபடியால், பிறரை பிரியப்படுத்த வேண்டுமென்ற கட்டாய சூழ்நிலைக்கும், பிறர் ஆணையிடும் சிறிய சிறிய வரையறைகளுக்கும் என்னை உட்படுத்தாதபடி நான் விடுதலையாகி இருக்கிறேன்!" எனக் கூறினார் (கலாத்தியர் 6:14 -Message மொழிபெயர்ப்பு) ஜனங்களை பிரியப்படுத்தும் செயல், நாற்றம் நிறைந்த ஒரு அறையில் ஜீவிப்பதற்கு ஒப்பாகும்! அதிலிருந்து வெளியே வாருங்கள்..... கிறிஸ்து வழங்கும் சுதந்திரமான சுத்த காற்றை சுவாசித்து ஜீவியுங்கள்!!*

# குணாதிசயம் -35

**பரிசேயர்கள் பணத்தை நேசிப்பார்கள்:**

*"பரிசேயர்கள் பொருளாசைக்காரர்கள்!"(லூக்16:14).*

*பரிசேயர்களைக் குறித்து எண்ணும்போது, நாம் பொதுவாய் "பண ஆசையை" அவர்களுக்கு தொடர்புபடுத்தி சிந்திப்பது இல்லை. ஆனால், இந்த குணாதிசயமே அவர்களை சுட்டிகாட்டும் தெளிவான அடையாளம் என நாம் கூறலாம்! பரிசேயர்களைக் குறித்த 49-குணாதிசயங்கள் உங்களிடம் இல்லாமல் இருக்கலாம்.... ஆனால், இந்த ஒரு குணாதிசயம் உங்களிடம் காணப்பட்டாலும், நீங்கள் இன்னமும் ஓர் பரிசேயர்தான்! நியாயப்பிரமாணத்தின் சிறுசிறு விதிமுறைகளைக் கூட தோண்டி எடுப்பார்கள். ஆனால் "*__பணம்" என்று வரும்போது, அதை நேசித்தார்கள்.__* லூக்கா 16:13-ம் வசனத்தில், இயேசு இதைக் குறிப்பிட்டு "தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களாலே கூடாது" என்றார்.*

*இவ்வாறு இயேசு கூறிய வார்த்தைகளைக் கேட்ட பரிசேயர்களோ, அவரைப் பரியாசம் பண்ணினார்கள் (வசனம்14). அது ஏனென்றால், அவர்கள் பொருளாசைக்காரர்களாக இருந்தார்கள்.... 'அதோடு' தேவனையும் தாங்கள் நேசிப்பதாக எண்ணிக் கொண்டார்கள்! ஒரு விசுவாசி உலகப்பொருட்களின் ஐஸ்வரியத்தை, தனக்கு கீழாக வைத்து 'ஒரு அடிமையாக' பயன்படுத்தலாம்! ஆனால், அதை அவன் நேசிக்கும் அடுத்த கணமே, ஓர் பரிசேயனாக மாறிவிடுவான்!!*

**உலகப்பொருட்களை நாம் பயன்படுத்துவதற்காக தேவன் தந்திருக்கிறார்! ஜனங்களையோ அன்புகூருவதற்காக தேவன் நமக்குத் தந்திருக்கிறார்!!**

*ஆனால், இந்த நோக்கத்தை பிசாசானவன் மானிடரிடத்தில் தலைகீழாக மாற்றி செயல்படச் செய்து விட்டான். அதன் விளைவாய் இப்போது உலகப்பொருட்களை ஜனங்கள் நேசிக்கிறார்கள்! ஜனங்களையோ தங்கள் சொந்த ஆதாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள்!! இந்நிலையை மாற்றி, நம்மை நேராக நிறுத்தும்படியே இயேசு வந்தார். அதன்விளைவாய், நாம் ஜனங்களை இப்போது* **நேசிக்க முடிகிறது!** *உலகப் பொருட்களையோ, ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி* **பயன்படுத்த முடிகிறது!** *சில தேவ பக்தியுள்ள ஜனங்கள் ஏராளமான உலகப்பொருட்களை தங்களுக்கென மறுத்து, "அவைகளைக் கொண்டு" ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள்! இவ்வாறாகவே இயேசுவும் ஜீவித்தார்.*

*சிறுசிறு பிரமாணங்களையெல்லாம் ஜனங்களிடம் திணிக்கும் அநேக பிரசங்கிகள், பண ஆசையுடையவர்களாகவே இருக்கிறார்கள். சபையிலுள்ள அவர்களின் பொறுப்புகளைக்கூட அலட்சியம் செய்துவிட்டு 'அதிக பணம் கிடைப்பதைத்தேடி' போகிறார்கள். இவர்கள் பரிசேயர்கள்.... ஆகவே இவர்களின் மனம் பணத்தையே சுற்றி வருகிறது!!*

# குணாதிசயம் -36

**பரிசேயர்கள் தங்களைப் பிறரைக்காட்டிலும் மேலானவர்களாய் எண்ணியிருப்பார்கள்:**

*“தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக் குறித்து அவர் ஒரு உவமையைச் சொன்னார். இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்திற்கு போனார்கள்; ஒருவன் பரிசேயன்..... அவன் நின்று; தேவனே, நான் மற்ற மனுஷரைப்போல் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்றான்.” (லூக்கா 18:9-11).*

இந்த உவமையில் காணும் பரிசேயன் ‘தேவனிடத்தில் ஜெபம் செய்யவில்லை’ என்பதையே நாம் முதலாவதாய் காண்கிறோம். அவன் “தனக்குள்ளே” ஜெபம் பண்ணினான் என்றே வாசிக்கிறோம்(வசனம் 12). மற்றவர்களைக் காட்டிலும் தன்னை மேலாக எண்ணியபடியால், தன் இருதயத்தில் தேவனை ஸ்தோத்தரித்தான்! ஆம், அவன் சத்தமிட்டு ஜெபிக்கவில்லை..... அது ஏனென்றால் “இவன் தாழ்மையுள்ளவன்! ” என்ற தனது மதிப்பை இழந்துவிடாதிருக்கவே அக்கறையுள்ளவனாக இருந்தான்!!

ஏதோ ஒருநாளில், யாரோ ஒருவர் உங்களிடம் தன் நிதானத்தை இழந்து கோபப்பட்டுவிட்டார். ஆனால் நீங்களோ, உங்கள் கோபத்தை அடக்கி மௌனம் காத்து விட்டீர்கள்! இந்த நல்ல தருணத்தில், உங்களை நீங்களே மெச்சிக் கொண்டு “ஆண்டவரே, இவரைப் போல் நான் இல்லாதபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். எனக்கு நல்ல சுய-அடக்கம் இருக்கிறபடியால் உம்மைத் துதிக்கிறேன்” என்று உங்கள் இருதயத்தில் இரகசியமாய் ஜெபிக்கிறீர்கள்! இப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த சமயத்தில் நீங்கள் ஜெபித்ததெல்லாம், அந்த பரிசேயனின் ஜெபமே ஆகும்! அந்த சகோதரன் “கோபம்” என்ற 10-அடி பள்ளத்தில் விழுந்து விட்டார். ஆனால் நீங்களோ 1000-அடி பள்ளமாகிய **“ஆவிக்குரிய பெருமை”** என்ற பாதாளத்திற்குள் விழுந்து விட்டீர்கள்!!

**இவர்களில் யார் மோசமானவர்கள்? அந்த சகோதரன், தன் கோபத்தினிமித்தம் பின்பு உணர்த்தப்பட்டு, ஆண்டவரிடத்தில் மீண்டும் திரும்பியிருப்பார்! ஆனால் நீங்களோ உங்கள் சுய - நீதியை காண முடியாதவர்களாய், உங்கள் ஆவிக்குரிய பெருமையிலிருந்து இனி ஒருபோதும் மனதிரும்ப முடியாதவர்களாய் போய்விட்டீர்கள்! முடிவில், தேவனுடைய பார்வையில்.... “அந்த சகோதரனே” உங்களைக் காட்டிலும் மேலானவராய் இருப்பார்!**

ஆவிக்குரிய பெருமையானது ‘ஒரு வெங்காயத்திற்கு’ ஒப்பாகவே உள்ளது. அதன் ஒரு தொலியை உரித்தவுடன், இனி இராது என்றே எண்ணுவீர்கள்! ஆனால் அதற்கடியில் மற்றொரு தொலியிருக்கிறது..... இன்னும் அதற்கடியில் மற்றொரு தொலியிருக்கிறது..... இவ்வாறு தொலியை உரிக்க உரிக்க அடுத்தடுத்து தொலியிருப்பதை

காண்பீர்கள்! இந்த பூமியில் "ஆவிக்குரிய பெருமையை" முற்றிலும் அகற்றுவ தென்பது கூடாததாய் இருக்கிறது. ஆனால், நாம் பிறரை நியாயம் தீர்க்கமால், நம்மை மாத்திரமே நியாயம் தீர்த்து உண்மையுள்ளவர் களாக வாழ்ந்தால் "இந்த வெங்காயம்" சிறிதாக மாறி, மாறி.... மிக சிறிதாகிவிடும்!!

**ஆவிக்குரிய பெருமை வெகு தந்திரமுள்ளது! அது, "தாழ்மை என்ற போர்வையை" உடுத்தி தன்னை மறைத்துக் கொள்ளும்.** ஒரு ஞாயிறு பள்ளி டீச்சர், பரிசேயனையும் ஆயக்காரனையும் வைத்து தன் பிள்ளைகளுக்கு கதை சொல்லிக் கொடுத்தார். அந்தக் கதையின் முடிவில், ஒரு பரிசேயனு டைய கரகரத்த குரலில்..... "பிள்ளைகளே, நாம் பரிசேயரைப் போல் இல்லாதபடியால் தேவனை ஸ்தோத்தரிப்போமாக!" எனக் கூறினார். இதை கேட்கும் நமக்கு சிரிப்பு வருகிறது..... ஆனால் அதே சமயம் "ஆண்டவரே, இந்த ஞாயிறு பள்ளி டீச்சரைப்போல் நாங்கள் இல்லாதபடியால், உமக்கு ஸ்தோத்திரம்!" என்றல்லவா நாமும் இப்போது மனதிற்குள்ளாக கூறுகிறோம்!! ஆம், ஆவிக்குரிய பெருமை என்பது மெய்யாகவே ஒரு வெங்காயத்தைப் போலவேதான் இருக்கிறது!!

பெருமையும், சுயநலமும் ஆகிய இந்த இரு பாவங்களும் கிறிஸ்து திரும்பவந்து, நாம் அவரைப்போல் மாறும்வரை நம்மை விட்டு முற்றிலும் ஒழியாது! இந்த இரு பாவங்களாகிய 'வெங்காயங்களில்' எண்ணற்ற தொலிமடிப்புகள் இருக்கிறது. இதன் ஒரு தொலிபடிவத்தை "நாம் கண்ட மாத்திரத்தில்," அவைகளை நாம் கழுவிக்கொண்டால், கொஞ்சம் கொஞ்சமாய் அவைகள் நம்மிடமிருந்து கரைந்து, பெருமை-சுயநலம் ஆகிய இந்த இரண்டு வெங்காயங்களும் மிகமிக சிறிய அளவாய் மாறிவிட முடியும்! நம்முடைய வாஞ்சையோ, கிறிஸ்து திரும்ப வருவதற்கு முன்பாக இந்த "வெங்காயங்களை" எவ்வளவு சிறிய அளவாய் மாற்றமுடியுமோ அவ்வளவு சிறிதாய் மாற்றிடவே விரும்புகிறோம்! இந்த செயலை நீங்கள் தொடர்ந்து செய்பவர்களாக இருந்தால், நீங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள்..... நீங்கள் ஒரு பரிசேயராய் இருக்க மாட்டீர்கள்!

# குணாதிசயம் - 37

**பரிசேயர்கள் தங்கள் சுயநீதியில் நம்பிக்கை வைத்திருந்தார்கள் :**

*"அன்றியும் தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்து அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (மத்தேயு. 18:9).*

*விசுவாசத்தினால் உண்டாகும் நீதியென, ஒன்று இருக்கிறது! அது தேவனால் உண்டான வரம் ஆகும். அதேபோல், நாமாக உற்பத்தி செய்யும் ஓர் நீதியும் இருக்கிறது! நீங்கள் வைத்திருப்பது எந்த நீதி? எனக் கண்டறிவதற்கு ஓர் வழி இருக்கின்றது. "உங்கள் நீதியைக் குறித்து நீங்கள் பெருமை கொண்டிருக்கிறீர்களா?" என உங்களையே கேட்டுப் பார்ப் பதுதான் அந்தவழி! உங்கள் பதிலில் "நீங்கள் பெருமை அடைந்திருப்ப தாக" கண்டால், அவைகளை நீங்களே சொந்தமாய் உற்பத்தி செய்தி ருக்க வேண்டும்! ஆனால், நீங்கள் தேவனிடத்திலிருந்து ஓர் வரமாக* **"அவருடைய நீதியை" நீங்கள் பெற்றிருந்தால்,** *அதற்காக நீங்கள் தேவனுக்கு மிகுந்த நன்றியுள்ளவர்களாய் இருப்பீர்கள்! உங்களால் பெருமை யடைந்திட முடியாது! பரிசேயர்களோ, தாங்களே பெருமை பாரட்டும் படியான நீதியை வைத்திருந்தார்கள்!!*

*நீங்கள் எழுதிய ஓர் புத்தகத்திற்காய், நீங்கள் பெருமை அடைய முடியும்! ஆனால் வேறு யாரோ எழுதிய ஓர் புத்தகத்திற்காய் நீங்கள் நிச்சயமாய் பெருமை அடையமாட்டீர்கள். உங்கள் ஜீவியத்தில் உள்ள சில நல்ல குணாதிசயமாகிய தாழ்மையோ அல்லது உதாரத்துவமோ அல்லது ஜெபஜீவியமோ போன்றவைகளுக்காய் நீங்கள் பெருமை அடைந்தால், அவைகளை நீங்களேதான் உற்பத்தி செய்திருக்க வேண்டும்! நீங்கள் உதாரத்துவமும் விருந்தோம்பலும் உடையவர்களாய் இருந்து,* **அதனிமித்தம் பெருமையடைந்தவராய் இருந்தால் அந்த குணாதிசயங்கள் மனுஷீக குணாதிசயங்களேயல்லாமல் திவ்ய சுபாவங்கள் அல்ல!**

*ஏனெனில், நீங்கள் பெற்ற தெய்வ சுபாவங்கள், தேவனிடமிருந்து இலவசமாய் பெற்றிருந்தால், அதைக்குறித்து நீங்கள் எப்படி மேன்மை பாரட்ட முடியும்? பிறரை உபசரிப்பது ஓர் நல்ல குணம்! ஆனால், அதைக் குறித்து நீங்கள் பெருமை அடைந்திருந்தால், அந்த உபசரிக்கும் குணம் தேவனுக்கு முன்பாக நாற்றம் கொண்டதே ஆகும்!!*

*இதே தாற்பரியம் வாழ்வின் மற்ற பகுதிகளுக்கும் பொருந்தும்.... அவைகள், நீதியின் ஜீவியத்திற்கு சம்பந்தமே இல்லை. ஒருவேளை நீங்கள் நன்றாகப் பாடலாம் அல்லது வாத்திய கருவியை சிறப்பாக இசைக்கலாம் அல்லது அருமையாக பிரசங்கிக்கலாம் அல்லது உங்கள் சபை மற்றவர்களுடைய சபையைக் காட்டிலும் பெரியதாக இருக் கலாம்.... இவ்வாறு, நீங்கள் எதைக்குறித்து பெருமை அடைந்திருந்தாலும்,*

*அவையாவும் உங்கள் சொந்த முயற்சியில் ஏற்பட்ட விளைவுகளே ஆகும். மாறாக, அது தேவனுடைய கிரியையாய் இருந்தால், அதைக் குறித்து பெருமை பாரட்ட உங்களால் முடியவே முடியாது!*

*இன்று அநேகர் தாங்கள் கர்த்தருக்காக செய்த தியாகங்களை குறித்து பெருமை அடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், இயேசு அவர்களுக்காக சிலுவையில் செய்திட்ட அளவற்ற தியாகத்தை இன்னமும் காணவில்லை என்பதே தெளிவாய் விளங்குகிறது! சூரியன் பிரகாசித்து கொண்டிருக்கையில், "ஒரு நட்சத்திரத்தை" நீங்கள் காணக்கூடுமோ? ஒருக்காலும் முடியாது!* **இயேசுவின் கல்வாரி தியாகம்** *பிரகாசிக்கும் சூரியனாக நம் மனதில் பதிந்திருந்தால், நாம் செய்த அத்தனை சிறு சிறு தியாகங்களும் பகலில் உள்ள நட்சத்திரங்களைப் போல் மறைந்து போய் இருக்கும்! அவைகளை இனியும், "தியாகங்கள்" என்றுகூட நாம் கூறிட மாட்டோம்! உங்கள் அனைத்து தியாகங் களையும் உங்களால் ஞாபகத்தில் வைத்திருக்க முடியுமென்றால், நீங்கள் இன்னமும் இருளிலில்தான் இருக்கிறீர்கள்! ஏனெனில் இரவில் மாத்திரமே நாம் நட்சத்திரங்களைக் காண முடியும்!!*

*விசுவாசத்தோடும், தாழ்மையோடும், தேவனிடத்தில் கிட்டிச் சேர்ந்து, கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் வழங்கும் தேவநீதியை பெற்றிடுங் கள்! அதற்காக தேவனுக்கே சகல மகிமையையும் உங்கள் ஜீவ காலமெல்லாம் செலுத்துங்கள்! அப்படியானால், நீங்கள் ஒருபோதும் பரிசேயராய் இருக்க மாட்டீர்கள்!!*

---

## குணாதிசயம் - 38

**பரிசேயர்கள் பிறரை அற்பமாய் எண்ணுவார்கள்:**

*"மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக் குறித்து அவர் ஒரு உவமையைச் சொன்னார்" ( லூக் 18:9).*

*ஜனங்கள், பிறரை அற்பமாய் காண்பதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. சமூக அந்தஸ்தில் குறைவானவர்களையும், ஐஸ்வரியத்தில் குறைவானவர்களையும், அல்லது படிப்புத்தகுதியில் குறைவானவர் களையும்,* **அற்பமாய் காண்பதற்கு** *சிறுபிராயத்திலிருந்தே இவர்கள் தங்கள் பெற்றோர்களால் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்! அல்லது, நீங்கள் மிகுந்த புத்திகூர்மையும், உங்கள் பள்ளியில் முதல்தரம் கொண்ட வர்களாயும் இருந்தால், உங்கள் வகுப்பில் உள்ள மற்றவர்களை நீங்கள் அற்பமாய் எண்ணத் துவங்குவீர்கள்! இன்னும் அதிகமாய், மதியீன மான பெற்றோர்களைக் கொண்ட துரதிருஷ்டம் உங்களுக்கு ஏற்பட்டு விட்டால், உங்களை அவர்கள் "மகா ஞானி" என நீங்கள் எண்ணிடும் கற்பனைக்குள் நடத்தி விடுவார்கள். காரியம் இப்படி இருந்தால், உங்களுக்கு இன்னமும்மோசமானதுதான்!!*

**எல்லா பெற்றோர்களையும் நான் மிகவும் வருந்தி கேட்டுக் கொள்கிறேன். உங்கள் பிள்ளைகள் புத்தி கூர்மையுள்ளவர்களாய் இருந்தால், அவர்களைக் குறித்து பிறரிடம் புகழ்ந்து.... தயவுசெய்து அவர்களை அழித்துப் போடாதிருங்கள்.**

*என்னுடைய வீட்டில் ஓர் கண்டிப்பான சட்டத்தை வைத்திருக் கிறேன். அது என்னவென்றால், என் மகன்கள் தங்களுடைய வகுப்பின் தரத்தையோ (Rank) அல்லது அவர்கள் பெற்ற எந்த பரிசையோ யாதொருவரிடமும் சொல்லகூடாது! என்பதே ஆகும். என் பிள்ளைகள் பெருமையடைந்து விட்டால், தேவனுடைய கிருபையை உடனடியாக இழந்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்! இந்த நிலையில் அவர்கள் பாவத்தில் விழுவார்கள்.... எளிய சகோதரர்களிடம் ஐக்கியம் கொள்ளவும் முடியாது! ஆனால், இவ்வித கேடான நிலைக்கே அனேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நடத்தியிருக்கிறார்கள் என நான் அஞ்சுகிறேன்!*

*ஆங்கில மொழியையோ அல்லது வேறெந்த தாய் மொழியையோ நல்ல உச்சரிப்போடு பேசத் தெரியாதவர்களை, பிள்ளைகள்* **பகடி செய்வது** *ஒரு பொதுவான பழக்கமாய் இருக்கிறது. உங்கள் இல்லத்தில், இதுபோன்ற பகடிக்கு ஊக்கமளிக்காதீர்கள்! நம்மில் யாராவது, தாயின் கர்ப்பத்திலிருந்தே நல்ல உச்சரிப்போடு பேசி பழகியிருக்கிறோமா? அப்படியிருக்க, நம்மிடமுள்ள எவ்வித திறமைக்கும், நாம் தேவனுக்கே நன்றி சொல்லிட வேண்டும். நாமோ அவைகளைக் குறித்து ஒருபோதும் பெருமை அடைந்துவிடக் கூடாது! பரலோகத்தில் எவ்வித உச்சரிப் போடு பேசுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தாழ்மையும் அன்புமே, பரலோகத்தின் உச்சரிப்புகளாகும்! அந்த தெளிவான உச்சரிப்புகளையே நாமும் கற்றுக்கொள்ளக் கடவோம்.*

*ஒருவேளை, உங்கள் வீட்டை சிறு அழுக்குகூட இல்லாத தூய்மையிலும், பொருட்களை அதினதின் இடத்தில் ஒழுங்காய் வைத்திருக்கும் சகோதரியாய் நீங்கள் இருக்ககூடும். இச்சமயத்தில், வேறொரு சகோதரியின் வீடு அழுக்காயும், பொருட்கள் சிதறியிருப் பதையும் கண்டு, நீங்கள் அந்த சகோதரியை அற்பமாய் எண்ணலாம்! இந்நிலையில், நீங்கள்தான் ஒரு பரிசேயன்.... தன் வீட்டை அழுக்காய் வைத்திருந்த அந்த சகோதரி தேவபக்தி நிறைந்த சகோதரியாய் இருக்க வாய்ப்புண்டு!!*

*சங்கீத உணர்வு சிறிதுகூட இல்லாத சகோதரர்கள், சபையின் துதி நேரத்தில் பல்லவிகள் பாடினால், தாறுமாறான ராகத்தில் பாடு வதுண்டு! அவர்களை நீங்கள் அற்பமாய் எண்ணாதீர்கள்.... ஏனெனில், தேவனோ இராகத்தை கவனிக்காமல், அவர்களின் வார்த்தைகளையே கவனித்துப் பார்க்கிறார்! சரியான இராகத்தோடு பாடிய உங்களைவிட, தவறான ராகத்தில் பாடிய அந்த சகோதரன் அதிக உண்மையுள்ளவராய்*

*இருந்திருக்கக் கூடும். என்னைப் பொறுத்தவரையில், அதுபோன்ற சகோதரர்களுக்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்தியிருக்கிறேன்.*

**அது ஏனென்றால், சபையிலுள்ள திறமையான பாடகர்கள் அனைவரையும் காட்டிலும், இவர்களே தங்களை தாழ்த்துகிறார்கள். இன்னிசை இராகம் தெரியாத சகோதரர்கள் அல்ல.... பரிசேயத்துவமான "இன்னிசை இராகம்" தெரிந்த சகோதரர்களே சபையை சீரழிக்கிறார்கள்!**

*எல்லோரையும் அன்புகூருவதைப் போலவே 'இன்னிசை சங்கீதம்' தெரியாத சகோதரர்களையும் தேவன் அன்பு கூருகிறார்! ஆனால் பரிசேயர்களையோ, தேவன் புறக்கணிக்கிறார்! ஆண்டவர் திரும்ப வரும்போது, இதுபோன்ற பரிசேயர்களுக்கு ஏராளமான அதிர்ச்சிகள் காத்திருக்கிறது!!*

*நீங்கள் வகுப்பில் முதல்தரம் பெற்றிடக் கூடாது என்றோ, அல்லது உங்கள் வீட்டை தூய்மையாக வைத்திருக்கக் கூடாது என்றோ, அல்லது நல்ல ராகத்தோடு பாடக்கூடாது என்றோ நான் கூறவில்லை.... நிச்சயமாய் நான் அப்படி கூறவில்லை! இவையனைத்தையும், நம் முழுமனதோடு சிறப்பாய் செய்திடக்கடவோம். ஆனால், செய்துமுடித்து அவைகளில் நம்மைத் தாழ்த்திடக்கடவோம்! அதேசமயம், நாம் செய்வதைப் போல் செய்ய முடியாத ஒருவரையும் அற்பமாய் எண்ணாதிருக்கக் கடவோம்!*

*இதுபோன்ற எத்தனையோ பல காரியங்களில், நாம் பிறரை எளிதில் அற்பமாய் எண்ணுவதற்கு வாய்ப்பிருக்கிறது. யோபு 36:5 வசனத்தில் "இதோ, தேவன் மகத்துவமுள்ளவர், அவர் ஒருவரையும் புறக்கணியார்!" என வாசிக்கிறோம். நாம் எவ்வளவு அதிகம் தேவனைப் போல் மாறுகிறோமோ அவ்வளவு அதிகமாய், ஜனங்களை மதிப்பவர் களாயும், யாதொரு காரியத்திற்காகவும், ஒருவரையும் "ஒருபோதும்" அசட்டை செய்யாதவர்களாய் இருப்போம்!*

*ஆகவே நம்மைநாமே கழுவிக்கொண்டு, ஜனங்களை தேவன் காண்கிறவிதமாய் காண நாம் கற்றுக்கொள்வோமாக. "உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்? அல்லது ஏன் யாதொருவனை அசட்டை செய்கிறாய்" (1கொரி4:7) எனக்கூறும் வேத வாக்கியத்தை நாம் யாவரும் மனதில் வைத்திடக் கடவோம்!!*

# குணாதிசயம் -39

**பரிசேயர்கள் பிறரைக்காட்டிலும் தங்களை உயர்த்துவார்கள்:**

*"அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பி போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்கா 18: 14).*

பரிசேயர்கள் தங்களை உயர்த்துகிறபடியால், தேவன் அவர்களை நீதிமானாக்கிட முடியவில்லை! ஏனென்றால், அவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்துவார்கள். மற்றவர்களைக் காட்டிலும் தங்களை உயர்த்துகிற அனைவரையும் தேவன் தாழ்த்துகிறார்!!

மற்றவர்களைக் காட்டிலும் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டுவதற்கு ஏராளமான தந்திர வழிகள் உண்டு. நாம் நடந்து கொள்ளுகிற ஒரு விதத்தை வைத்தே, மற்றவர்களை சிறியவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் எண்ணும்படி செய்துவிடலாம்!

**வரம் பெற்ற ஜனங்களும், இன்னிசை வாசிப்பவர்களும் 'தன்னை உயர்த்துகிற விசயத்தில்' அதிகமான அபாயத்திற்கு உரியவர்கள்!**

ஒரு சபை கூட்டத்தில், ஜனங்கள் தன்னைப் புகழுவதற்கேதுவாக நீங்கள் ஒரு இன்னிசைக் கருவியை கண்டிப்பாக வாசிக்கக் கூடாது. நீங்களோ, ஜனங்கள் கர்த்தரை ஆராதிப்பதற்கு உதவுகிறவர்களாய் இருக்க வேண்டுமேயல்லாமல், அவர்கள் உங்களை ஆராதிக்கும் படியான செயலை செய்துவிடக் கூடாது!!

சிலசமயங்களில் திருமணமான இளம் தம்பதியினர்கள் "தங்கள் திருமண வாழ்வின் மகிழ்ச்சியை" அவர்களை விட வயது சென்ற, இன்னமும் திருமணமாகாத சகோதரிகளின் உணர்வுகளுக்கு எவ்வித கரிசனையும் காட்டாமல், தங்கள் திருமண உறவை உயர்த்திப் பேசுவார்கள். இதுபோன்ற சாட்சிகளைக்கூறி, நாம் பிறருக்கு தீங்கு செய்திடக் கூடாது! இந்த பரிசேயர்களோ, பிறருடைய உணர்வுகளுக்கு சிறிதேனும் கூட அக்கறை அற்றவர்கள்! ஆகையால்தான் அவர்களை தேவன் 'நீதிமானாக' மாற்றமுடியவில்லை..... ஏனென்றால், தாழ்மை யுள்ளவர்களை மாத்திரமே தேவன் நீதிமானாக்குகிறார்!! இன்னும் எத்தனையோ வழிகளில், மற்றவர்களைக் காட்டிலும் நம்மை உயர்த் திட முடியும்! இவ்வித பகுதிகளில் நம்மை உணர்வுள்ளவர்களாய் இருக்கச் செய்யும்படி, நாம் பரிசுத்தாவியானவரிடம் வேண்டுதல் செய்வோமாக!!

# குணாதிசயம் - 40

**பரிசேயர்கள், தங்கள் செய்கைகளை மேன்மை பாராட்டுவார்கள்:**

*“தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராதபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன்....” (லூக்.18: 11, 12).*

*தேவன் நம் மூலமாய் செய்தவைகளைக் குறித்து பேசும் போதெல்லாம், மிகப்பெரிய அபாயத்தையே நாம் சந்திக்கிறோம். தேவனுடைய மகிமைக்காய் நம்முடைய சாட்சியைக் கூறுவது நல்லது தான்..... ஆனால், இந்த பரிசேயன் செய்ததைப்போல் நாம் செய்து முடித்த காரியங்களை உயர்த்திப் பேசாதிருப்பதற்கு நாம் மிகுந்த கவனம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். இவ்விசயத்தில், பிரசங்கிகள்தான் அதிக அபாயத்தில் இருக்கிறார்கள். இந்திய தேசத்தில் செய்யப்படும் கிறிஸ்தவ ஊழியங்களைப்பற்றி, மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பப் படும் அறிக்கைகளில் இந்த “***உயர்த்தி பேசும் பெருமித ஆவி***” நிறையவே காணப்படுகிறது! அந்த அறிக்கையில், இந்த ஊழியர்கள் அதிகமாய் பிராயசப்பட்டு, இந்தியாவில் உள்ள மற்ற “மிஷன் ஊழியங்களைவிட” தாங்களே அதிக ஊழியம் செய்வதாக நிருபிக்க முயற்சி செய்கிறார்கள்.*

*நாம் பரிசேயத்துவ தீமையிலிருந்து முற்றிலுமாய் விடுதலை அடைய வேண்டுமென்றால், நாம் கர்த்தருக்காக செய்திடும் ஊழியத் தைக் குறித்து, உயர்த்தி மேன்மை பாராட்டுவதற்கு “பூஜ்யநிலை” அடைந்தவர்களாய் இருக்க வேண்டும்!*

*நம்முடைய ஊழியங்கள் அனைத்தும்* ***தேவன் மாத்திரமே காணும்படியாய்*** *மறைத்து வைத்திருக்க வேண்டும். நம் ஜீவியத்தில், நம்மை உயர்த்தும் ‘ஒரு வாசனை இருந்தால்கூட’ நாம் தேவனிடமிருந்து கிருபையை பெற்றுக்கொள்ள இயலாது! ஏனெனில், தேவன் தன்னுடைய கிருபையை தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தருகிறார்!!*

# குணாதிசயம் -41

**பரிசேயர்கள் பிறரை குற்றம் சாட்டுவார்கள்:**

*“அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி, போதகரே! இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப் பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்கு கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்? என்றார்கள். அவர் மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள்” (யோவான் 8:3-6) என வாசிக்கிறோம்.*

“விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ கல்லெறிந்து கொள்ளப் பட வேண்டும்” என்ற பிரமாணத்திற்குப் பின்பாக இருந்த “**தேவனுடைய இருதயத்தை**” பரிசேயர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஸ்திரீகள் கல்லெறிந்து கொல்லப்படுவதைக் காண்பதில் தேவனுக்கு யாதொரு இஷ்டமும் இல்லை.... ஆனால், விபசாரத்திற்கு செல்லும் வழிக்கு ஓர் கடுமையான தடையை வைத்திடவே தேவன் விரும்பினார். உண்மை யில், இந்த பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்திட பரிசேயர்களுக்கு எவ்வித ஆர்வமும் இல்லை! அவர்கள் விரும்பியதெல்லாம், ஏதாவது காரணம் கண்டுபிடித்து இயேசுவை குற்றம் சாட்டுவதற்கே அதிகமாய் விரும்பினார்கள்.

**இவர்கள் பாவியாகிய ஸ்திரீயை ஏற்கனவே குற்றம் சுமத்தி விட்டார்கள்.... இப்போதோ, பாவமில்லாத தேவகுமாரன் மீதும் குற்றம் சுமத்த விரும்பினார்கள்! பரிசேயர்கள், எப்போதும் இப்படிதான் இருக்கிறார்கள். இவர்களிடம் யாதொரு தெய்வபயமும் இல்லாதபடியால், எல்லோர்மீதும் சர்வ சாதரணமாய் குற்றம் சுமத்துவதைப் போலவே, தேவபக்தி நிறைந்த மனிதர்கள் மீதும் குற்றம் சுமத்துகிறார்கள்!**

இப்போது நடந்த நிகழ்ச்சியானது, அவர்களது “22-வது சிக்க வைத்திடும்” நிகழ்ச்சியாகும்! இங்கு ‘இயேசு என்ன சொன்னாலும்’ அது அவரை குற்றம் சுமத்துவதற்குரிய காரணமாய் வைத்துக் கொள்வார்கள்! இயேசு எழுந்து நின்று “கல்லெறிந்து கொல்லுங்கள்!” என கூறியிருந் தால், உடனே அவர்கள் “இயேசுவிடம் மனதுருக்கமில்லை!” என குற்றம் சுமத்தியிருப்பார்கள்! அல்லது “கூடாது, அவளை கல்லெறிந்து கொல்ல கூடாது!” என கூறியிருந்தால், உடனே அவர்கள் “ மோசேயின் பிரமாணத்தை இயேசு கைக்கொள்ளவில்லை!” எனவும் குற்றம் சுமத்தி இருப்பார்கள்! ஒரு காசை சுண்டிவிட்டு “தலையாய் இருந்தால் நாங்கள் ஜெயிப்போம், வாலாயிருந்தால் நீங்கள் தோற்பீர்கள்!” என ஒருவர் கூறிவிட்டு, அந்த காசு ‘இருபக்கமும் தலையாய் இருந்தால்’ அந்த காசு எப்படி விழுந்தாலும் அவர்கள் ஜெயித்துவிடுவார்கள்! ஆனால், அவர் களால் ஜெயிக்கமுடியவில்லை.... இயேசுவிடம் தோற்றுப் போனார்கள்!

இயேசுவோ, உடனடியாக பதில் கூறாமல், **அமர்ந்திருந்து தன் பிதாவினுடைய ஒரு வார்த்தைக்காய் காத்திருந்தார்!** பிதாவினுடைய பதிலைக் கேட்ட மாத்திரத்தில், அவர்களிடம் "உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் கல்லெறியக்கடவன்!" என கூறினார். பிதாவினிடத்திலிருந்து வரும் ஒரே ஒரு வாக்கியம் "பிரச்சனையை தீர்ப்பதற்குப்" போதுமானதாய் இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலைகளில், நீங்கள் பரிசுத்த ஆவியை கவனித்து கேட்பவர்களாக இருந்தால், ஓர் நீண்ட பிரசங்கத்தை நீங்கள் பிரசங்கித்திட தேவையில்லை. உங்கள் எதிராளிகளின் வாயை "ஒரே ஒரு வாக்கியம்" வாயடைக்கச் செய்துவிடும்! இன்றும்கூட, பிறரை குற்றம் சுமத்தும் பரிசேயர்களாய் இராமல் இருப்பவர்களுக்கு "இதுபோன்ற ஞானமான வார்த்தைகளைத்"தேவன் தருகிறார். இவ்வித பாக்கியத்திற்குரியவர்களுக்கு, தேவன் தரும் வாக்குத்தத்தம் என்னவென்றால் "உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்!" என்பதுதான்! (லூக்கா 21:15).

இயேசு விபசாரத்திற்கு எதிர்ப்பாக நிற்பவரா? ஆம், முழு நிச்சயமாய் இயேசு அதை வெறுக்கிறார்! ஆகிலும், விபசாரத்திற்கு எதிராக நிற்பதைவிட .... இன்னும் அதிகமாய், **பிரமாணத்துவகட்டிற்கு** அவர் எதிர்த்து நிற்கிறார். அதை வெகுதெளிவாய் இங்கு நாம் காண்கிறோம்.

இயேசுவின் ஒரு பக்கத்தில் விபசார ஸ்திரீயும், பிரமாணத்திற்கு உட்பட்ட பரிசேயர்கள் இயேசுவின் மறுபக்கத்திலும் நின்றார்கள். ஆனால் முடிவில் விபசார ஸ்திரீ மாத்திரமே இயேசுவின் பாதத்தில் விழ்ந்தவளாய் நின்றாள்! அச்சமயத்தில் இயேசு பேசிய வார்த்தைகள் மற்ற அனைவரை யும் துரத்திவிட்டது! அந்த ஸ்திரீயின் கண்ணில் 'விபசாரம்' என்ற துரும்புமாத்திரமே இருந்தது. ஆனால், பரிசேயர்களின் கண்களிலோ **பிரமாணத்துவகட்டு, மற்றும் பகை** ஆகிய உத்திரங்கள் ஏராளமாய் பொதிந்து கிடந்தன!

இந்த விபசார மோசத்தில், பல இலட்சத்திற்கு ஒன்று போல் காணப்படும் சிறிய பிழைக்காக, எத்தனை முறை நீங்கள் நல்ல சகோதரர்கள், நல்ல சகோதரரிகளை நியாயம் தீர்த்திருக்கிறீர்கள்? என்ற கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள். உங்கள் வீட்டிலும் மற்றும் பல இடங்களிலும் **அவர்களின் முதுகுக்குப் பின்பாக** பேசிய வார்த்தைகளையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். இதுபோன்ற குற்றம் சாட்டுதலுக்கு நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு சமயமும், உங்கள் கண்ணிலிருக்கும் உத்திரம் பெரிதாகிக் கொண்டே செல்கிறது!

**ஆம், உங்கள் பகை, நியாயம் தீர்த்தல், குற்றம் சாட்டும் மனப்பான்மை.... மிக பெரியதாய் வளர்ந்து.... உத்திரங்கள் கண்களை அடைத்து, நீங்களோ ஆவிக்குரிய அனைத்திற்கும் குருடராகிப் போனீர்கள்!**

முடிவில், நீங்கள் யாருக்கு தீமை செய்தீர்கள்? மற்றவர்களைக் காட்டிலும், உங்களுக்கே!..... அதிகமாய் தீமை செய்து விட்டீர்கள்!! தன் சொந்த கண்ணில் ஒரு பெரிய உத்திரத்தை உடைய மனுஷன், மற்றவர்களுடைய கண்ணிலிருக்கும் துரும்புகளை அகற்றும் " ஒரு கண் டாக்டராய்" இருக்க முடியுமா? என்பதை நீங்கள் யோசித்து பாருங்கள். இப்படிப்பட்டவர்களிடம், ஆண்டவருடைய வார்த்தை என்ன பேசுகிறது என்பதை நீங்கள் கேட்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது: "நீ, உன் சகோதரர்களையும் உன் சகோதரிகளையும்..... விட்டுவிடு! அவர்களுடைய கண்களில் சில துரும்புகள் மாத்திரமே இருக்கிறது! அவர்களின் துரும்புகளை எல்லாம் சேர்த்து குவித்து வைத்தாலும், அதைக் காட்டிலும் உன் கண்ணிலிருக்கும் உத்திரமே அதிக மோசம் நிறைந்ததாகும்!" என்றே பேசுகிறது.

இந்த குற்றம் சாட்டும் ஆவிக்கு, இயேசு ஏன் இவ்வளவு எதிர்ப்பாக இருக்கிறார்? அது ஏனென்றால், அவர் பரலோகத்தில் இருந்தபோது, பிசாசானவன், தன் "**சகோதரர் மேல் குற்றம் சாட்டுகிறவன்**" என்ற பட்டத்தை தாங்கியவனாய், அவர்களை இரவும் பகலும்..... இடைவிடாமல் குற்றம் சுமத்தியதை இயேசு கேட்டிருந்தார் (வெளி 12:10). இயேசு இந்த பூமிக்கு வந்து, ஜனங்களிடமும் இதே ஆவி இருந்ததைக் கண்டபோது, அது அவருக்கு "பிசாசை" நினைப்பூட்டுவதாய் இருந்தது! இந்த குற்றம் சுமத்தும் ஆவியை, இயேசு அன்றும் வெறுத்தார்! இன்றும் வெறுக்கிறார்!! ஆகவே, நீங்கள் பிறரை குற்றம் சாட்டும்போது.... நீங்கள் "பிசாசை" இயேசுவுக்கு நினைப்பூட்டுவதாய் இருப்பதை உணருகிறீர்களா? இந்த உண்மையை, அனேக விசுவாசிகள் இன்னமும் காணவில்லை! அது ஏனென்றால், அவர்கள் கண்ணிலிருக்கும் உத்திரம், அவர்களை ஏற்கனவே குருடாக்கி வைத்து விட்டது!

30-ஆண்டுகளுக்கு மேலாய் நான் பிரசங்கித்து வரும் ஒரு செய்தி என்னவென்றால் "நீங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், பிறரை நியாயம் தீர்ப்பதை நிறுத்தி, உங்களை நியாயம் தீர்க்க துவங்குங்கள்!" என்பதுதான். நுண்ணிய அணுக்களைக் காட்டும் பூத கண்ணாடியை பிறருக்கு அல்ல, உங்களுக்கு வைத்தே பாருங்கள்! இவ்வாறு உங்களை நியாயம் தீர்த்த பிறகு, நீங்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதையும் நான் சொல்லுகிறேன்: ஆம், "**இன்னமும் அதிகமாய் உங்களையே நியாயம் தீர்த்து பாருங்கள்!** இந்த செயலை எப்போது நீங்கள் நிறுத்த வேண்டும்? நீங்கள் என்று இயேசு கிறிஸ்துவைப்போல் முழுவதும் மாறுகிறீர்களோ, அன்று நிறுத்துங்கள்!" அப்போஸ்தலனாகிய யோவான், தன் ஜீவியத்தின் கடைசியில் விசுவாசிகளுக்கு கூறிய செய்தியை கேளுங்கள்: "பிரியமானவர்களே, கிறிஸ்து வெளிப்படும் போது நாம் அவருக்கு ஒப்பாய் இருப்போம்.... இப்படிப்பட்ட, இந்த நம்பிக்கை வைத்திருக்கிற ஒவ்வொருவரும்,

*கிறிஸ்து சுத்தமுள்ளவராய் இருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்து கொள்ளக்கடவன்!" (1 யோவான் 3:2,3) என்றார்.*

*அப்படியானால், ஒரு சபைக்கு தலைவராய் இருப்பவர், தவறு செய்யும் நபர்களை எவ்வாறு திருத்த வேண்டும்? கர்த்தர் அவருக்கு எவ்வளவு இரக்கம் காண்பித்திருக்கிறாரோ, அதே அளவிலான அந்த மகா இரக்கத்தைக் கொண்டே திருத்த வேண்டும். இந்த ஸ்திரீ செய்த விபசார பாவத்தை 'கண்டும் காணமால்' இயேசு விட்டுவிடவில்லை! அப்படி ஒருபோதும் இல்லை!!*

**அவர் முதலாவதாக,** *மிகுந்த மனஉருக்கத்தோடு "நான் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை" என்றே கூறினார்! அதற்கு பின்பு, அவளை கடுமையாக எச்சரித்து "மீண்டும் இந்த பாவத்தை ஒரு போதும் செய்யாதே!" எனக் கூறினார்.*

**தேவனுடைய கிருபை நம் பாவத்திற்காக அனுதாபப்படுவதில்லை! முதலாவது..... நம் பாவத்தை மன்னித்து.... பின்பு, பாவத்தை நமக்கு எச்சரித்து.... பின்பு, பாவம் செய்யாதிருப்பதற்கும் நமக்கு உதவியை அளிக்கிறது!**

*அங்கிருந்த எல்லா பரிசேயர்களும் ஏன் போய் விட்டார்கள்? அவர்கள் எல்லோரும்* **மனம் உடைந்தவர்களாய்,** *ஆண்டவரிடத்தில் வந்து "ஆண்டவரே, என்னை தயவாய் மன்னியுங்கள். என்னுடைய அந்தரங்க பாவங்களைக் குறித்தும், என்னுடைய கடினமான பிரமாணத்துவ மன நோக்கத்தைக் குறித்தும் வெளிச்சத்தைப் பெற்று விட்டேன். இப்போது, இந்த ஸ்திரீயைக் காட்டிலும் நானே மோசமானவன் என்பதையும் கண்டு கொண்டேன்! தயவுசெய்து என் மீது இரக்கமாயிரும்!!" என்றே இயேசு விடம் கூறியிருக்க வேண்டும். ஆனால், அவர்களில் ஒருவர்கூட இயேசு விடம் இவ்விதமாய் உணர்ந்து வரவில்லை!*

*இப்போது, அனேக ஜனங்களுடைய சில தவறுகளைக் கண்டு குற்றம் சாட்டுகிற உங்களைக் குறித்து இக்காரியம் எப்படி இருக்கிறது? இன்று ஆண்டவர் உங்களை உடைத்து விடுவதற்கு நீங்கள் மனதாய் இருக்கிறீர்களா?*

*சில ஜனங்கள் என்னிடம் வந்து, எனக்கு விரோதமாய் அவர்கள் செய்த அல்லது பேசிய வார்த்தைகளைக் குறித்து என்னிடம் மன்னிப்பு கேட்பார்கள். ஆனால், அவர்களோ தங்களின் செயலைகுறித்து சிறிதேனும் கூட உடைபடாதிருந்ததை நான் உணர்ந்திருக்கிறேன்! ஆம், அவர்கள், தங்கள் பாவத்திற்காக மெய்யாகவே மனம் திரும்பவில்லை! எப்படியா கிலும் தங்கள் மனசாட்சியை சாந்தப்படுத்த வேண்டுமே என்ற ஆத்திரத் தில் "ஒரு பிரமாணத்திற்கு" கீழ்ப்படிந்தார்கள், அவ்வளவுதான்! இருப்பினும், நானோ அவர்களை உடனடியாக மன்னித்து விடுகிறேன். ஆனால், இவர்கள் பிரமாணத்துவ ஆவியின்படி நடந்து கொண்ட படியால், மீண்டும் அந்த பாவத்திற்குள் இவர்கள் விழுவார்கள் என*

*நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்!! இவர்கள் சட்ட நுணுக்கத்தை உணர்ந்து விட்டார்கள்! அதன்படி 'ஒரு மூத்த சகோதர னின் முதுகுக்குப் பின்பாய் தீமை பேசாதிருப்பாயாக' என்ற சட்ட இலக்கம் 347 - ஐ மீறி, அதற்கு தாங்கள் கீழ்படியவில்லை என புரிந்து கொண்டார்கள். ஆகவேதான், அவர்களுக்கு மன்னிப்பு கேட்கின்ற அவசியமாயிற்று! இப்போது 'மன்னிப்பு கேட்க வேண்டுமென்ற' சடங்கையும் ஒருவகையாய் நிறைவேற்றி விட்டார்கள்! ஆம், "தவறு செய்தவர்களிடம் மன்னிப்பு கேளுங்கள் என்ற விதி இலக்கம் -9" -ஐ கடைப்பிடித்து விட்டார்கள்!*

*அவ்வளவுதான். ஆனால், அவர்களுக்குள் எந்த மாற்றமும் நிகழவில்லை! அவர்களோ, முன்பு போலவே தங்கள் பழைய ஜீவியத்தை தொடருகிறார்கள்!!*

*நம் சொந்த பாவங்களைக்குறித்து தேவன் நமக்கு வெளிச்சம் தருவாரென்றால் "அந்த கண் கூசும் வெளிச்சத்திற்கு முன்பாக" இயேசுவின் பாதத்தில் ஒரு செத்த மனிதனைபோல் அல்லவா வீழ்ந்திருப்பார்கள்! (வெளி 1 : 17). மாத்திரமல்ல, அந்த வெளிச்சத்தில் "பூமியிலுள்ள எந்த பாவிகளிலும் பிரதானமான பாவிகளாய்" அல்லவா தங்களை கண்டிருந்திருப்பார்கள்! (1 தீமோ 1:15). உங்கள் பாவங்களை நீங்கள் அப்படி உணர்ந்ததுண்டா? கொஞ்சம் ஏதோ தடுக்கி விழுந்ததாக எண்ணுகிறீர்களோ? அப்படித்தான் நீங்கள் இருப்பீர்கள் என்றால், நீங்கள் ஓர் பரிசேயனாகவே இருக்கிறீர்கள்!*

**தங்கள் கண்களில் துரும்பு மாத்திரமே கொண்டிருந்தவர்களை நீங்கள் கல்லெறிந்த குற்றத்திற்காக, ஆழமாய் மனம் திரும்பவில்லையென்றால், உங்கள் ஜீவியத்தில் காரியம் நேர்த்தியாய் ஒருபோதும் ஈடேறாது! உங்களின் கடின முரட்டாட்டமான இருதயத்தை தேவன் உடைப்பராக!!**

*"இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்" என யாக்கோபு 2:13 நமக்கு நினைவூட்டுகிறது. இந்தப் பகுதியில் சபையை நடத்துகின்றவர்களே முதல் குற்றவாளிகளாய் மாறுகிறார்கள்! பெற்றோர்களும்கூட தங்கள் பிள்ளைகளிடத்தில் இரக்கமற்றவர்களாய் போய்விடாதபடிக்கு அதிக ஜாக்கிரதை கொண்டவர்களாய் இருக்க வேண்டும்!*

*ஒரு சபைக்குத் தலைவராய் இருப்பவர் "விபச்சாரம் செய்து விட்டார்" என்ற வீழ்ச்சி, ஒரு சபையை அழித்திட மாட்டாது! ஏனெனில், விபச்சாரம் ஒரு கொடிய பாவம் என எல்லா விசுவாசிகளும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, அது போன்றவர் சபையின் பொறுப்பிலி ருந்து உடனடியாக அகற்றப்பட்டு விடுவார். ஆனால் ஒரு சபையின் தலைவன் "பிரமாணத்துவத்திற்கு" உட்பட்டவராய் இருந்தால், அவரே அதிக அபாயத்திற்குரியவர்..... ஏனென்றால், அவர் "பரிசுத்தத்தை" பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான் காரணம்! "பிரமாணத்*

துவத்தைக் குறித்த வெளிச்சம் இல்லாதவர்கள், அவரைப் பின்பற்றி... அவர்களும் “பிரமாணத்துவத்திற்குரியவர்களாய் மாறி விடுவார்கள்”. ஒரு குருடான பரிசேயனாய் இருந்து கொண்டு, அவர் விழுந்த அதே ஆழமான பரிசேயத்துவ குழிக்கு மற்றவர்களையும் இவர் நடத்திச் செல்கிறார்!

இவ்வாறு, நீங்கள் விபச்சாரத்தில் விழுகிறதைவிட, பிறரை நியாயந்தீர்த்து குற்றம் கூறும் மனநிலை மிகமோசமானது என நீங்கள் மெய்யாகவே கண்டு கொண்டீர்களா? கடந்த ஒரு மாதத்தில் நீங்கள் பத்துமுறை விபச்சாரத்தில் விழுந்திருந்தால் எவ்வாறு மனந்திரும்பி யிருப்பீர்கள்? அதைவிட அதிகமாய் “குற்றம் சாட்டும் ஆவியுடையவர் களாய்”நீங்கள் இருப்பதற்கு, நீங்கள் ஆழமாய் மனம் திரும்ப வேண்டும்!

---

## குணாதிசயம் -42

**பரிசேயர்களுக்கு, உண்மையில் சாத்தான் பிதாவாய் இருக்கும் நிலையில் “தேவன் தங்கள் பிதா” என எண்ணிக் கொள்வார்கள் :**

*இயேசு அவர்களை நோக்கி, “தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள்....... நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்” (யோவான் 8:42,44) என்றார்.*

பரிசேயருடைய முகத்திற்கு நேராய் “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்” என இயேசு கூறிவிட்டார். சில பிரசங்கிமார்கள் “எந்த மனுஷனும் பிசாசின் பிள்ளைகள் அல்ல” என்றே விசுவாசிக்கிறார்கள். ஆனால், இயேசுவோ இங்கு இதை மறுத்து கூறியிருக்கிறார். ‘இந்த சத்தியத்தை குறித்து’ இயேசுவே நம்மைவிட தெளிவாய் அறிந்திருக்கிறார். இந்த பரிசேயர்கள் தேவனைத் தங்களு டைய பிதா என எண்ணியிருந்தார்கள். **ஆனால் உண்மையில் சாத்தானே அவர்களுடைய பிதாவாயிருந்தான்.**

இதே நிலையில்தான், இன்றுள்ள பரிசேயர்களும் இருக்கிறார்கள். பிள்ளைகள், தங்களுடைய பிதாக்களுடைய சுபாவத்தையே பிரதிபலிக் கிறார்கள். அதன்படி, தங்கள் பிதாவாகிய பிசாசின் “சகோதரர்களைக் குற்றம் சாட்டுகிற” குணாதிசயத்தை இந்த பரிசேயர்களும் பெற்று இருந்தார்கள். இன்று அநேக ‘கிறிஸ்தவர்கள்’ மிகச் சாதரணமாய் விசுவாசிகளை குற்றம் சாட்டி ஆக்கினைக்குள் தீர்த்துக் கொண்டே, அதே சமயம் இந்த சுபாவம் **“சாத்தானுடைய சுபாவம்”** என்பதே சிறிதேனும் கூட அவர்கள் அறியாதிருப்பது மிகுந்த ஆச்சரியத்தையே நமக்குத் தருகிறது.

ஆகவே, சாத்தானே இவர்களுக்கு தகப்பனாய் இருந்திட முடியும். இது போன்ற ஜனங்கள், தேவனைத் தங்களுடைய பிதாவாக எங்ஙனம்

*கருதக்கூடும்? இது, முற்றிலுமாய் குருட்டுத் தன்மையே ஆகும்! அன்று, முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிசேயர்கள் 'இயேசு தங்களிடம் கூறியதை' நம்பவில்லை. அதுபோலவே, இன்றுள்ள பரிசேயர்களும் இதை நம்பவில்லை!!*

*பல வருடங்களாய் எங்கள் சபைக்கு வந்து கொண்டிருக்கும் சில ஜனங்களிடத்தில் "நீங்கள், ஆண்டவரை உங்கள் வாழ்வில் அறிந்திருப்ப தாக நான் கருதவில்லை" என கூறியிருக்கிறேன். ஏனெனில் "ஆண்ட வராகிய இயேசுவே என் உள்ளத்தில் வாரும்" என இவர்கள் பலமுறை கூறியதினிமித்தம், தாங்கள் கர்த்தரை அறிந்து கொண்டதாக எண்ணி விட்டார்கள். ஆனால், அவர்கள் ஜீவியத்தில் யாதொரு கனியையும் நான் காணதபடியால் 'அதுவே' அவர்கள் கர்த்தரை அறியவில்லை என்பதை எனக்கு சுட்டிக் காட்டியது.*

**அநேக சபைத் தலைவர்கள் 'ஜனங்களிடத்தில் உண்மையைச் சொல்வதற்கு' இயேசு கிறிஸ்துவைப் போல் உத்தமம் கொண்டிருக்கவில்லை!**

*இது போன்றவர்கள், ஜனங்களை நரகத்திலிருந்து இரட்சிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை விட அவர்களின் மதிப்பைத் தேடுவதற்கே அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்! இவ்வாறாகவே, மனந்திரும்பாத ஜனங்களின் இரத்தப் பழியானது 'இத்தகைய' தலைவர்களின் கையில் விழுந்திருக்கிறது!*

## குணாதிசயம் - 43

**பரிசேயர்கள் பொய்யரும் கொலைகாரருமாயிருக்கிறார்கள் :**

*இயேசு பரிசேயர்களை நோக்கி "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள். அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமா யிருக்கிறபடியால், அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" (யோவான். 8.44) என்றார்*

விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயிடத்தில் பரிசேயர்கள் "ஓர் கொலை பாதாக விருப்பம் கொண்டவர்களாய்" இருந்தார்கள். இன்றைய பரிசேயர்கள் நாகரீகம் அடைந்து விட்டபடியால், ஜனங் களைத் **தங்கள் நாவினால் கொலை** செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

யாரோ சிலரைப் பற்றிய பொல்லாத சேதிகளை நீங்கள் பரப்பி அவர்களுடைய கனத்தை அல்லது மதிப்பை கொலை செய்திருக்கிறீர் களா? இவ்வாறு நீங்கள் பரப்பிய சேதிகள் உண்மையாக இருந்தாலுமே கூட, அதுவும் கொலைபாதக செயலே ஆகும்! ஏனெனில், சாத்தான் விசுவாசிகளைக் குறித்து தேவனிடத்தில் குற்றம் சாட்டும் போது.... அவன் தேவனிடத்தில் யாதொரு பொய்யும் சொல்வதில்லை. அவன் தேவனி டம் உண்மையை பேசுவதற்கு காரணம், தேவனிடத்தில் அவன் பொய் சொல்ல முடியாது என்பதை அறிந்திருந்தான்!

**உங்கள் பாவங்களைப் பற்றிய உண்மையையே அவன் தேவனிடம் கூறினாலும், அதை குற்றம் சாட்டும் ஆவியோடு கூறுகிறான்!**

இதேவிதமாய், ஒரு விசுவாசியினுடைய உண்மையான விசயங்களை ஒருவன் கூறினாலும், அதை குற்றம்சாட்டும் ஆவியினால் அந்த விசுவாசியின் மதிப்பை நாசம் செய்வதற்கென்றே கூறுகிறான். நம்மில் ஒருவர்கூட தங்கள் சொந்த பிள்ளைகளின் விசயங்களை இந்த விதமாய் தூற்றி பரப்பமாட்டோம்! உங்கள் மகள் விபசாரத்தில் விழுந்து விட்டால், உங்கள் சபையில் உள்ள ஒவ்வொருவரிடத்திலும் அதை குறித்து கூறுவீர்களா? அல்லது, உங்களால் முடிந்த அளவு அதை மறைப்பீர்களா? உங்கள் மகன்களும், மகள்களும் எத்தனையோ தவறுகளை கடந்த நாட்களில் செய்திருக்கிறார்கள். ஆகிலும், பெற்றோர்களாகிய நீங்கள் அவைகளை அன்பினால் மூடி, அவர்களின் மதிப்பை பாதுகாத்துக் கொண்டீர்கள். இதே போன்ற உணர்வு, மற்றொரு சகோதரரின் மகன், அல்லது மகள் விசயத்தில் ஏன் உங்களுக்கு ஏற்படவில்லை? இவ்வித அனைத்து "கொலை பாதகர்களையும்" சபையிலிருந்தே நாம் அகற்றிவிட வேண்டும்.

பரிசேயர்கள் பொய்யர்களாகவும் இருந்தார்கள். கடந்த வருடங்களில் நான் திரும்ப திரும்ப ஒரு செயலை கவனித்துப் பார்த்தி ருக்கிறேன். அது என்னவெனில், எப்போதெல்லாம் ஒரு விசுவாசி பின்மாற்றம் அடைகின்றானோ, அவன் உடனே பொய் சொல்லத் துவங்கி விடுகிறான். அது எப்படியெனில், சாத்தான் அவர்களின் இருதயத்தையும் நாவையும் பின்மாற்றத்தின் அடுத்த கணமே கைப் பற்றியது போல் தோன்றுகிறது! தங்கள் பொய்களை இனிப்பான வார்த்தைகளில் மூடிவைத்து, தாங்கள் நேர்மையாய் இருப்பதுபோல் எல்லா காரியங்களையும் பேசுவார்கள்..... உண்மையைத் தவிர, அவர்கள் பேசும்போது முகத்துக்கு நேராயும் பேச மாட்டார்கள். ஆம், பிசாசான வன் பொய்களுக்கு பிதா! இருப்பினும் அந்த பொய்களைப் பெற்று உருவாக்குவதற்கு, ஒரு தாய் அவனுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, **உங்கள் மூலமாய்** "பொய்யை" அவனால் உற்பத்தி செய்துவிட முடியும்!

பேதுரு அனனியாவைப் பார்த்து "பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பியது என்ன?" (அப்போஸ்தலர் 5:3) என கேட்டார். ஒரு பிரசங்கி, பிரசங்கிக்கும்போதுகூட, அந்த வேளையிலும் தன்னுடைய நாவை சாத்தானுக்கு ஒப்புவித்திட முடியும்! இவ்வித நிலையில், தேவன் அவனை அபிஷேகித்து, அவன் நாவைப் பயன்படுத்தி பிரசங்கிக்கும்படி அவன் எதிர்பார்த்திட இயலாது. அவன் தன் பாவத்தை அறிக்கை செய்து, மனந்திரும்பி, தன் பொய் பழக்கத்தை முற்றிலுமாய் விட்டுவிடும் வரை, தேவன் அந்த ஊழியனின் நாவை பயன்படுத்திட மாட்டார்!!

நாம் எவ்வளவுக்கு அதிகம் கொலையை வெறுக்கிறோமோ, அவ்வ ளவுக்கு அதிகமாய் பொய் சொல்லுதலையும் நாம் வெறுக்க வேண்டும்!

---

## குணாதிசயம் -44

**பரிசேயர்கள் தங்களை கவனித்து கேட்காதவர்களை துன்புறுத்துகிறார்கள்:**

*குருடனாய் இருந்து பார்வை அடைந்தவனிடம் "முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ?" என்று சொல்லி அவனை தேவாலயத் திற்குப் புறம்பே பரிசேயர்கள் தள்ளிவிட்டார்கள் (யோவான்.9:34).*

ஒரு ஏழையான பிறவிக் குருடனின் கண்களை பரிசேயர்களால் சுகப்படுத்த முடியவில்லை. ஆனால் இயேசு அவனை சுகப்படுத்தி யவுடன், அவர்கள் கோபமடைந்து, அவனை "பாவி" என அழைத்து தேவாலயத்திற்குப் புறம்பே தள்ளி விட்டார்கள்.

பரிசேயத்துவமான சபைத்தலைவர்கள், ஜனங்கள் தங்கள் கட்டளைக்கு கீழ்படியாவிட்டால் அவர்களை சபையிலிருந்து தள்ளி விடுவதாக பயமுறுத்துகிறார்கள். பிறர்மீது அதிகாரம் செலுத்தவும், ஆளுகை செய்யவுமே பரிசேயத்துவமான மூப்பர்கள் விரும்புகிறார்கள். ஒரு சகோதரன் பாவம் செய்தால், அவனிடம் நாம் சென்று, அவனிடம்

*பேசி, பாவம் செய்த அவனை மீட்டு ஆதாயப்படுத்தவே நாம் முயற்சிக்க வேண்டும்(மத்.18:15). சபையை விட்டு புறம்பாக்குவது, கடைசி தருண மாகவே இருக்க வேண்டும். இருப்பினும், நமது இலக்கோ பாவம் செய்த சகோதரனை எப்படியாவது முயற்சித்து ஆதாயப்படுத்த வேண்டும் என்பதாகவே எப்போதும் இருக்க வேண்டும்.*

*விசுவாசிகள் பாவத்தில் விழுந்து தவறான காரியங்களை செய்யக்கூடும். அவ்வாறு சம்பவிக்கும்போது, அந்த சபையின் தலை வருக்கு உள்ள வாய்ப்பு என்னவெனில் "இயேசு பேசியதைப் போல்" பேச வேண்டும்! இயேசுவோ அந்த சகோதரனை* **ஆதாயப்படுத்தவே** *நாடுவார். பிசாசோ, அந்த சகோதரனை* **அழிப்பதற்கே** *விரும்புவான்! பரிசேயர்களோ, பிசாசோடு கைகோர்த்தவர்களாய், தங்களுக்கு செவி கொடாதவர்களை அல்லது தங்கள் ஆளுகைக்கு அடங்கி இருக்காதவர் களை துன்புறுத்துகிறார்கள்!*

---

## குணாதிசயம் -45

**பரிசேயர்கள், தாங்கள் செய்ய இயலாத அற்புதங்களை, பிறர் செய்வது கண்டு பொறாமைப்படுகிறார்கள் :**

*பரிசேயர்கள் " நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே....." என்றார்கள். அந்த நாள் முதல், அவரை கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள் (யோவான் 11: 47, 53).*

*யோவான் 11-ம் அதிகாரத்தில், இயேசு அப்போதுதான் லாசருவை உயிரோடு எழுப்பியிருந்தார். இதைக் குறித்து, பரிசேயர்கள் பரவச மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும்! ஆனால், அவர்கள் அப்படியிருக்க வில்லை. அது ஏனென்றால் இந்த அற்புதத்தை செய்தவர் "தங்கள் குழுவை சார்ந்தவர் அல்ல" என்பதுதான். ஆம், இயேசு வேறொரு ஸ்தாபனத்திற்குரியவர்!!இதுவே, பரிசேயர்களை பொறாமை கொள்ளச் செய்தது. பொறாமை என்பது மிகவும் வெளிப்படையான ஒன்றாகும். உலகத்திற்குரிய மனுஷனான பிலாத்துகூட பரிசேயர்களிடத்தில் இருந்த பொறாமையை எளிதில் கண்டு கொண்டான் (மத் 27:18). நாம் பொறாமை அடைவது குறித்து எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம்.*

*அற்புதங்கள் செய்தவர்களைக் குறித்து பரிசேயர்கள் பொறாமை படுகிறார்கள். அநேக விசுவாசிகளை ஏமாற்றும் தொலைக்காட்சி சுவிசேஷகர்கள் நடத்தும் "போலி அற்புதத்தை" இங்கே நான் குறிப்பிடவில்லை! இது போன்ற எண்ணற்ற போலிகளை நாம் எல்லோருமே கண்டிருக்கிறோம். நான் இங்கு குறிப்பிடுவது, இன்று நடைபெறும் "உண்மையான அற்புதங்களே" ஆகும்! ஆனால் இவ்வித உண்மையான அற்புதங்களை, தொலைக்காட்சியிலோ அல்லது இன்றைய "சுகமளிக்கும் கூட்டங்களிலோ" நீங்கள் காண்பதில்லை!*

*இன்றும்கூட, அப்போஸ்தல நடபடிகளில் காணப்படுவது போல் எங்கெல்லாம் சுவிசேஷம் 'முதலாவதாக' பிரசங்கிக்கப்பட்டதோ.... வட இந்தியா போன்ற புது இடங்களில்* **உண்மையான அற்புதங்கள்** *நடந்து கொண்டுதான் இருக்கின்றன.*

**இவ்வாறு சுவிசேஷம் முதலாவதாக பிரசங்கிக்கப்பட்ட இடங்களில்தான், தேவன் அற்புதங்கள் நடக்கும்படி செய்தார் என்ற உண்மையை இன்று அநேகர் "அப்போஸ்தல நடபடிகளில்" காணத் தவறிவிட்டார்கள்!**

*இன்றும் இது போன்ற அற்புதங்களை, மிகச் சாதரணமான..... இயேசுவைப் போலவே அறியப்படாத விசுவாசிகளாய்.... தாங்கள் செய்த அற்புதங்களை விளம்பரம் செய்ய ஆர்வமில்லாத...... எளிய ஜனங்களைக் கொண்டு ஆண்டவர் அற்புதங்களைச் செய்கிறார்! அற்புதங்களை செய்பவர் நம் தேவன்! உங்கள் வாழ்க்கையில் தேவன் ஒரு அற்புதத்தை செய்வதற்கு, உங்களால் விசுவாசிக்க முடியவில்லையென்றால், நீங்கள் ஒரு பரிசேயன்! நீங்கள் வியாதிப் பட்டிருந்தால், அந்த வியாதியை ஏற்றுக் கொள்பவராய் இராமல், அந்த வியாதியை தேவன் சுகமாக்கும் படி ஜெபிக்கிறவர்களாகவே நீங்கள் இருக்க வேண்டும்! மற்றவர் களுக்கு இல்லாத சிலாக்கியங்களை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பெற்றிருக்கிறோம். எபிரெயர் 6:5 "இனிவரும் உலகத்தின் பெலன்களை நாம் ருசி பார்த்திட முடியும்" எனக் கூறுகிறது. ஏதேனும் ஒரு காரணத்தினிமித்தம், உங்களை சுகமாக்குவது தேவனுக்கு சித்தம் இல்லையென்றால்..... அன்று பவுலுக்கு தேவன் தந்ததைப் போல் (2 கொரி 12:7-10)* **"சுகத்தை விட மேலான ஒன்றை"** *உங்களுக்குத் தரும்படி தேவனிடம் நீங்கள் கேட்கமுடியும்!*

*நீங்கள் ஒரு சபை மூப்பராய் இருந்தால், வியாதிப்பட்டவர்களை ஜெபத்திற்காக உங்களிடம் சபை மக்கள் அழைத்துவரக் கூடும். அது போன்ற நேரத்தில், உங்களிடம் இருக்கும் கொஞ்ச விசுவாசத்தைக் கொண்டு அவர்களுக்காக ஜெபியுங்கள்! அந்த வியாதி சுகமாவதன் மூலம் அந்த நபரை தேவன் தன் பட்சமாய் ஈர்த்துக் கொள்வார்! இவ்வாறு தேவன் உங்கள் ஜெபத்திற்கு பதில் அளிக்கும் போது, தேவனுக்கே மகிமை செலுத்த கவனம் கொண்டிருங்கள்! அதைக் குறித்து மேன்மை பாராட்டாதீர்கள்! இல்லையென்றால், நீங்களும் மிகப் பெரிய பரிசேயராய் மாறிவிடுவீர்கள்!!*

# குணாதிசயம் -46

**தாங்கள் செய்வதைப் போலவே செய்யாதிருக்கும் தேவ பக்தியுள்ள ஜனங்களை பரிசேயர்கள் நியாயந்தீர்க்கிறார்கள்:**

*“பரிசேயரில் சிலர் இந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளாத தினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள்” (யோவான் 9:16).*

ஜனங்களை, அவர்களுடைய தேவ பக்தியின்படி நிதானித்து அறியாமல் தாங்கள் அனுசரிக்கும் மார்க்க அனுசாரங்களை கைக் கொண்டு நடக்கிறார்களா? இல்லையா? என்பதை வைத்தே பரிசேயர் கள் நிதானிக்கிறார்கள். தாங்கள் அனுசரிக்கும் விதமாய் இயேசு **ஓய்வு நாளை** கடைப்பிடிக்காததினிமித்தம், அவர் நிச்சயமாய் தேவனிடத் திலிருந்து வந்தவரல்ல என முடிவெடுத்துவிட்டார்கள். சபையில் சில காரியங்கள் இன்னவிதமாய் நடக்க வேண்டுமென நமக்கென்று சொந்த அபிப்ராயங்களை வைத்துக் கொண்டு, அதே விதமாய் செய்யாதவர் களை “அவபக்தியானவர்கள்” என முத்திரையிட்டு அவர்களை நாமும் கூட புறக்கணிக்கிறவர்களாய் இருந்திட முடியும். மனதில் குடிகொள்ள அனுமதிக்கும் **தவறான எண்ணங்கள்,** ஐக்கியத்தையே சிதைத்துவிடும் ஓர் வலிமையான பொல்லாத ஆயுதமாகும்!

இங்கிலாந்தில் வில்லியம் பூத் அவர்களால் 19-ம்நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட “இரட்சணிய சேனை” சபையின் ஆராதனைகளில் “அப்பம் பிட்குதல்” ஒழுங்கு ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு அவர்கள் தந்த ஒரு காரணம் என்னவென்றால், அவர்களிடம் மனம்திரும்பி வந்த பெரும்பாலோர் குடிகாரர்களாயிருந்தபடியால், அப்பம் பிட்கும் ஆராதனையில் பங்கு பெறும் “திராட்சை ரசத்தை” பருகியவுடன்.... மீண்டும், தங்கள் குடிப்பழக்கத்திற்கு சோதிக்கப்பட முடியும் என்ற அச்சமே ஆகும். மேலும் தண்ணீர் ஞானஸ்நானத்தை கூட அவர்கள் கடை பிடிக்கவில்லை! அதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவெனில், ஞானஸ்நானம் எடுப்பவர்களில் பெரும்பாலோர், உண்மையான மனந் திரும்புதல் பெற்றிருக்கவில்லை. இவ்வாறெல்லாம் இருப்பினும், வில்லியம் பூத் அவர்கள், அந்நாட்களில் வாழ்ந்தவர்களில் பக்தி நிறைந்த ஒருவராய் இருந்தார். அவரும் அவருடைய மனைவியும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களை கிறிஸ்துவுக்கென உலகமெங்கும் ஆதாயப்படுத் தினார்கள். இது போன்ற **தேவ பக்தியுள்ள மனிதரை** நீங்கள் என்ன சொல்வீர்கள்? 150 வருடங்களுக்கு முன்பு நான் இங்கிலாந்து தேசத்தில் வாழ்ந்திருந்தால், வில்லியம் பூத் செய்திட்ட பணியோடு என்னை இணைத்திருப்பேன். ஒருவரும் செய்யத் துணியாத, குடிகாரர்களை தேவ னிடம் திருப்புவதும்! திருடர்களையும் விபச்சாரக்காரர்களையும் கிறிஸ்தவண்டை கொண்டு வருவதுமாகிய பணிகளை! அவர் ஒருவர்

*தவிர, அந்நாட்களில், வேறொருவரும் செய்ததில்லை. மேலே குறிப் பிட்ட இரண்டு உபதேச ரீதியான விசயத்தில் எனக்கு உடன்பாடு இல்லை என்பது உண்மையாய் இருந்தாலும்.... ஒரு மனுஷனுடைய தேவபக்தியை, ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய மேஜையை அளவு கோலாய் வைத்து நான் அளந்து பார்த்திட துணிய மாட்டேன்!*

*இவ்வாறு, வில்லியம் பூத் போன்ற தேவ பக்தியான மனிதர்களுக்கு எதிராய் குறை கூறும் வீண் வார்த்தைகளைப் பேசாதிருக்க நாம் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். பேதுரு, ஒத்தவேஷம் தரித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்ட சமயம், பவுல் அதை மிகவும் கடிந்து கொண்டார் என நாம் காண்பது உண்மைதான் (கலா 2:11). இருப்பினும்,* **பவுலுக்கு தேவன் அருளியிருந்த கிருபையை** *பேதுரு நன்றாய் விளங்கி அறிந்திருந்தார் (கலா 2:9). ஆகவே, பவுல் போன்ற ஓர் உத்தம சகோதரன் பேதுருவை கடிந்து கொண்டதை நான் ஏற்றுக் கொள் வதற்கு தயக்கம் ஏதுமில்லை!*

*ஆனால் இன்றோ, தேவ பக்தி நிறைந்த ஜனங்களைக் குறை சொல்பவர்கள் யார்? சந்தேகத்திற்கு துளியும் இடமில்லாதபடி, கர்த்தருக்கு தங்கள் பட்சத்தில் யாதொரு ஊழியமும் செய்யாதவர்களே குறை சொல்லுகிறார்கள்! அல்லது தேவனுடைய அங்கீகார முத்திரை யை யாதொரு வகையிலும் பெறாதவர்களே குறை சொல்லுகிறார்கள்!! தங்களைவிட பல்லாயிரம் மடங்கு பயன்படுத்தப்பட்ட தேவ பக்தியான புருஷர்களை, இந்த மதியீனமான விசுவாசிகள் குறை சொல்ல துணிந்து நிற்கிறார்கள்! இது ஒரு, பரிசேயத்துவ தீய குணமாகும்!!*

---

## குணாதிசயம் -47

**பரிசேயர்கள் தேவனிடம் அடையாளங்களைக் கேட்டு அவரைச் சோதிக்கிறார்கள்:**

*பரிசேயர்கள் இயேசுவை நோக்கி "போதகரே, உம்மால் ஒரு அடை யாளத்தை காண விரும்புகிறோம்" என்றார்கள் (மத். 12:38).*

*சத்தியத்தை நிச்சயித்துக்கொள்ள ஏதாவது ஒரு அடையாளத் தையோ அல்லது அற்புதத்தையோ இந்தப் பரிசேயர்கள் விரும்பினார் கள். ஒரு எளிமையான விசுவாசத்தைக் கொண்டு இவர்களால் ஜீவித்திட முடியவில்லை. ஆகவேதான், கிறிஸ்தவ சுகமளிக்கும் கூட்டத்தார், தங் களின் பொய்யான அடையாளங்களையும் அற்புதங்களையும் காண் பித்து 'இந்தப் பரிசேயர்களை' எளிதில் ஏமாற்றுகிறார்கள்! தேவனிடத் தில் ஒரு அடையாளத்தையோ அல்லது அற்புதத்தையோ கேட்பதை "ஒரு ஆவிக்குரிய அடையாளம்" என நீங்கள் ஒருபோதும் எண்ணிக் கொள்ளாதிருங்கள்!! இது ஒரு பரிசேயத்துவ அடையாளமே ஆகும். இவ்விதமான இவர்களின் கேள்வியை மீண்டுமாய் மத்தேயு 16:1-ம் வசனத்தில் நாம் காண்கிறோம்.*

## குணாதிசயம் - 48

**பரிசேயர்களுக்கு பாவிகள் மேல் எந்த அக்கறையும் இருப்பதில்லை:**

*பரிசேயர்கள் "வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப் பட்டவர்கள்" என்றார்கள் (யோவான் 7:49).*

*இன்றும்கூட இதே பரிசேயத்துவ மனநிலையை நாம் கொண்டவர் களாய், நரகத்திற்கு செல்லும் ஜனங்களைப் பார்த்து "கிறிஸ்துவை தங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொள்ளாத இந்த ஜனங்கள் யாவரும் நரகத்திற்குச் செல்லுகிறார்கள்!" என நாம் கூறிட முடியும். இந்த வாக்கியங்கள் உண்மைதான்! ஆனால் அதே சமயம், இந்த பரிசேயர் களைப் போலவே பேசிய இவர்களின் கூற்றில் "பாவிகளின் மேல் எந்த அக்கறையும் இவர்களுக்கு இல்லை!" என்ற அவர்களின் மனநிலையை யும் வெளிப்படுத்தி இருக்கிறது. நரகத்திற்கு செல்வோர் மீது உங்களுக்கு யாதொரு கரிசனையும் இல்லையென்றால், நீங்களும் ஒரு பரிசேயர்தான் என்பதை நிரூபித்து விட்டீர்கள். பிறருக்கு கிறிஸ்துவின் சாட்சியை நாம் அறிவிக்கும்போது "அவர்களுடையே இரட்சிப்பே" நமது அக்கறை யாய் இருந்திட வேண்டுமே இல்லாமல்..... அவர்கள்மேல் உள்ள இரத்தப் பழி என்னை விட்டு நீங்கியது என்பதாய் இருந்திடக் கூடாது. இன்று அநேக கிறிஸ்தவர்கள் ஜனங்களிடம் கைப் பிரதிகளை கரிசனை உணர்வில்லாமல் கொடுப்பதும், வீடுகளில் உள்ள தபால் பெட்டி களிலும் கார் போன்ற வாகனங்களிலும் கைப் பிரதிகளை போட்டுச் செல்வதும்..... "தங்கள் வேலை முடிந்து விட்டது" என்ற திருப்தியை பெறுவதற்கேதான்! "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவான். 3:17) என்றே வாசிக்கிறோம். ஆனால் இன்று கைப்பிரதிகளை வினியோ கிக்கும் எண்ணற்ற விசுவாசிகளின் மனநிலை, அந்த அவிசுவாசிகளை ஆக்கினைக்குள் தீர்ப்பதாகவே இருக்கிறது! விசுவாசிகள் தங்கள் மனசாட்சியை சமாதானப்படுத்தும் சுயநல நோக்கத்தோடு இதைச் செய்தார்களே அல்லாமல், பாவிகளாகிய ஜனங்களை இரட்சகரின் பாதங்களுக்கு கொண்டு வரவேண்டுமே! என்ற மனபாரம் அல்லவே அல்ல! இவ்வாறு கைப்பிரதி வினியோகம் செய்பவர்கள், பாவிகள் மீது தங்களுக்கு கரிசனை இருப்பதுபோல் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் அப்படி இல்லவே இல்லை! அவர்கள், பரிசேயர்கள் மாத்திரமே!!*

## குணாதிசயம் -49

**தேவனுடைய வார்த்தையைக் காட்டிலும், தங்கள் பாரம்பரியங்களுக்கே பரிசேயர்கள் அதிக மதிப்பு கொடுத்தார்கள்:**

*இயேசு பரிசேயர்களை நோக்கி "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தை கைக்கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினீர் கள்!" என்றார். ( மாற்கு. 7:9).*

*எல்லா சபைகளிலும் ஏதாகிலும் ஒரு விதத்தில் பாரம்பரியங்களை வைத்திருக்கிறார்கள். அந்த பாரம்பரியங்கள், தேவனுடைய வார்த்தை யைவிட உங்களுக்கு அதிக முக்கியமாய் இருந்தால், நீங்களும் ஒரு பரிசேயன்தான்!! இவ்வாறு, அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் காட்டிலும் தங்களுடைய பாரம்பரியங்களை உயர்த்தியபடியால் 1) தேவனுடைய கட்டளையை தள்ளி விட்டார்கள் 2) அவைகளை (ஒதுக்கி வைத்து) வியர்த்தமாக்கினார்கள். முடிவில், வேத வசனத்தை அவமாக்கி விட்டார்கள்! என்றே பரிசேயர்களிடம் இயேசு கூறினார் (மாற்கு. 7:8-13).*

*இதுபோன்ற குற்றத்திற்கு நம்மில் யாரேனும் உட்பட்டிருக் கிறோமா? என்ற கேள்வியை நாம் யாவரும் நம்மை நாமே கேட்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. தேவனை உங்கள் முழு இருதயமாய் நேசிப்பதையும், உங்கள் சக விசுவாசிகளை (எல்லா ஸ்தாபன மக்களை) இயேசு உங்களை நேசிப்பதுபோல் நேசிப்பதைவிட, உங்கள் பாரம் பரியங்கள் அதிக முக்கியமாய் உங்களுக்கு மாறிவிட்டதோ? உங்கள் சபை பாரம்பரியங்களை ஒருவர் கைக்கொள்ளாதபடியால், ஒரு தேவனுடைய பிள்ளையை நீங்கள் புறக்கணிக்கிறீர்களா? அப்படி யானால் நீங்களும் ஒரு பரிசேயன்தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!*

## குணாதிசயம் -50

**பரிசேயர்கள் தங்களைத் தாங்களே நீதிமான்களாக்கி கொள்கிறார்கள்:**

*இயேசு பரிசேயர்களை நோக்கி "நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக் கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்றார் (லூக்கா 18:15).*

எந்த சூழ்நிலையானலும் பரிசேயர்கள் தங்களையே நீதிமான் களாக கருதுவார்கள். ஒரு பரிசேயன், தன் தவறுகளை உணர்ந்து தன் பாவத்தினிமித்தம் வந்த பலியை தன்மேல் சுமந்துகொள்ள தாழ்மை கொண்டிருக்க மாட்டான்.

தன் பாவத்தினிமித்தம் ஏற்பட்ட பலியை தன்மீது ஏற்றுக்கொள்ள ஆதாமால் முடியவில்லை. "இந்த மரத்தின் கனியை புசித்தாயா?" என தேவன் கேட்டார். அதற்கு நேர்மையான ஒரே பதில் "ஆம் ஆண்டவரே" என்பதுதான். ஆனால் ஆதாம் அப்படிச் சொல்லவில்லை. தனக்கு கனியை கொடுத்த தன் மனைவியையே அவன் முதலாவதாக குற்றம் சுமத்தினான் (ஆதி.3:12). ஒருவன் தன்னையே நியாயப்படுத்துவதன் பொருள் இதுதான். அதன் விளைவாய், பரதேசீயிலிருந்து ஆதாம் துரத்தப்பட்டான்.

ஆனால், சிலுவையிலிருந்த ஒரு கள்வன் இரட்சிக்கப்பட்ட விதமோ இதற்கு நேர் எதிராக இருக்கிறது. அவன் சொன்னான் "நாமோ நியாயப்படிதான் தண்டிக்கப்படுகிறோம் (லூக்கா 23:41) எனக் கூறினான். தன்னை மோசமாய் வளர்த்த தன் பெற்றோரையோ அல்லது தன்னை வழி தவறும்படி நடத்திய தன்னுடைய நண்பர்களையோ அல்லது தனக்கு காய்மாரமாய் தீர்ப்பளித்த நீதிபதியையோ அல்லது அவரது ஓர-வஞ்சகமான கடினமானத் தீர்ப்பையோ அவன் குறை கூறவேயில்லை. அவன் கூறியதெல்லாம் "இந்த தண்டனைக்கு நான் முற்றிலும் பாத்திரன்!" என்பது மாத்திரமே. இதன் விளைவாய், அந்த நாளில்தானே அவன் இயேசுவோடு பரதேசீக்குச் சென்றான்! யாரெல் லாம் தங்கள் சொந்த பாவத்தின் பலியை தன்மீது ஏற்றுக் கொண்டு, பிறரை குற்றம் சாட்டாதிருக்கிறார்களோ, அவர்களுக்காகவே பரதேசீ உருவாக்கப்பட்டுள்ளது!

உங்களை நியாயப்படுத்துவதற்காக உங்கள் மனைவியையோ அல்லது தேவனையோ அல்லது வேறு எந்த நபரையோ நீங்கள் குற்றப்படுத்துவீர்களானால், நீங்கள் ஒரு பரிசேயன்! நரகத்தின் வழியிலேயே நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள்!!

பரிசேயர்களுக்கு இயேசு கொடுத்த இறுதியான வார்த்தைகள் மிகவும் பயங்கரமானதாகும். அவர்களைப் பார்த்து "சர்ப்பங்களே,

*விரியன் பாம்பு குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படி தப்பித்து கொள்வீர்கள்?" (மத்தேயு. 23:33) என்றே கடிந்து கூறினார்.*

*"அசைவில்லாத இராஜ்ஜியத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக் கொள்ளக்கடவோம்! நம்முடைய தேவன் பட்சிக்கின்ற அக்கினியாய் இருக்கிறாரே! சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது!!" (எபி.12:28* to *13:1) என வாசிக்கிறோம்.*

*பரிசேயத்துவம் என்பது, நமது தோலில் ஏற்பட்டு புண்ணாகிப் போன ஒரு கட்டியில் இருக்கும் "சலத்திற்கு" ஒப்பாகவே இருக்கிறது. ஒவ்வொருநாளும் சலத்தை நீங்கள் பிதிக்கி.... பிதிக்கி, அது சுகமாகும் வரை 'சலம்' வந்து கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். ஆகவே "பரிசேயத்துவம்" அனைத்தும் நம்மை விட்டு நீங்கும் வரை, அதை நாம் பிதிக்கி எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்!!*

*இப்போது நாம் நேர்மையாக அறிக்கை செய்ய ஆயத்தமா?* **"ஆண்டவரே, நானே குற்றவாளி! என் கணவனோ அல்லது என் மனைவியோ, என் சகோதரனோ அல்லது என் சகோதரியோ, அல்லது வேறு எவருமோ பரிசேயர்கள் அல்ல.... நானே பரிசேயன்! நான் ஒரு பக்தியுள்ள மனிதனாகவும் உம்முடைய சீஷனாகவும் திகழ்ந்திட ஏற்ற கிருபையை எனக் குத் தந்தருளும்! நீர் என்னிடம் இரக்கமுள்ளவராய் இருக்கிறது போலவே, நானும் பிறரிடம் எந்த சமயத்திலும் இரக்கமாய் இருந்திட எனக்கு உதவி புரிந்தருளும்!!"**

*இதே வழியில் நம் ஜீவகாலமெல்லாம் நடந்துவர கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக! அதன் மூலமாய், அவருடைய இராஜ்ஜியத்திற்குள் நாம் ஒரு நாள் சம்பூரண பிரவேசம் கண்டிட அருள்புரிவாராக!*

*ஆமென், ஆமென்!*